பக்கங்கள்: 20 விலை: 30.00

# தீம்புனல்
THEEMPUNAL

வாராந்தப் பத்திரிகை

தீ : 01 புனல்:16 14.08.2021 சனிக்கிழமை வள்ளுவர் ஆண்டு 2052

Get Healthy With JK's Certified Trainers
• Weight Control
• Personal Training
• Diet and Nutrition
• Cardio Training
• Fitness Program
• Group Training
JK Fitness
Unisex gym is highly recognized for improving people's lives through fitness since 2014.
For More Information
0772395819
The JK Fitness currently has 5 locations in the Greater Jaffna area.
Pointpedro Nelliyadi Kopay Avarangal Kodikamam

நா.தம்பித்துரை

# நெருக்கடியைச் சமாளித்து மீளும் வல்லமை அரசிடம் இருக்கிறதா?



## மக்களின் இயல்பு வாழ்க்கை கேள்விக்குள்ளாகிறது

பொருட்களுக்கு எந்தத் தட்டுப்பாடும் நிலவப்போவதில்லை தேவையான கையிருப்பு உண்டு என்று அரசு அறிவித்திருக்கும் நிலையில் நாட்டில் பல பொருட்களைக் கடைகளில் பெற்றுக் கொள்ள முடியாது இருப்பதோடு, இன்னும் பல பொருட்களை மக்கள் அதிக பணம் கொடுத்துக் கொள்வனவு செய்ய வேண்டிய நிலையிலும் இருக்கின்றார்கள். அங்கர் பால்மா, சமையல் எரிவாயு போன்ற பொருட்களை மக்கள் வாங்க முடியாத நிலையில் இருப்பதோடு, சீனி, அரிசி, பருப்பு, முதற்கொண்டு சவர்க்காரம் வரையிலான பொருட்களை நாளுக்குநாள் கடைகளில் விலை அதிகம் கொடுத்தே வாங்க வேண்டிய சூழ்நிலைக்கு உள்ளாகியிருக்கின்றார்கள்.




1

நேற்றைய விலையில் இன்று பொருட்களை வாங்க முடியாது இருப்பதோடு நாளை இன்றைய விலையில் பொருட்களை வாங்க முடியாது இருக்கும் நிலைமையும் உள்ளது. இந் நிலைமை ஆட்சியாளர் மீது மக்களை அதிருப்தியடைய வைத்திருக்கின்றது.

நாட்டினை சரியான வகையில் நிர்வகிக்க முடியாது என்றால் பதவியில் இருந்து விலகும்படி எதிர்க்கட்சியினர் ஆளும் தரப்பினை நோக்கி தங்களுடைய எதிர்ப்பினைத் தொடர்ந்தும் காட்டி வருகின்றனர். மக்கள், கொரோனா தொடர்பிலான அச்சம் மறுபக்கம் பொருட்களின் விலையேற்றம் மறுபக்கமென மிகப் பெரிய சவாலையும் எதிர்கொண்டு வருகின்றனர். போகின்ற போக்கைப் பார்த்தால் ▶19

# எதிர்வரும் நாட்களில்
## மரணக்காடாகப்போகும் இலங்கை



2

நாட்டை முடக்காதுவிடின் இலங்கை கொரோனாவின் தீவிரமான பிடிக்குள் அகப்படும் அபாயம் இருப்பதாக சுகாதாரத்துறையினர், மருத்துவ சங்கத்தினர் கடும் எச்சரிக்கைகளை அண்மைக்காலங்களாக விடுத்து வருகின்றனர். அண்மைய நாட்களில் அதிகரித்துவரும் கொரோனாத் தொற்றினையும் மரணங்களையும் கணக்கில் வைத்தே அவர்கள் அத்தகைய எச்சரிக்கைகளை விடுக்கின்றனர். இருந்த போதும் அரசு நாட்டை முடக்குவதா? அல்லது முடக்காது விடுவதா? என்ற இழுபறி நிலையிலேயே இன்னும் இருந்து வருவதாகத் தெரிகிறது.

நாளாந்தம் இலங்கையில் நூறைத்தாண்டிய மரணங்கள் நிகழ்ந்து வருகின்ற நிலையில் மக்களின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு அரசு பொருத்தமான நடவடிக்கைகளை எடுத்தேயாகவேண்டும் என்பதே எல்லோரதும் பொதுவான எதிர்பார்ப்பாக இருக்கிறது. ஆனால் மீண்டும் நாட்டை முடக்கத்துக்குக் கொண்டுவந்தால் நாட்டின் பொருளாதாரம் மேலும் பல நெருக்கடிகளுக்குள்ளாகும் என்ற அச்சத்தில் அரசாங்கமும் நாட்டினைப் பொது முடக்கத்துக்குள் கொண்டு வர அச்சப்படுகிறது. இந்நிலையில் மக்கள் தங்களது பாதுகாப்பினைத் தாங்களே கவனத்தில் கொள்ள ▶19




3

# தீர்வு கிட்டும்வரை போராட்டம் தொடரும்
## ஆசிரியர்களின் போராட்டம் தீவிரமடைகிறது

ஏறத்தாழ ஒரு மாதம் கடந்த நிலையில் ஆசிரியர்கள் தங்களுடைய சம்பள முரண்பாட்டின் தீர்வினைக் கோரி பாடசாலைசார்ந்த செயற்பாடுகள் அனைத்தினையும் புறக்கணிப்புச் செய்து வருவதோடு நாடு முழுவதிலும் பலதரப்பு ஆர்ப்பாட்டங்களையும் முன்னெடுத்து வருகின்றனர். இன்றைய நிலையில் இத்தகைய போராட்டத்தினை மேற்கொள்வது சரியா? தவறா? என்ற வியாக்கியானங்களை மக்கள் மேற்கொண்டு வருகின்ற ▶19

‘பேசாப் பொருளையும் பேசும் குரல்’

# சீனா அரசுக்கும் தலிபான் அமைப்புக்குமிடையிலான நெருக்கம்

## ஆப்கானிஸ்தானில் ஆட்சிமாற்றத்தை சாத்தியப்படுத்துமா?

லக்சனா பாலகுமாரன்



ஆப்கானிஸ்தானிலுள்ள அமெரிக்கப் படைகள் ஆகஸ்ட் மாத இறுதிக்குள் முழுமையாக வெளியேறும் என எதிர்பார்க்கப்படுகின்றது. கிட்டத் தட்ட அதே காலகட்டத்தில் தற்போதைய ஆப்கான் அரசு கவிழ்க்கப்பட்டு தலிபான்கள் தலைமையில் புதிய ஆட்சி அமையும் என அமெரிக்கப் புலனாய்வு துறை கணித்துள்ளது. தோஹாவில் அமைதிப் பேச்சு வார்த்தை நடைபெற்று வந்தாலும் போர் நிறுத்தம் குறித்தோ அதிகாரப் பகிர்வு குறித்தோ இதுவரை எவ் வித இறுதி முடிவும் எடுக்கப்படவில்லை. இந்த சூழ்நி லையில், தலிபான்கள் குழு சீனாவிற்கு சென்றுள்ளது. அதாவது ஜூலை 28 ஆம் திகதி அன்று சீன மாநில கவுன்சிலரும் வெளியுறவு அமைச்சருமான வாங்ஃயி ஒன்பது ஆப்கானிஸ்தான் தலிபான் பிரதிநிதிகள் குழு வின் இணை நிறுவனர் மற்றும் துணைத் தலைவர் முல்லா அப்துல் கனி பரதர் உட்பட உயர்மட்டத் தலைவர்களு டன் ஒரு சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

ஆப்கானிஸ்தானில் தலிபான்களின் ஆதிக்கம் அதிகரித்து வரும் நிலையில், திடீர்ப் பயணமாக ஒன்பது பேரைக் கொண்ட தலிபான் குழு சீனாவிற்குச் சென்றுள்ளது. அந்நாட்டின் வெளியுறவு அமைச்சர் வாங்ஃயி ஐ சந்தித்த தலிபான்கள் குழு, ஆப்கானில் போரை முடிவுக்கு கொண்டு வருவது, வளர்ச்சி உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து ஆலோசித்துள்ளது. எனவே இக்கட்டுரை தலிபான்களின் சீனாப் பயணம் மற்றும் ஆப்கானிஸ்தானின் விவகாரத்தில் சீனா செலுத்தவுள்ள பங்கு தொடர்பாகவும் தேடுவதாக அமைந்துள்ளது.

> **சீனா எப்போதும் எங்களுக்கு நல்ல நண்பன். உய்குர் முஸ்லீம் களுக்கும், அமைப்புக்களுக்கும் ஆதரவாக நாங்கள் இயங்க மாட்டோம். அவர்களை ஆப்கா னிஸ்தானுக்குள் அனுமதிக்க மாட்டோம். சீனாவுடன் உறவை நாங்கள் மேம்படுத்துவோம். விரைவில் பேச்சுவார்த்தையை தொடங்குவோம் என்று தலி பான் தெரிவித்துள்ளது.**

இச்சந்திப்பின் போது கருத்து வெளியிட்ட சீன வெளியுறவுத் துறை அமைச்சர் வாங்ஃயி கூறுகையில் “எதிர்காலத்தில் ஆப்கானிஸ்தானில் தலிபான்களின் பங்கு முக்கியமானதாக இருக்கப் போகின்றது. மேற்குச் சீனாவிலுள்ள ஜின்ஜியாங் பிராந்தியத்தில் செயல்படும் கிழக்கு துருக்கிஸ்தான் இஸ்லாமிய அடிப்படை வாதிகளை ஒடுக்கவும் தலிபான்கள் உரிய நடவடிக்கை எடுப்பார்கள் என நம்புகிறோம்” என்று அவர் குறிப் பிட்டார். சீன பயணம் குறித்து தலிபான்கள் கூறு கையில் “அரசியல், பொருளாதாரம், இரு நாடுகளின் பாதுகாப்பு மற்றும் ஆப்கானிஸ்தானின் தற்போதைய நிலைமை உள்ளிட்டவை குறித்து இதில் முக்கியமாக விவாதிக்கப்பட்டது. முன்னதாக ஆப்கானிஸ் தானுக்கான சீனத் தூதரைச் சந்தித்து ஆலோசித்தோம். அதன் பிறகு எங்களுக்கு முறையான அழைப்பை அவர்கள் விடுத்தனர். அதன் பின்னரே தற்போது தலிபான்கள் குழு சீனா சென்றுள்ளது என்றார்.

தலிபானின் அரசியல் செய்தித் தொடர்பாளர் சுஹைல் ஷாஹீன் செய்தியாளர்களிடம் பேசுகையில் “கடந்த நாற்பது ஆண்டுகளில் பெரும்பாலான காலம் ஆப்கானிஸ்தான் மக்கள் மிகக் கடுமையான துன்பத்தை எதிர் கொண்டுள்ளனர். நாட்டை மீண்டும் கட்ட மைக்கச் சீனா, பாகிஸ்தான் மற்றும் அனைத்து நாடுக ளின் உதவியும் தேவை. அடுத்து ஆப்கானிஸ்தானில் அமையவிருக்கும் அரசு ஒத்துழைப்பை வழங்கும் ஒரு களமாக இருக்க வேண்டும் என்பதே எங்கள் விருப்பம் என்று தெரிவித்தார். மேலும் 1996 - 2001 ஆம் ஆண்டுகளைப் போல இல்லாமல் இந்த முறை எல் லைகளை வலுப்படுத்துவதில் தலிபான்கள் அதிகம் கவனம் செலுத்துகின்றது. பாகிஸ்தான் மற்றும் சீன எல்லையில் அமைந்துள்ள பகுதிகளை தலிபான்கள் கைப்பற்றியுள்ளன. “சீனாவிற்கு எதிரான நடவடிக்கை களை எடுக்க ஆப்கானிஸ்தான் பகுதிகளை ஒருபோதும் எந்த நாட்டிற்கும் பயன்படுத்த விடமாட்டோம் என்று சீனாவிற்கு உறுதியளிக்கப்பட்டுள்ளது.” என்று தலி பான் செய்தித் தொடர்பாளர் முகமது நயீம் தெரிவித் துள்ளார். ஆப்கானிஸ்தானின் பிரச்சினைகளில் சீனா தலையிட மாட்டாது. ஆனால் நாட்டில் பிரச்சி னைகளைத் தீர்க்கவும், அமைதியை மீட்டெடுக்கவும் உதவும் என்றும் நயீம் தெரிவித்துள்ளார்.





ஆப்கானிஸ்தானிலிருந்து அமெரிக்கா வெளியேறிய நிலையில், தலிபான் படைகள் ஆப்கானிஸ் தானை மீண்டும் கைப்பற்றி வருகிறது. கடந்த இரண்டு வாரங்களில் ஆப்கானிஸ்தானில் 85% மான இடங்களை ஆக்கிரமித்து விட்டோம் என்று தலிபான் அறிவித்துள்ளது. இந்த நிலையில் ஆப்கானிஸ்தானில் தலிபான் ஆட்சிக்கு வந்தால் அங்கு மீண்டும் அல்கொய்தா அமைப்பிற் கும் இடம் கிடைக்குமா? என்று அச்சம் எழுந்துள்ளது. அமெரிக் காவை விட சீனாவைத் தான் இது அதிக அச்சத்திற்கு உள்ளாக்கியது. ஏனென்றால் அல்கொய்தா அமைப்பு கிழக்கு தர்கிஸ்தான் இஸ்லாமிய மூவ்மெண்ட் (East Turkistan Islamic movement – ETIM) என்ற அமைப்பிற்கு ஆதர வாக செயல்பட்டு வருகி றது. இந்த ETIM அமைப்பு சீனாவின் உய்குர் முஸ்லீம் களுக்கு ஆதரவானது. சீனாவின் கட்டுப்பாட்டி லுள்ள ஜிங்ஜியாங் பகுதி யில் சீனாவின் ஆதிக்கத்தை தடுத்து உய்குர் இஸ்லா மியர்களுக்கு அங்கு தனி நாடு ஏற்படுத்தும் முயற் சியில் இந்த அமைப்பு உள்ளது. இந்த அமைப் பிற்குத் தலிபான் ஆதரவாக இருக்குமோ என்ற அச்சம் நிலவுகிறது. இந்த நிலை யில் தான் தலிபான் வளர்ச்சியை கட்டுப்படுத்த வேண்டும். தலிபான் இது தொடர்பாக வெளியிட்ட செய்திக் குறிப்பேட்டில் சீனா எப்போதும் எங்களுக்கு நல்ல நண்பன். உய்குர் முஸ்லீம்களுக்கும், அமைப்புக்களுக்கும் ஆதரவாக நாங்கள் இயங்க மாட்டோம். அவர்களை ஆப்கானிஸ்தானுக்குள் அனுமதிக்கமாட்டோம். சீனாவுடன் உறவை நாங்கள் மேம்படுத்துவோம். விரைவில் பேச்சுவார்த்தையை தொடங்குவோம் என்று தலிபான் தெரிவித்துள்ளது. தலிபான் இந்த அறிவிப்பு உய்குர் இஸ்லாமியர்களிற் கிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. தலிபான் உதவியுடன் ஜிங்ஜியாங் பகுதியிலிருந்து வெளியேறி ஆப்கானிஸ்தானிலிருந்து குடியேறலாம் என்ற நம்பிக்கையில் அவர்கள் இருந்திருக்கலாம். ஆனால் தலிபான்களின் இந்த அறிவிப்பு அவர்களுக்குப் பெரிய ஏமாற்றம் அளித்துள்ளது.

தலிபான் உறுப்பினர்கள் சீனாவிற்கு செல்வது இது முதல் முறை அல்ல. ஆனால் இந்தச் சந்திப்பு மற்றும் இச்சந்திப்பில் இரு தரப்பினர் சார்பில் பங்கேற்ற உயர்மட்ட அரசியல் தலைவர்கள், அரசியல் செய்திகள் என்பன இச்சந்திப்பு பற்றிய முக்கியத்துவத்தினை அதிகரித்தன. குறிப்பாக ஆப்கானிஸ்தானில் தலி பான்களை ஒரு சட்டபூர்வமான அரசியல் சக்தியாக அங்கீகரிக்க வாங் இந்தச் சந்திப்பைச் சிறப்பாக பயன் படுத்தியுள்ளார். இது ஆப்கானிஸ் நாட்டின் எதிர்கால வளர்ச்சிக்கு முக்கிய பங்கினை ஆற்றும் என அரசியல் ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள்.

எனினும் இச்சந்திப்பு தொடர்பான விவரங்களை ஆராய்ந்து பார்க்கும் போது இருநாடுகளுக்குமிடையில் மிக நெருங்கிய உறவு ஒன்று எதிர்காலத்தில் உறுதியாக ஏற்படுத்தப்படுவதற்கான சந்தர்ப்பங்கள் பலவீனமா கவே காணப்படுகின்றன. காரணம் தலிபான்கள் எப்போதுமே மிதமானவர்களாக இருப்பார்களா? என்ற சந்தேகம் உள்ளமையால் இது சீன அதிகாரிகளின் கருத்து மற்றும் அமைப்பின் மீதான கொள்கையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

சீனாவின் பெல்ட் அண்ட் ரோட் (Belt and Road) திட்டத்திற்கும் பிராந்திய பொருளாதார ஒருங் கிணைப்பு முயற்சிக்கும் ஆப்கானிஸ்தான் சீனாவிற்கு முக்கியமானதொன்றாகக் காணப்பட்டாலும் நீண்ட காலமாக போரினால் பாதிக்கப்பட்டுள்ள ஆப்கா னிஸ்தான், நாட்டிற்குள் நுழைவதற்கு சீனா சிறிதளவு தயக்கம் கொண்டுள்ளது. காரணம் ஆப்கானிஸ்தான் மீதான சீனாவின் முன்னைய முதலீடுகள் பாரிய நஷ்டத்தினை எதிர்நோக்கியிருக்கிறது.

எனினும் தலிபான்கள் ஆப்கானிஸ்தானின் புனர மைப்பில் சீன முதலீட்டை வெளிப்படையாக வரவேற் றுள்ளதோடு சீனாவிலிருந்து முதலீட்டாளர்கள்

(18 ஆம் பக்கம் பார்க்க)

"அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்"

கனகசபை கட்டடத் தொகுதி,
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
தொ.பே.: 021 226 2564
www.theempunal.lk
news@theempunal.com

தீம்புனல் THEEMPUNAL

# இப்போது நாட்டுக்குத் தேவை கட்டாய முடக்கமே!

நாட்டை அச்சுறுத்திக் கொண்டு இருக்கும் கொரோனா வைரஸின் தாக்கத்தினைக் கட்டுப்படுத்துவதில் ஏற்படும் தாமதம் பல்லாயிரக் கணக்கான உயிர்களைக் காவு கொள்ளப்போகின்றது என்ற அச்சம் ஏற்படத் தொடங்கியிருக்கிறது. மருத்துவத்துறையினர், சுகாதாரத்துறையினர் மற்றும் பொது அமைப்புக்கள் எல்லாம் ஒருமித்த குரலில் நாட்டை முடக்குவதற்கான அவசியம் தொடர்பில் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர். இந்நிலையில் ஊரடங்கை உடனடியாக அறிவித்தால் இருபது நாட்களில் 1200 உயிர்களைக் காப்பாற்ற முடியும் எனவும் 5 நாட்கள் தாமதமானாலும் அது 700 பேரின் விருப்பமில்லாத மனிதக் கொலையாகலாம் என்றும் அண்மைக்கால இலங்கையின் கொரோனா புள்ளிவிபரங்களை அடிப்படையாகக் கொண்டு இராஜரட்டைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் சுனேத் அகம்பொடி தனது ருவிட்டர் பக்கத்தில் கணிப் பொன்றை வெளியிட்டுள்ளார். இவரது கணிப்பு உண்மையில் நாட்டில் கொரோனா இறப்பின் அதிகரிப்பினையும், கொரோனா தொடர்பில் நாங்கள் ஒவ்வொரு வரும் சரியான வகையில் சிந்தித்துச் செயற்படவில்லை என்ற வெளிப்பாட்டினையும் விளக்குவதாக உள்ளது.

நாளுக்கு நாள் தொற்றாளர்களின் எண்ணிக்கையும் மரணமடைபவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்து வரும் நிலையில் அடுத்து என்ன செய்வது என்று தெரியாது மக்களும் அரசும் திண்டாடி வருகின்ற நிலைமையினை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இன்னும் தொடர்ந்து வரப்போகும் காலம் மிகவும் அச்சத்துக்கும் ஆபத்துக்கும் உரியது என்று மருத்துவ சங்கம் கருத்துக்களை வெளியிட்ட வண்ணமும் நாட்டினை உடனடியாக முடக்கவேண்டிய அவசியத்தினையும் தெரிவித்த வண்ணமும் இருக்கின்றது. ஆனால் அவ்வாறு செய்வதற்குரிய அதிகாரம் அரசிடம் மட்டுமே உண்டு. அரசு,நாடு பொருளாதாரத்தில், படுபாதாளத்துக்குச் சென்றிருக்கும் நிலையில் மீண்டுமொரு முடக்கத்தினை கொண்டுவந்தால் முற்று முழுதாக நாடு பொருளாதார ஆபத்துக்குள் மூழ்கிப் போகும் நிலை ஏற்படும் என்ற அச்சத்தில் என்ன செய்வது என்று தெரியாமல் உறைந்துபோய் இருக்கின்றது. நாட்டில் எதிர்கட்சியிலிருந்து பல்வேறு தரப்பினரும் நாட்டு மக்களைக் காப்பாற்ற வேண்டும் என்ற சிந்தனை அரசுக்கு இருந்தால் உடனடியாக நாட்டை முடக்கத்துக்குக் கொண்டுவந்தே ஆகவேண்டிய கட்டாய நிலைமை உண்டு என்பதனை ஒவ்வொருநாளும் வெளிப்படுத்தி வருகின்றனர்.

தற்போதைய மக்களின் நாளாந்தச் செயற்பாடுகளைப் பார்க்கும் போது நாட்டினை முடக்காமல் அவர்களைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரமுடியாது என்பதும் தெளிவாகின்றது. விழாக்களை நடத்துவதிலும் கொண்டாட்டங்களை விமர்சையாக கொண்டாடுவதிலும் அவர்கள் காட்டும் ஆர்வம் கொரோனாவில் இருந்து தங்களைப் பாதுகாப்பதில் இல்லாமல் இருப்பது வேதனையளிக்கின்றது. இன்றைய ஆலயக் கொண்டாட்ட காலத்தில் ஆலயங்களில் மேற்கொள்ளப்படும் வழிபாட்டு முறைகள் அங்கு கூடும் மக்களின் திரள்கள் நாட்டை சின்னாபின்னமாக்கப்போகும் குறிகாட்டியாக அமைவதாகத் தென்படுகின்றன. இந்நிலையில் அத்தகைய திருவிழாக் கொண்டாட்டங்களை தவிர்ப்பது எல்லோரையும் பாதுகாப்பதற்குரிய முன்நடவடிக்கையாக இருக்கும் என்பதனை மக்கள் ஒவ்வொருவரும் புரிந்து கொள்ள வேண்டும்.

சில ஆலயங்களில் மிகுந்த கட்டுப்பாட்டுடன் திருவிழாக்கள் நடைபெறுவதாகவும் மிகக் குறைந்த பக்தர்களுடன் ஆலயவழிபாட்டு நிகழ்ச்சிகள் மேற்கொள்வதாகவும் அறியக்கிடைக்கின்ற போது கொரோனா தொடர்பிலான விழிப்புணர்வு ஏற்பட்டு வருகின்றமை மகிழ்ச்சியளிப்பதாக அமைந்தாலும் எல்லா இடங்களிலும் இந் நடைமுறையினைப் பின்பற்றக் கூடிய ஒழுங்குமுறைகளை சம்பந்தப்பட்டவர்கள் மேற்கொள்ள வேண்டும். அதேநேரம் அவசியமற்ற பயணங்களைத் தவிர்த்துக் கொள்வது, அவசியமற்ற கூட்டங்களைத் தவிர்த்துக் கொள்வது போன்ற செயற்பாடுகளையும் வலுப்படுத்தவேண்டும். அவ்வாறு செயற்படுகின்றபோது ஓரளவு கொரோனாத் தொற்றினைக் கட்டுப்படுத்த முடியும் என்பது பொதுவான எதிர்பார்ப்பாக இருக்கின்றது.

இருந்தாலும் இன்று சுகாதாரத்துறையினர், மருத்துவத்துறையினர் தெரிவிக்கும் கருத்துக்களை நோக்கும் போது மக்கள் சுயகட்டுப்பாட்டுடன் இருக்கும் பக்குவத்தில் இல்லை என்பதும் நாடு இவ்வாறு திறந்திருக்கும் நிலையில் அவர்கள் தங்களது அன்றாடச் செயற்பாடுகளைச் செய்தவண்ணமேதான் இருப்பார்கள் என்பதும் தெளிவாகின்றது. இந்நிலையில் தான் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் நாட்டை முற்றாக முடக்க வேண்டிய அவசியம் உள்ளதாக அவர்கள் தெரிவித்து வருகின்றனர்.

கொரோனாக் கால நிலவரத்தின்படி களத்தில் நின்று வேலை செய்பவர்களின் கருத்துக்கு செவிசாய்க்க வேண்டியது அரசுக்கு அவசியமாகின்றது. அவர்களின் கருத்துக்களையும் ஆலோசனைகளையும் கவனத்தில் எடுக்காததன் காரணமே இன்று கொடும் கொரோனா அனர்த்தத்திற்கு நாடு முகம் கொடுக்க வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. அவர்கள் நாட்டை முடக்கச் சொன்ன காலத்தில் முடக்கியிருந்தால் பல உயிர் இழப்புக்களைத் தவிர்த்திருக்க முடியும். நாளாந்தம் நூற்றுக்கு அதிகமான உயிர் இழப்புக்களைச் சந்தித்துவரும் சூழ்நிலையில் உடனடியாக அரசு பொருத்தமான முடிவினை எடுக்கவேண்டிய கட்டத்துக்குள் உள்ளது. இனியும் தனது நடவடிக்கையினைத் தாமதப்படுத்தும் என்றால் எப்போதுமே கட்டுப்படுத்த முடியாது தொற்றுக்களையும் உயிர் இழப்புக்களையும் சந்திக்கவேண்டிய இக்கட்டான கட்டத்துக்கு முகம் கொடுக்க வேண்டியேற்படும்.

இராணுவ அதிகாரிகள் மற்றும் அரச தரப்பினர் சொல்வது போல் நாட்டில் உள்ளவர்கள் அனைவருக்கும் தடுப்பூசி போட்டால் கூட இவ் இறப்புக்களைக் கட்டுப்படுத்த முடியும் என்று தோன்றவில்லை. கடந்த வெள்ளிக்கிழமை வரையிலான கணிப்பின்படி தடுப்பூசி ஏற்றிக் கொண்டவர்களில் 193 பேரைக் கொரோனா காவு வாங்கியதாக அறிய முடிகின்றது.

இவ்வாறு யோசிக்கும் போது மக்களை காப்பாற்றுவதற்கு நாட்டில் அவசரமான பொதுமுடக்கம் தேவை. அந்தப் பொது முடக்கத்துக்கு நாட்டின் அவசரநிலை புரிந்து மக்கள் செயற்படுவதும் அவசியம். அவ்வாறு இல்லாமல் போனால் யார் யாரையெல்லாம் காணமுடியாது போகுமோ என்ற அச்சம் தோன்றுகிறது. ■

---

# சம்பள முரண்பாட்டுப் போராட்டமும் விமர்சனங்களை எதிர்கொள்ளலும்

தந்திரன்

ஆசிரியர்கள் அதிபர்களுக்கு சம்பள முரண்பாடு உண்டு என ஜனாதிபதி ஏற்றுக்கொண்ட நிலையில் அதனை ஆராய்வதற்கு ஐந்து அமைச்சர்களைக் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்கள் அதிபர்கள் கொரோனாவின் பேரிடர் கருதி ஒரு மாதத்தின் பின்னர் போராட்ட வடிவத்தினை மாற்றியுள்ளார்கள். கடந்த வியாழக்கிழமை முதல் கொழும்பில் சத்தியாக்கிரக நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார்கள். அதாவது தமது போராட்டத்தினை நிறுத்தாமல் தீர்வு எட்டும்வரை போராட்ட வடிவத்தினை மாற்றியுள்ளார்கள்.

"அரசாங்கம் பணம் வைத்திருந்தால் ஆசிரியர்களின் சம்பள முரண்பாகளை தீர்ப்பார்கள்தானே". "கொரோனா காலத்தில் ஆசிரியர்கள் அதிபர்கள் ஆர்ப்பாட்டங்கள் பேரணிகளில் கலந்து கொள்வது அல்லது நடாத்துவது சரியா?" "ஆசிரியர்கள் குறைந்த நாட்கள்தானே கடமையாற்றுகிறார்கள், அவர்களுக்கு ஏன் சம்பளத்தை அதிகரிக்க வேண்டும்."

"ஆசிரியர்கள் அதிபர்களின் போராட்டங்களால் மாணவர்களின் கல்வி பாதிப்படைகின்றது." என்று பல்வேறு விமர்சனங்கள் இன்று பல மட்டங்களிலும் எழுந்த வண்ணம் உள்ளது.

"அரசாங்கம் பணம் வைத்திருந்தால் ஆசிரியர்களின் சம்பள முரண்பாடுகளை தீர்ப்பார்கள்தானே". என்று விமர்சனங்களை முன்வைப்பவர்களுக்கு இக்கட்டுரையாளர் சொல்ல முனைவது என்னவென்றால், ஆசிரியர்கள் அதிபர்களுக்கு சம்பள முரண்பாடு உள்ளது என்பதனை அரசாங்கம் கூட ஏற்றுக் கொண்டுள்ளது. இலங்கை ரூபாவில் 5600 கோடிகள் தேவை இதனை அரசாங்கத்தினால் தற்போதைய பொருளாதார நெருக்கடியில் உடனடியாக தீர்க்க முடியாது என்பதனை போராட்டகாரர்களும் நன்றாகவே உணர்வார்கள். அவர்கள் வேண்டுவதெல்லாம் எதிர்காலத்தில் மேற்கொள்ளவிருக்கும் எமக்கான தீர்வினை எழுத்து மூலம் தாருங்கள் என்பது மட்டும்தான்.

"கொரோனா காலத்தில் ஆசிரியர்கள் அதிபர்கள் ஆர்ப்பாட்டங்கள் பேரணிகளில் கலந்து கொள்வது அல்லது நடாத்துவது சரியா?" என விமர்சிப்பவகளுக்கு, அண்மையில் மலையகத்தின் டயகம பிரதேச சிறுமி ஹிஷாலினியின் மரணத்திற்கு தீர்வு வேண்டி பல்வேறு ஆர்ப்பாட்டங்களும் நடைபவனிகளும் இடம்பெற்றன. இதற்கு எந்த விதமான எதிர்ப்புக்களோ விமர்சனங்களோ முன்வைக்கப்படவில்லை. இந்த மனிதாபிமான செயற்பாடுகளுக்கு ஆதரவு அளிக்க வேண்டியது அனைவரதும் கடமையாகும். அதே போன்று அதிபர் ஆசிரியர்களின் நியாயமான போராட்டத்துக்கும் விமர்சனங்கள் கடந்து ஆதரவு தாருங்கள் என்பது மட்டும் தான்.




இன்னும் சிலர் "ஆசிரியர்கள் வருடத்தில் குறைந்த நாட்கள்தானே கடமையாற்றுகிறார்கள் அவர்களுக்கு ஏன் சம்பளம் அதிகரிக்கப்பட வேண்டும்." என்று விமர்சனத்தினை முன்வைக்கிறார்கள். இது காழ்ப்புணர்வின் மத்தியில் முன்வைக்கப்படுகின்ற விமர்சனம் ஆகும். தற்பொழுது ஆசிரியர்கள் கற்றல் கற்பித்தலில் ஈடுபடுவது மட்டுமன்றி பல்வேறு மேலதிக கடமைகளையும் ஆற்றுகின்றனர். அதனை விட பாடசாலைகளில் மட்டுமன்றி கற்றல் கற்பித்தல் தொடர்பாக வீடுகளிலேயே அதிகளவான ஆயத்தப்படுத்தல்களில் ஈடுபடுகிறார்கள். இதனால் ஆசிரியர்களின் தியாக மனப்பான்மையையும் அவர்களின் வேலை நேரத்தினையும் குறைத்து மதிப்பிடலாகாது.

"ஆசிரியர்கள் அதிபர்களின் போராட்டங்களால் மாணவர்களின் கல்வி பாதிப்படைகின்றது." என்று கூறுகிறார்கள். ஆசிரியர்கள் போராட்டங்களில் ஈடுபடுகின்ற சமநேரத்தில் மத்திய கல்வி நிலையங்களின் ஊடாகவும் இணையங்களின் மூலமும் தமது கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளை மேற்கொண்ட வண்ணமே இருக்கிறார்கள். இவர்களின் இத்தகைய மனிதாபிமான செயற்பாட்டை விமர்சனத்தினை முன்வைப்பவர்கள் ஏன் விளங்கிக் கொள்கிறார்களில்லை.

எனவே ஆசிரியர்கள் அதிபர்களின் நியாயபூர்வமான கோரிக்கைகளை அனைவரும் ஏற்றுக் கொள்ள வேண்டும். அரசாங்கம் மக்களையும் மாணவர்களையும் தூண்டி கல்வித்துறை சார்ந்தவர்களின் மீது சேறு பூச முனையக் கூடாது. அத்தகைய சேறுபூச முனைவது அரசாங்கத்தின் மீதான - ஆட்சியாளர்களின் மீதான நம்பிக்கையின்மையையே ஏற்படுத்தும். ஆக, கொரோனா காலத்தில் மாணவர்களுக்கான கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளை இன்னொரு விதமாக ஆசிரியர்கள் முன்னெடுக்க, அரசாங்கமானது ஆசிரியர்கள் அதிபர்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற விரைந்து செயற்பட வேண்டும். ■

லம்பேர்ட்



# இது ஆட்டையைப் போடுகின்ற காலம்

இது எல்லாத்திலேயும் ஆட்டையைப் போடுகிற காலம். உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, ஐரோப்பிய ஒன்றியம், பிற வெளிநாட்டுக் கடன்களில் செய்கின்ற அபிவிருத்தி வேலைகளில் எல்லாம் ஆட்டையைப் போடுகிறார்கள். இதிலே மேல் மட்டத்திலிருந்து கீழ் மட்டம் வரையில் பல கைகளுக்கும் சம்மந்தமுண்டு. இது எப்பிடியிருக்கென்றால், பிச்சைக்காரனிடம் தட்டிப் பறிச்ச மாதிரியிருக்கு. கடன்வாங்கித்தான் அபிவிருத்தி வேலையே நடக்குது. அதற்குள்ளும் இப்படி ஊழல், முறைகேடு என்றால் நிலைமை எப்பிடியிருக்கும்? நாடு எப்பிடி உருப்படும்?

இதுதான் இப்படி என்று பார்த்தால், அரச உத்தியோக நியமனங்களிலும் ஆட்டையைப் போடுகிறார்கள். நியாயமான அடிப்படையில், தகுதிவாய்ந்தவர்களுக்கு வேலை வழங்குவதற்குப் பதிலாக தங்களுக்கு வேண்டிய ஆட்களுக்கும் கட்சிக்குத் தொண்டூழியம் செய்கின்ற விசுவாசிகளுக்கும் அதைப் பகிர்ந்து கொடுத்து விடுகிறார்கள். இந்தக் கலாச்சாரம் கடந்த பத்துப் பதினைந்து ஆண்டுகளாக நடந்து (வளர்ந்து) வருகிறது. இந்த விசுவாசிகள் ஒன்றும் நீண்டகாலத்துக்கு இவர்களோடு தாக்குப் பிடித்து நிற்பதும் இல்லை. தொடர்ந்து கட்சியோடு இணைந்து வேலை செய்வதுமில்லை. பாதிப்பேர் வேலை கிடைத்ததும் பின்பக்கத்தைக் காட்டி விடுவார்கள். ஆனாலும் சற்றும் தளராத விக்கிரமாதித்தியன்களாக இந்த அரசியல்வாதிகள் புதிய புதிய விசுவாசிகளைக் கண்டு பிடித்து அவர்களைப் பாழாக்கிக் கொண்டிருப்பார்கள்.

உடையாரின் திருவிழாவில் சடையர் வாணம் விடுவதைப்போல அரச நிதியில் - அரச உத்தியோக நியமனத்தில் தங்களுடைய சிபாரிசைச் செய்து விடுகிறார்கள். வேலை கிடைத்தவர்கள் அரசுக்கும் விசுவாசமில்லை. அமைச்சருக்கும் அரச பிரதிநிதிகளுக்கும் விசுவாசமாக இருப்பதில்லை. ஆகக் கூடியது ஒரு தேர்தலில் மட்டும் விரும்பியோ விரும்பாமலோ ஒரு கொஞ்சப் பேர் வாக்குப் போடுவார்கள்.

இந்த வாக்குப் பிச்சைக்காக எவ்வளவு பிழையான காரியங்கள் எல்லாம் நடக்கின்றன தெரியுமா?

இது போதாதென்று அரசாங்கத்துக்குச் சொந்தமான பெற்றோலியம் கோப்பிரேசன் காணிகளை ஆட்டையைப் போட்டு, அதில் தங்களுடைய பெற்றோல் செற்றை - எரிபொருள் நிரப்பு நிலையத்தை - கட்டி இயக்குகிறார்கள். யாழ்ப்பாணத்திலும் கிளிநொச்சியிலும் இப்படிப் பெற்றோலியம் கோப்பிரேசனுக்குச்சொந்தமான காணிகளை ஆட்டையைப் போட்ட அரசியல்வாதி ஒருவர் இருக்கிறார். தன்னுடைய பெயரில் எடுத்தால் காரியம் நோண்டியாகி விடும் என்று தன்னுடைய குடும்ப உறுப்பினர்களின் பெயரில் பதிந்து காணிகளை ஆட்டையைப் போட்டிருக்கிறார் இந்த ஆள். எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கான அனுமதிப் பத்திரத்தையும் எப்படியோ தந்திரமாக எடுத்து விட்டார்.

கடந்த தேர்தலில் இவருக்குத்தான் சனங்கள் அதிகூடிய விருப்பு வாக்கைப் போட்டிருக்கிறார்கள். ஏன் தெரியுமா? இப்படிக் காணிகளைச் சுருட்டக் கூடிய வேறு கெட்டிக்காரர்கள் யார் இருக்கிறார்கள்? என்று நினைத்தே.

நீங்கள் நினைக்க வேண்டாம், ஏதோ அம்பாந்தோட்டை ஆட்கள் வந்து குடும்ப ஆட்சியை கொழும்பிலே நடத்துகிறார்கள் என்று. அதே விளையாட்டு இங்கும் நடக்கிறது. தந்தை, மகன், சிறிய தந்தை, அவருடைய மனைவி என ஒரு பெரிய பட்டியல் நம்மிடம் உண்டு.

இதில் ஒரு எரிபொருள் நிரப்பு நிலையம் மட்டக்களப்பைச் சேர்ந்த முன்னாள் அமைச்சரான முஸ்லிம் பிரமுகர் ஒருவருக்கும் உண்டென்று தெரிகிறது.

இந்தக் கூத்துகள் ஒரு பக்கத்தில் இப்படியே நடக்குது என்றால், இப்ப லேற்றஸாக காணிச் சீர்த்திருத்த ஆணைக்குழுவின் (Land Reform Commission) கீழிருந்த காணிகளை யாழ்ப்பாணத்தில் ஒரு தலைமை அதிகாரி தன்ரை பாட்டுக்கு வித்து விளையாடிக்கொண்டிருக்கிறார். இந்த விற்பனை - லீஸிங் என்ற பெயரில் வெளிப்படையாகவும் அதற்கான ஏற்பாடு என்ற பேரில் ரகசியமாகவும் நடக்கிறது. கை மாற்றப்படும் பணம் கொஞ்ச நஞ்சமல்ல.

இப்படியே இவருடைய ஆட்டம் கட்டுக்கடங்காதது.

அமைச்சர்களுக்கும் ஆளும் தரப்புக்கும் எதிர்த்தரப்பு எம்பிமாருக்கும் ஒரே நேரத்தில் தண்ணி காட்டக் கூடிய, பலே கில்லாடிப் பேர்வழியே இந்த அதிகாரி.

இவரைக் கட்டுப்படுத்துவது எப்படியென்று ஒருவருக்குமே விளங்கவில்லை.

விசாரித்தால் கொழும்பிலே இருந்து உத்தரவு வந்தது என்று இங்கே கதை விடுவார்.

கொழும்பிலே இருந்து விசாரித்தால் அது இங்கே பிராந்தியத்தில் உள்ள அரசியற்தலைவர்களின் வேலை என்று அங்கே கதை சொல்வார்.

இப்படியே இங்கும் அங்குமாகக் கதை விட்டுக் கதை விட்டுத்தன்னுடைய காரியத்தைச் சாதித்து விடும் பெருங்கர்ம வீரன் இந்த விமலாதித்தன்.

இவருடைய அலுவலகத்துக்கு மட்டுமில்லை, வீட்டுக்கே படையெடுக்கிறார்கள் சில கிராம அலுவலர்களும் அரச உத்தியோகத்தர்களும் வர்த்தகப் பெருமக்களும் அரசியல்வாதிகளும்.

இவரைக் கட்டுப்படுத்தக் கூடிய அதிகாரம் யாழ்ப்பாணம், கிளிநொச்சி அரசாங்க அதிபர்களுக்குண்டு. ஆனால் அவர்கள் இதைச் செய்யத் தயங்குகின்றனர். ஏனென்றால் இவர் அங்கே மேலிடத்தில் தங்களைப்பற்றிப் போட்டுக் கொடுத்து விடுவார் என்ற பயத்தினால்.

அடுத்த அதிகாரம் படைத்தவர் ஆளுநர். ஆனால் ஆளுநர் செயலகமோ இதைக் கண்ட மாதிரியோ கேட்டமாதிரியோ காட்டிக் கொள்வதில்லை.

இதற்கு என்ன காரணம் என்று அல்லாவுக்கும் தெரியாது. பரமசிவனுக்கும் விளங்காது. கர்த்தருக்கும் புரியாது.

மற்றவர்கள் ஒருங்கிணைப்புக்குழுத்தலைவர்களாகும். வேலியே பயிரை மேய்ந்தால் பிறகெங்கே பயிர்களுக்குக் காவல்?

அவர்கள் இதைத் தெரிந்த மாதிரியும் தெரியாத மாதிரியும் காட்டிக் கொண்டு தங்களுக்குத் தேவையான அளவுக்கு விட்டுக் கொடுப்புகளைச் செய்து காரியத்தைச் சாதித்துக் கொள்கிறார்கள்.

இப்படி ஆட்டையைப் போட்ட காணிகள் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் ஏராளம். கிளிநொச்சியில் கௌதாரிமுனையிலும் கிளாலியிலும் மணல் அள்ளுவதற்குக் காணி வழங்கப்பட்டுள்ளது.

இதை விட பளைப் பிரதேசத்தில் பல இடங்களில் காணி உள்ளவர்களுக்கும் பிரமுகர்களுக்கும் காணிகள் வழங்கப்பட்டுள்ளன. ஒவ்வொருவருக்கும் தலா ஐந்து ஏக்கர் வீதம். அத்தனையும் தென்னைப் பயிர்ச்செய்கை செய்யக் கூடிய காணிகள்.

ஆனால் காணியற்ற மக்களுக்குக் கால் ஏக்கர் காணிகூட வழங்கப்படவில்லை. இதைப்பற்றிக் கதைக்கவோ இவர்களுக்காகக் குரல் கொடுக்கவோ யாருமே இல்லை. இத்தனைக்கும் எங்கள் சூழலில் எத்தனை கட்சிகள், எத்தனை தலைவர்கள், எத்தனை எத்தனை அரசியற் பிரமுகர்கள்- அப்பப்பா..!

இந்தப் பிரச்சினை கசமுசாவாகிக் கொஞ்ச நாளைக்கு முதல் இரவோடிரவாக அனுராதபுரத்துக்கு பைல்களையெல்லாம் அள்ளிக் கட்டி ஏற்றிக் கொண்டு போனார்கள்.

இது பெரிய தவறு. சதி முயற்சி என்று பலரும் எதிர்ப்புக் காட்ட இரண்டு நாளில் மீண்டும் கொண்டு வந்து யாழ்ப்பாணத்திலே போட்டார்கள்.

இப்பொழுது இதையெல்லாம் கடந்து கிளிநொச்சி மாவட்டத்தில் ஏறக்குறைய 4000 ஏக்கர் நிலம் இப்படியே யாருக்கோவெல்லாம் கொடுக்கப்படவுள்ளதாக அறியக் கிடக்கிறது.

இதைப்பற்றி ஒன்றிரண்டுபேர் தங்களுடைய முகப்புத்தகத்திலும் வெளிப்படுத்தியிருந்தனர்.

ஆனாலும் ஆட்டையைப் போடும் காரியம் நடக்கத்தான் போகிறது.

வடமாகாணக் காணி ஆணையாளர் இடமாற்றமும் புதிய நியமனமும் கூட இதன் பொருட்டுத்தான் நடந்ததா? என்ற கேள்விகளும் எழுகின்றன.

ஆளுநர் அலுவலகம் இதைப்பற்றித் தெரிந்து கொண்டும் அமைதி காக்கிறது. உள்ளே காரியங்கள் மிக வேகமாக நடக்கின்றன.

ஒருங்கிணைப்புக்குழுத்தலைவர்கள், அவர்களுடைய நுண்புலனாய்வு நிபுணர்களெல்லாம் இதைப்பற்றி

“உடையாரின் திருவிழாவில் சடையர் வாணம் விடுவதைப்போல அரச நிதியில் - அரச உத்தியோக நியமனத்தில் தங்களுடைய சிபாரிசைச் செய்து விடுகிறார்கள். வேலை கிடைத்தவர்கள் அரசுக்கும் விசுவாசமில்லை. அமைச்சருக்கும் அரச பிரதிநிதிகளுக்கும் விசுவாசமாக இருப்பதில்லை. ஆகக் கூடியது ஒரு தேர்தலில் மட்டும் விரும்பியோ விரும்பாமலோ ஒரு கொஞ்சப் பேர் வாக்குப் போடுவார்கள்.”

வெளியே மூச்சு விடக் காணோம்.

வேண்டுமென்றால் எரிகிற வீட்டில் பிடுங்குது மிச்சம் எண்ட மாதிரியும் சாரை தின்கிற ஊரில் நடுமுறி நமக்கு என்ற விதமாகவும் பந்தியில் குந்துவார்கள்.

இப்படியே ஆட்டையைப் போட்டுப் போட்டு நாட்டையே குட்டிச் சுவராக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

அப்படியென்றால் நீதி நியாயத்துக்கு இடமில்லை என்றல்லவா அர்த்தம்?

இதை மக்கள்தான் இனங்கண்டு, துணிந்து எழுந்து எதிர்க்க வேண்டும்.

துணிவே துணை.

■

# அவள் அவளாகவே...!

யாழ் சத்தியா



‘உங்களுக்கு எத்தினை தரம் அம்மா சொன்னனான்... நல்ல ஸ்டைலான பொம்பிளையாப் பாருங்கோ என்று... இந்தப் பட்டிக்காட்டை எங்க தேடிப் பிடிச்சியளோ தெரியாது. இப்ப தினந்தினம் என்ர உசிர் போகுது... எதுக்குடா இவளை லண்டன் கூப்பிட்டன் எண்டு கிடக்கணை.’

‘என்னடா தம்பி... இப்பிடி சொல்லுறாய்...

இவள் நல்ல வெள்ளைப் பெட்டை, வடிவு என்று தானே உனக்கு கட்டி வைச்சனாங்கள்... நீயும் பார்த்த பொம்பிளை எல்லாத்தையும் அதுக்கு பல்லு மிதப்பு, இதுக்கு கலர் குறைவு, அது குண்டா இருக்கு, இது உயரம் குறைவு எண்டு ஆயிரம் சாட்டுச் சொல்லி தட்டிக் கழிச்சாய்... இவளிட போட்டோ அனுப் பினதுமே ஒண்டுமே சொல்லாமல் கெதியா நாளைப் பாருங்கோ எண்டு சொல்லிப் போட்டு இப்ப என்னோட வாறாய்...?’

‘ஓமோம்.... அந்த வடிவில மயங்கிக் கட்டினதில தான் நான் இப்ப அவஸ்தைப் படுறன்... ஒரு இடத்துக்கு வெளில கூட்டிக்கொண்டு போக ஏலாமக் கிடக்கு.... இங்க இருக்கிறவனெல்லாம் சிரிக்கிறாங்கள்...’

‘இல்லை கேட்கிறன்.... அவளுக்கு என்ன குறையடா மோனை....? கொழும்பு கம்பஸில மேனேஜ்மெண்ட் படிச்ச பெட்டை.... சீமாவோ சோமாவோ ஏதோ எக்கவுண்டிங் கோர்ஸும் எல்லோ முடிச்சிருக்கிறாளாம்... நீ ஏஎல் படிச்சுப் போட்டு உங்க போய் கோப்பை கழுவிறதுக்கு உனக்கு இவ்வளவு படிச்ச பெட்டை கிடைச்சதே பெரிய விசயம்... அதுக்குள்ள என்னடா என்றால் நீ அவளைப் பற்றிக் குறை சொல்லிக் கொண்டி ருக்கிறாய்....?’

‘என்னணை.... நீங்களே இப்படிச் சொல்லுறியள்...? நான் என்ன இப்பவும் கோப்பையே கழுவுறன்... சொந்தமா கடை வைச்சு உழைக்கிறன் தானே... பிறகும் படிக்காததைக் குத்திக் காட்டுறியள்... இவள்கூட ஒரு நாள் பார்த்து என்னைப் படிக்காதவன் எண்டு சொல்லி யிருக்க மாட்டாள்... ஆனா நீங்க சொல்லுறியளம்மா...’

‘அதைத்தானேடா நானும் சொல்லுறன்....அவள் உனக்கு என்ன குறை வைச்சாள் சொல்லு பாப்பம்...? உனக்கு சமைச்சுத் தராமல் ஊர் சுத்துறாளா? இல்லை உன்னைக் கவனிக்காமல் இருந்து நாடகம் பாக்கிறாளா...?’

‘எணை அம்மா... நீங்கள் செய்யிறதையெல்லாம் சொல்லாதையுங்கோ... ஒழுங்கா சமைச்சு வைக்காமல் அந்தக் கோயில்ல தேர், இந்தக் கோயில்ல தீர்த்தம் எண்டு வெளிக்கிட்டுப் போயிடுவியள்... இரவிலயாச்சும் ஒழுங்கா சாப்பாடு தாறனியளோ எண்டால் அதுவு மில்லை... கோலங்கள், மெட்டியொலி என்று டீவியைக் கட்டிப் பிடிச்சுக் கொண்டிருப்பியள். சண் டீவிக்காரன் அட்வடீஸ்மெண்ட் போடுற வரைக்கும் நானும் அப்பாவும் சாப்பாட்டுக்குப் பாத்துக் கொண்டு இருக் கோணும்... உங்களோட இருக்கேக்க நான் இந்தக் கொடுமை எல்லாம் அனுபவிச்ச படியால கடவுளாப் பார்த்து, எனக்கு இப்ப என்னை உள்ளங்கையில வைச்சுத் தாங்கிற பொண்டாட்டியைத் தந்திருக்கிறார்...’

‘அடேய்... ஏன்டா மோனை இப்ப பழங்கதையெல்லாம்.... சரி... சரி... அதை விடு... அதுதான் நீயே சொல்லுறியே நல்லா கவனிக்கிற பொண்டாட்டி எண்டு... பிறகென்ன...? நீ கடையில இருக்கிற சாமான் வாங்கப் போனாலும் அவள் தானே கடையையும் பாக்கிறாள்... கடைக் கணக்கு, வழக்குப் பாக்கிறதும் அவள் தானேடா... லண்டன்காரன் இங்கி லிஸ் கதைக்கிற மாதிரி எவ்வளவு ஸ்டைலா கதைக் கிறாள்? உன்னை மாதிரி தடக்கி விழுந்தே அவள் கதைக்கிறவள்?’

‘இப்ப எதுக்கணை அம்மா நான் கதைக்கிற இங்கிலி சோட வாறியள்...? நான் என்ன அவள் கடை பாக்கி றேல்ல எண்டு சொன்னானோ...? அவள் இங்க வந்த பிறகு தானே நல்லா பிஸ்னஸ் கூடினது... எல்லாம் அவளிட ஐடியாப்படி கடை நடத்தத் தொடங்கின பிறகு தானே...’

‘பிறகெதுக்குடா இப்ப அவளைப் பற்றி புரணி அளக்கிறாய்?’

‘நான் புரணி அளக்கிறனோ...? அவள் செய்யிற எல்லாம் சரி தான்... ஆனா ஒரு இடத்துக்கு வெளில கூட்டிக் கொண்டு போக முடியுதே... சனமெல்லாம் பார்த்து சிரிக்குதுகள்... அதுவும் எங்கட ஆட்கள் எனக்கு முன்னால சொல்லுவாங்கள், ‘இப்புடி ஒரு அடக் கமான பொம்பிளை கிடைக்கக் குடுத்து வைச்சிருக் கோணும் என்று...’ நான் போய் முடிய பின்னால சிரிக்கிறாங்களணை... ‘இவரிட ஸ்டைலுக்குத் தான் நல்ல பட்டிக்காடாப் பொம்பிளை கிடைச்சிருக்கு’ எண்டு...’

‘எங்கட சனத்தைப் பற்றித் தெரியும் தானே அப்பன்... அதுகள் உனக்கு நல்ல பொம்பிளை கிடைச்சிட்டு என்று பொறாமையில சொல்லுங்கள்... அதுகளிட கதையளை நீ கணக்கில எடுக்காதையடா மோனை...’

‘எப்பிடியம்மா நான் கணக்கெடுக்காம விடுறது...? இங்க இருந்து கொண்டு எங்கட ஆட்கள் என்று பழகா மல் இருக்கேலுமே... இவள் கொஞ்சம் புரிஞ்சு கொண்டு நடக்கலாம் தானேம்மா... நான் என்ன விசயத்திலயாவது குறை வைச்சிருக்கிறனோ...? ஆசைப்படுற எல்லாம் கேட்காமலே வாங்கிக் குடுக்கிறன்... அவளிட குடும்பம் ஊரில கொஞ்சம் கஸ்டப்படுகினம் எண்டு, இவள் கவலைப்படக் கூடாது எண்டு இவளுக்குத் தெரியாமலேயே மாசமாசம் அவைக்கு காசு அனுப்பிறன்...’

‘உன்ர நல்ல மனசு எனக்குத் தெரியும் தானே ராசா... இந்த விசயத்தை தவிர அவள் பத்தரை மாற்றுத் தங்கம் தானேயடா... நீ கொஞ்சம் சமாளிச்சுப் போவன்...’

‘நானும் வந்த புதுசு கொஞ்சம் இடம், குளிர் எல்லாம் பழகட்டும்....கொஞ்ச நாள் போக மாறுவாள்... மாறு வாள் என்று பார்த்தால் மாட்டன் என்றே நிக்கிறா ளணை... நானும் எவ்வளவோ சொல்லி விளங்கப் படுத்திக் களைச்சுப் போனன். அவளும் பிடிவாதமாய் எனக்கு மேலால விளக்கம் சொல்லுறாள்... நான் என்ன தான் செய்யுறது...?’

‘நீ என்னைப் பேசாதை அப்பன்... ஆனா எனக்கும் அவள் செய்யுறது பிழையாகத் தெரியேல்ல... இந்தக் காலத்தில இப்படி ஒரு உறுதியான பிள்ளையா என்று அவளில மதிப்புத்தான் கூடுது...’

‘அதுதானம்மா... எனக்கும் சிலவேளை அவளைப் பேசுறதுக்கு மனம் வராது... வெள்ளைக்காரங்களுக்கு முன்னால அவளைப் பார்க்க பெருமையாத்தான் இருக்கும்... ஆனால் எங்கட சனத்திட கதையளைக் கேட்கவெல்லோ விசர் வருது மனுசருக்கு...’

‘இங்க பார் தம்பி... நான் கடைசியா சொல்லுறன்... எங்கட அறுந்து போன சனத்திட கதையை விட்டிட்டு நீ அவளை அவளாய் வாழ விடு... அவளோட சேர்ந்து சந்தோசமா குடும்பம் நடத்திப் பிள்ளை குட்டி பெறுற வழியைப் பாரு... நான் நாளைக்கு எடுக்கிறனடா. சூப்பர் சிங்கர் தொடங்கப் போகுது... சரியடா மோனை... மருமகளிட்டச் சொல்லு நாளைக்குக் காலமை எடுத்துக் கதைக்கிறன் எண்டு...’

‘இங்க பார் தம்பி... நான் கடைசியா சொல்லுறன்... எங்கட அறுந்து போன சனத்திட கதையை விட்டிட்டு நீ அவளை அவளாய் வாழ விடு... அவளோட சேர்ந்து சந்தோசமா குடும்பம் நடத்திப் பிள்ளை குட்டி பெறுற வழியைப் பாரு... நான் நாளைக்கு எடுக்கிறனடா. சூப்பர் சிங் கர் தொடங்கப் போகுது... சரியடா மோனை... மருமகளிட்டச் சொல்லு நாளைக்குக் காலமை எடுத்துக் கதைக்கிறன் எண்டு...’

‘நீங்க இந்த ஜென்மத்தில திருந்த மாட்டியளணை... அப்பாவுக்கு சாப்பாட்டைக் குடுத்துட்டு டீவிக்கு முன்னால குந்துங்கோ... நான் வைக்கிறன்...’

தனது கடையிலிருந்து வைபரில் தாயோடு உரை யாடிக் கொண்டிருந்தவன் கைப்பேசியை அணைத்தான்.

அவனின் இத்தனை புலம்பல்களுக்கும் காரணமான அவன் மனையாட்டியோ, வெள்ளிக்கிழமை என்று நல்ல மரக்கறி சோறு சமைத்து மூடி வைத்து விட்டு, தலைக்குக் குளித்து விட்டு வந்தவள், மஞ்சளுக்கு கிளிப்பச்சை கரையிட்ட பருத்திச் சேலையை எடுத்து உடுத்திக் கொண்டு, இடுப்புக்குக் கீழே நீண்டு படர்ந் திருந்த அந்தக் கருங் கூந்தலை காய வைத்து சிக்கெ டுத்து அழகாய் பின்னிக் கொண்டாள்.

கண்ணாடி மேசைக்கு முன் வந்தவள் கண்ணுக்கு அளவாய் மையிட்டு விட்டு குங்குமத்தை நெற்றி வகிட்டிலும் நெற்றியிலும் இட்டுக் கொண்டாள். மிகக் கவனமாய் இந்த குளிர், வெயில் எல்லாவற்றிலிருந்தும் பாதுகாத்து வளர்க்கும் கனகாம்பரச் செடியிலிருந்து பறித்த மலர்களைத் தொடுத்துக் கட்டியிருந்த சரத்தை தலையிலே சூட்டிக் கொண்டு, மேலே குளிர் அங்கியை எடுத்து அணிந்து கொண்டவள், கதவைப் பூட்டிச் சாவியைக் கைப்பையில் போட்டுக்கொண்டு அருகிலி ருந்த தேவாலயத்தை நோக்கி நடக்க ஆரம்பித்தாள்.

எந்தக் கடவுளாய் இருந்தால் என்ன? எல்லாம் நம் மனதைப் பொறுத்தது தான் என்ற எண்ணம் கொண்டவள், இலங்கையில் இருக்கும் போது எவ்வாறு தவறாது ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் கோவிலுக்குச் செல்வாளோ, அதேபோன்று இங்கே சேர்ச்சுக்குத் தவறாது போவாள்.

இந்துக் கோயில்கள் அவள் இருப்பிடத்தில் இருந்து வெகு தொலைவு என்பதால் வருஷம், தீபாவளி என்று விசேசங்களுக்கு மட்டும் அங்கே போய் வருவார்கள்.

‘அவளது நீண்ட கூந்தலை வெட்டு, டை அடி, சேலை கட்டாதே, சல்வார் போடாதே... ஜீன்ஸ் டீசேர்ட் போடு... லண்டனில இருக்கிற மாதிரி இரு... இப்பிடி பட்டிக்காடா இருக்காதே’ என்ற மற்றவர்களின் கருத்தை ஏற்றுக் கொள்ளாமல்,

‘லண்டன்ல இருந்தாலும் நான் தமிழச்சி தானே... நான் எதுக்கு என்ர பழக்கவழக்கத்தை மாத்தோணும்...? வெள்ளைக்காரன் தன்ர உடுப்பென்று ஜீன்ஸ், டீசேர்ட், சட்டை போடுறாங்கள்... நாங்கள் ஏன் அவங்களை மாதிரி மாற வேணும்...? லண்டன்காரன் யாழ்ப்பாணம் வந்தால் ஒரு நாளைக்கு ஆசைக்கு சாரிய, வேட்டிய கட்டிக் கொண்டு நல்லூருக்குப் போறாங்கள்... ஒவ்வொரு நாளுமே அப்படித் திரியிறாங்கள்...

நாங்க மட்டும் ஏன் மாற வேணும்...? உடுப்பு முதல்ல அவை அவையிட சொந்த விசயம்... எனக்கு சீலை கட்டத் தான் பிடிக்குது... நான் கட்டுறன். அதுக்காக இங்க ஜீன்ஸ் போடுறவையளை நான் குறை சொல்லவில்லை. அது அவைக்கு வேலையளுக்கு ஈஸி, அவைக்குப் பிடிச்சிருக்கு என்றால் அவை போடட்டும்... அது அவையிட விருப்பம்... அதுக்காக என்னை மாறச் சொல்லிச் சொல்ல ஒருத்தருக்கும் உரிமையில்லை. அதுக்கு நான் பட்டிக்காடாகவே இருந்திட்டுப் போறன்... பரவாயில்லை...’

என்று கணவனின் வாயை அடைத்த அந்த தமிழச்சி இயேசுநாதரின் உருவத்தில் விநாயகரை தரிசிக்க, தன் நீண்ட ஜடை கருநாகமாய் அசைந்தாட நடந்து சென்று கொண்டிருந்தாள் அவள் அவளாகவே...

■

# காலப்பொருத்தமான கல்வி முறையே இன்றைய தேவை

த.விஜயசங்கர்

> **ஏற்கனவே இலங்கையில் கல்விக் கொள்கை பல்வேறு மாற்றங்களை வேண்டி நிற்கின்ற நிலையில் இடர்காலத்தில் கல்வியினை முன்னெடுக்கக் கூடிய அல்லது எந்நிலைக்கும் பொதுவான கல்விக் கொள்கைகளை முன்வைப்பதில் கல்விசார் புலமைத்துவமுடையர்கள் செயற்பட வேண்டும்.**

கொவிட் - 19 ஏற்படுத்தி வருகின்ற தாக்கத்தில் இருந்து உலகம் மீண்டு வருவதற்கு நீண்ட காலம் தேவையாக உள்ளது. ஒரு நாட்டில் போர் நடந்தால் போரின் பாதிப்பிலிருந்து அந்நாட்டினை மீட்டெடுப்பதற்கு ஏனைய நாடுகள் ஏதோவொரு வகையில் பங்களிப்புச் செய்யும். ஆனால் கொவிட் - 19 தாக்கமானது உலகளவில் தாக்கத்தினை ஏற்படுத்தியிருக்கும் நிலையில் ஒவ்வொரு நாடும் தன்னைத் தானே பாதுகாத்து சுய அபிவிருத்தியினை அவாவி நிற்கும் சூழலில் பிற நாடுகளின் பாதுகாப்பு, மீளெழுச்சி தொடர்பில் சிந்திக்கும் நிலை தற்போது இல்லை என்றே சொல்லலாம். இந் நிலையில் இத்தாக்கத்திலிருந்து உலகத்தில் மிகவும் சிறப்பபிவிருத்தி அடைந்த நாடுகளே மீண்டுவர முடியாமல் திண்டாடி வருகின்ற சூழலைப் பார்க்கும் போது இலங்கை போன்ற அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் நிலைமை எப்படியிருக்கும் என்று யோசித்துப் பார்க்கையில் அந்த யோசனை அச்சத்தை ஏற்படுத்துவதாகவே அமைகின்றது.

கொவிட் - 19 ஏற்படுத்தியுள்ள தாக்கத்தினால் பாதிப்புக்குள்ளானது அந் நாட்டின் பொருளாதாரம் மட்டுமல்ல கல்வி, சுகாதாரம், மக்கள் திறன்கள், நம்பிக்கைகள் போன்றவையும் ஆகும். இத் தாக்கத்தின் காரணமாக உலக ஒழுங்கில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள், விளைவுகள், நெருக்கடிகள், இழப்புக்கள், துயரங்கள், பேன்றவை போர் விளைவிக்கும் தாக்கத்திலிருந்தும் வேறானவை, பாரிய நெருக்கடிக்குரியவை. இந்நிலையில் ஒவ்வொரு நாடும் தமது நாட்டின் இயலுமைகளுக்கும், பொருளாதார நிலைகளுக்கும், ஆளணித்திறனுக்கும் ஏற்ப பொருத்தமான திட்டமிடல்கள், கொள்கை வகுப்புக்கள், செயற்றிட்டங்கள், போன்றவற்றினை மேற் கொண்டு நாட்டினை மீள் கட்டுமானத்துக்குக் கொண்டு வரவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் இலங்கை போன்ற சில அபிவிருத்தியடைந்து வரும் வறுமை நிலைக்குட்பட்ட நாடுகள் மீள் ஒழுங்கமைப்பினைச் செய்வது பல்வேறு சிரமங்களுக்குரியது. ஏற்கனவே நாட்டினுடைய ஒழுங்கமைப்பில் மிகவும் தாழ்நிலையில் இருக்கும் நிலையில் கொவிட் - 19 தாக்கத்துக்குப் பின் மேலும் மீளாச் சிதைவு நிலைக்கு உள்ளாகியிருக்கிறது. இத்தகைய நிலையில் இருந்து நாட்டினை மீட்டெடுப்பதற்கு மிகவும் திறன் வாய்ந்த திட்டமிடல், கொள்கைவகுப்புக்கள் அவசியமானவையாகின்றன. இங்கு இருக்கும் சிக்கல் என்னவென்றால் நாட்டினை நீண்டகாலத்துக்கு திறன் மிகுந்ததாக மாற்றியமைப்பதற்கு அரசியல் இலாபமற்ற கொள்கை வகுப்புக்களை எவ்வாறு உருவாக்குவதென்பதே ஆகும். பொதுவாக இலங்கையைப் பொறுத்தவரையில் எந்தவொரு அபிவிருத்திச் செயற்பாட்டிலும் அரசியல் தலையீடுகள் உள் நுளைவதோடு, சுயநல இலாபத்தினையும் வேண்டிநிற்பது வெளிப்படையானது. இந்நிலை கல்விச் செயற்பாடுகளிலும் விதிவிலக்கல்ல. கல்விக் கொள்கை வகுப்பிலிருந்து கல்விசார் ஊழியர்களின் நியமனம், இடமாற்றம், பதவியுயர்வு போன்றவற்றிலெல்லாம் இத்தகைய அரசியல் செல்வாக்கின் தாக்கம் மிகவும் தீவிரமானது.

இன்றைய கொரோனா இடர் காலத்தில் கல்விச் செயற்பாடுகள் பாரிய நெருக்கடி நிலைக்கு உள்ளாகியிருக்கின்றது. மாணவர்கள் ஏறத்தாழ ஒன்றரை வருடத்துக்கு மேல் சீரான கல்வியினைப் பெறமுடியாத நிலையில், மேற்கொண்டு கல்விச் செயற்பாடுகளை எவ்வாறு ஒழுங்கமைப்புச் செய்வது என்பது சவால் மிகுந்த ஒன்றாகவே உள்ளது. பாடசாலைக் கல்வியை பெறமுடியாத மாணவர்களுக்கு தற்போது பரிந்துரைக்கப்பட்டதும் செயற்படுத்தப் படுவதுமாக இருக்கின்ற ஒரே ஒரு கல்விச் செயற்பாட்டு முறையாக நிகழ்நிலைக் கல்வியே அமைந்திருக்கின்றது. இத்தகைய நிகழ்நிலைக் கல்வி முறையானது இலங்கை போன்ற நாடுகளில் மேற்கொள்ளும் போது பல்வேறு இடர்பாடுகளை கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபடுகின்ற ஆசிரியர்களுக்கும் கற்றலில் ஈடுபடுகின்ற மாணவர்களுக்கும் ஏற்படுத்தி வருகின்றது.

நிகழ்நிலைக் கல்விச் செயற்பாட்டினைப் பொறுத்தவரையில் கற்றலில் ஈடுபடுகின்ற மாணவர்கள் அனைவரும் அதற்கான வசதிவாய்ப்பினைப் பெற்றிருக்க வேண்டும். அவ்வாறு இல்லையெனில் பூரணமாக எல்லோரும் கல்வியினைப் பெற முடியாதவர்களாகப் போய்விடுவார்கள். இவ்வாறு மாணவர்கள் அனைவரும் இவ்வகுப்பில் கலந்து கொள்ளவில்லை என்றால் ஆசிரியர் கற்பித்தல் எதிர்பார்ப்பு ஏமாற்றத்துக்குரியதாக மாறிவிடுகின்ற சூழ்நிலை உருவாகும். இங்கு கற்பித்தலும் கற்றலும் வினைத்திறனில்லாத ஒன்றாக மாற்றம் அடையும் அபாயநிலை உண்டு.

இதேவேளை இத்தகைய கல்விச் செயற்பாடுகளை வைத்துக் கொண்டு மாணவர்கள் எவ்வாறு பொதுப்பரீட்சையை எதிர்கொள்வது?. பொதுவாகவே பாடசாலைக் காலங்களில் மாணவர்கள் பரீட்சைக்குத் தயாராகும் போது ஆசிரியர்கள் மாணவர்களுக்கு பரீட்சைகளை எதிர்கொள்வதற்குரிய பல்வேறு தயார்படுத்தல்களை மேற்கொள்வதோடு பல பரீட்சைகளை வைத்து, அவர்களை மதிப்பீடு செய்து, இடர்படும் மாணவர்களுக்குரிய பரிகாரக் கற்பித்தல்களை மேற்கொள்வது வழக்கம். இது மாணவர்களின் பரீட்சை எதிர்கொள்ளலுக்கு எப்போதும் பயனுடையதாகவே இருந்திருக்கிறது. ஆனால் தற்போதைய கல்வி அமைச்சின் பரீட்சை அறிவித்தலை நோக்கும் போது மாணவர்கள் பாடசாலை யில் கல்வியினைக் கற்காது தனியே நிகழ்நிலை வகுப்புக்களில் பெற்றுக் கொண்ட கல்வி அறிவினை மட்டுமே கொண்டு பரீட்சையினை எதிர்கொள்ளும் நிலையே




காணப்படுகிறது. இங்கு மூன்று பிரச்சினைகள் உண்டு. ஒன்று, பரீட்சைக்குத் தயாராகும் எல்லா மணவர்களும் நிகழ்நிலை வகுப்பில் கல்வியைக் கற்றுக் கொள்ள முடியாது இருந்தமை. அதாவது கல்விச் செயற்பாட்டினை முன்னெடுக்கக் கூடிய சாதன வசதியற்ற மாணவர்கள் இத்தகைய வகுப்புக்கு செல்லாது இருந்தமை. இரண்டாவது, நிகழ்நிலைவகுப்பில் பாட அலகுகளைப் பூர்த்தி செய்யமுடியாதிருந்தமை. மூன்றாவது, பரீட்சைக்குப் போதுமான தயார்ப்படுத்தல்களோ, மாதிரிப்பரீட்சைகளையோ மாணவர்கள் இதுவரை எதிர்கொள்ளாமல் இருந்து நேரடியாக பொதுப்பரீட்சைக்கு செல்கின்ற நிலைமை என்பனவே அவையாகும். இவ்வாறான சூழ்நிலையில் மாணவர்கள் எவ்வாறு ஒரு பரீட்சையினை எதிர் கொண்டு தமது இலக்குகளை அடைந்து கொள்வது.

இவற்றினையெல்லாம் விட பாடசாலைக் கல்வி என்பது தனியே பரீட்சைக்கு மட்டும் மாணவர்களைத் தயார்ப்படுத்தும் ஒன்றல்ல. மாணவர்களின் அறிவு, திறன், மனப்பாங்குகளில் மாற்றங்களை ஏற்படுத்தி சமூகத் தில் வாழக்கூடிய ஒழுகலாற்றினை ஏற்படுத்தும் முக்கியமான நிறுவனமாகும். அவ்வாறான நிறுவனத்தில் மாணவர் கல்விச் செயற்பாட்டினை முன்னெடுக்காமல், அவர்கள் தமது திறன்களை வளர்த்துக் கொள்ளாமல் காலப்போக்கில் தமது வாழ்வின் வெற்றியினை எவ்வாறு அடைந்து கொள்வது? பொதுவாகவே இன்றைய எமது நாட்டின் கல்விக் கொள்கையில் மாணவர்களின் அறிவு, திறன், மனப்பாங்கினை வளர்க்கக் கூடிய கூறுகள் இல்லாமல் வெறுமனே பரீட்சையில் புள்ளிகளைப் பெறுகின்ற இயந்திரமாக மாற்றுகின்ற இயல்பே இருப்பதாக பல கல்விப்புலமையாளர்களும் குறிப்பிட்டு நிலைமையில் பாடசாலைக்கே செல்லாது பரீட்சையினை மட்டும் மையமாகக் கொண்டு நிகழ்த்தப்படும் நிகழ்நிலை வகுப்புக்களில் அடைந்து கொள்ளக் கூடிய பேறு என்ன? என்ற கேள்வி தீவிரமானதாகக் காணப்படுகின்றது.


மாணவர்கள் வெளியே போக முடியாத, சேர்ந்து கற்கமுடியாத இன்றைய கொரோனா பெருந்தொற்று நிலைமையில் நிகழ்நிலை வகுப்புக்களை விடுத்து வேறு எவ்வாறு கற்றல் செயற்பாட்டினை முன்னெடுப்பது?, இத்தகைய சூழ்நிலையில் அவ்வாறான கற்றல் வசதியாவது கிடைத்ததே என்பது நிகழ்நிலை வகுப்புப் பலவீனங்களை முன்வைப்பவர்கள் மீது திருப்பப்படுகின்ற கேள்வியாக இருக்கின்றது. அது மறுக்கக் கூடியதும் இல்லை. மேலை நாடுகளில் இத்தகைய வகுப்புக்களை வெற்றிகரமாக நடாத்தி வருகின்றார்கள். அதற்கு அவர்களிடம் பொருத்தமான வசதி வாய்ப்புக்களும், பொருத்தமான கல்விக் கொள்கைகளும் உண்டு அல்லது உருவாக்கி வைத்திருக்கின்றார்கள். அதேவேளை ஆசிரியர்களும், மாணவர்களும் அதற்கேற்றாற் போல் பயிற்றுவிக்கப்பட்டு இருக்கின்றார்கள். ஆனால் இலங்கையைப் பொறுத்தவரையில் இது புதியது. ஆசிரியர்களும் மாணவர்களும் சரியான முறையில் இவ்வகுப்புக்களை எதிர்கொள்ளக் கூடிய வகையில் பயிற்றுவிக்கப்படவில்லை என்பதோடு, எல் லோரும் பயன்படுத்தக்கூடிய வசதிவாய்ப்புக்களும் இல்லாமல் இருக்கின்றது. அதனையும் விட இவ்வகுப்பு அமைப்பாக்க நிலைக்கேற்ப பாடத்திட்டங்களோ, மாண வர்களின் அறிவு, திறன், மனப்பாங்குகளைப் பரீட்சித்து புள்ளிகளை வழங்கக் கூடிய முறைமைகளே இல்லாமல் இருக்கின்றது. பொதுமையாகச் சொல்லப்போனால் இத்தகைய கல்விமுறைக்கேற்ற கல்விக் கொள்கைகள் இல்லை அல்லது உருவாக்கப்படவில்லை என்பதே இங்கு கவனத்துக்குரியது.

ஏற்கனவே இலங்கையில் கல்விக் கொள்கை பல்வேறு மாற்றங்களை வேண்டி நிற்கின்ற நிலையில் இடர்காலத்தில் கல்வியினை முன்னெடுக்கக் கூடிய அல்லது எந்நிலைக்கும் பொதுவான கல்விக் கொள்கைகளை முன்வைப்பதில் கல்விசார் புலமைத்துவமுடையர்கள் செயற்பட வேண்டும். கல்விப்புலமையாளர்கள், கல்விக் கொள்கை வகுப்பாளர்கள் அரசு நலன்சார்ந்தும் அரசியல்வாதிகளின் நலன் சார்ந்தும் கொள்கை வகுப்புக்களை முன்வைப்பதனை விடுத்து மக்களுக்கும், நாட்டுக்கும் தேவையான திட்டமிடப்பட்ட பிரயோசனமான கல்விக் கொள்கைகளை வடிவமைப்பதில் கவனம் கொள்ள வேண்டும். இதற்கு இன்றைய இடர் காலகட்டத்திலும் வெற்றிகரமாகக் கல்விச் செயற்பாட்டினை முன்னெடுத்துவரும் மேலைநாடுகளின் கல்விக் கொள்கைகளை ஆராய்ந்து அதிலிருந்து அனுபவத்தினைப் பெற்று எமது நாட்டுக்குத் தேவையான கல்விக் கொள்கைகளை உருவாக்குவதில் முனைப்புக் காட்டலாம். கல்விக் கொள்கைகளை உருவாக்கும் போது திறந்த உரையாடல் அவசியமாகின்றது. புலமையாளர்கள் கல்விப்புலத்துக்கு வெளியிலும் இருக்கின்றார்கள் என்ற சிந்தனை வேண்டும். அவர்களையும் இணைத்து அவர்களின் பொருத்தமான ஆலோசனைகளையும் பெற்று செயற்படுவது பொருத்தமானது. முதலில் கல்விக் கொள்கையை வடிவமைப்பவர்கள் இன்றைய கல்வி நிலைமையினைச் சரியானவகையில் ஆய்வுக்குட்படுத்தி அதில் காணப்படும் நெருக்கீடுகளை கவனத்தில் கொண்டு அத்தைகைய நெருக்கீடுகளிலிருந்து விடுதலை கிடைக்கக் கூடிய கல்விக் கொள்கைகளை எவ்வாறு வடிவமைப்பது என்ற நீண்ட சிந்தனைக்கு உரியவராக இருக்கவேண்டும். அத்தகையோரை ஒன்றினைத்து கல்விக் கொள்கைகளை வகுப்பதில் அரசும் கூடிய கவனம் எடுக்கவேண்டும் என்பது அவசியத்துக்குரியது. சரியான கல்விக் கொள்கை, காலப்பொருத்தமான பாடத்திட்டங்கள் இல்லாமல் இன்றைய கல்வி நெருக்கடிகளைச் சரிசெய்து கொள்ளமுடியாது என்று சிந்தித்தால் எத்தகைய இடர்காலத்திலும் வெற்றியடையக் கூடிய கல்வி முறையினைக் கண்டுகொள்ள முடியும். ■

இ.சு.முரளிதரன்

# மரணம் நெருங்கும் காலத்தில் நிகழும் மீள் பிறப்பு






## "இகிரு"

உலக சினிமா மேதாவளி என மிளிரும் யப்பானிய இயக்குநர் அகிரா குரோசோவாவின் உன்னதப் படைப்புகளில் இகிருவும் ஒன்று. வாழ்வின் தேறிய பெறுமானத் தேடலை 'இகிரு' இனங்காட்டுகிறது. வாடனபே (Takashi Shimura) முப்பது வருடமாக மாநகர சபை அதிகாரியாகக் காணப்படுகின்றார். வயிற்று வலிக்காக மருத்துவமனை சென்றபோது, புற்று நோய்த் தாக்கத்தையும் ஆறு மாதத்தோடு ஆயுள் முடியப் போவதையும் அறிந்து கொள்கிறார். மகனும், மருமகளும் தன்மீது அக்கறையற்றவர்கள் என்பதை உணர்கிறார். இது வரையான வாழ்வு வெறுமையாகத் தெரியும் தருணத்திலே, நாவலாசிரியர் ஒருவர் மகிழ் நெறி நிகழ்வுகளில் பங்கேற்கச் செய்கிறார். மாநகர சபையில் பணியாற்றும் பெண்ணொருத்தி பணிவிலகல் கடிதத்தில் முத்திரையிடுதலுக்காக வாடனபேயினை நாடி வருகிறாள். அவளோடு பொழுதினைக் கழிப்பதில் மகிழ்வினைப் பெறுகின்றார். மீயின்ப நெறியினை இறுதியில் கண்டடைகின்றார். மாநகர சபையினரால் ஏழை மக்கள் வாழும் பகுதியில் அமைக்கப்பட வேண்டிய செயற்றிட்டமொன்று முன்னர் நிராகரிக்கப்பட்டமை நினைவு வருகின்றது.

சிறுவர் விளையாட்டுப் பூங்காவை அம்மக்கள் விருப்பம்போல அமைத்துக் கொடுக்கும் செயற்றிட்டத்தை நிறைவேற்றுகிறார்.

வாடனபேயின் மரணத்திற்கு மறுநாள் நிகழும் ஒன்று கூடலில் அவரது இறுதிக் காலத்துயர் குறித்தும் தியாக சிந்தனை குறித்தும் சக ஊழியர்கள் பேசுகின்றனர். வாடனபே ஊஞ்சலில் உல்லாசமாக ஆடியபடியே. தனக்குப் பிடித்த பாடலைப் பாடியவாறே உயிர் துறந்தமையும் சிலாகிக்கப்படுகின்றது. வாடனபே போல உயர் சிந்தனையோடு செயலாற்றுவோம் என மாநகரசபை ஊழியர்கள் உறுதி எடுக்கின்றனர். மறுநாள் அனைத்தையும் மறந்து வேலைத் தளத்திலே பணி அக்கறையின்மையோடு அமர்ந்திருக்கின்றனர். வாடனபே உருவாக்கிய பூங்காவிலே சிறுவர்கள் மகிழ்ந்து விளையாடுகின்ற காட்சியோடு படம் நிறைவு பெறுகின்றது.

மக்கள் சேவையே பெருமகிழ்வினைத் தரும் என்ற நம்பிக்கையோடு வாடனபே படிகளில் இறங்கி வருகின்ற காட்சியில் (படியேறிச் செல்லும் பெண்ணொருத்திக்காக) பிறந்தநாள் வாழ்த்துப் பாடல் ஒலிக்கிறது. வாடனபே புதிதாகப் பிறந்துள்ளதைக் குறியீடாக அப்பாடலின் வழியே இயக்குநர் உணர்த்துகிறார். பல சட்டகங்களில்அரசாங்க ஊழியர்களின் அலட்சியப் போக்கினை எள்ளலோடு பதிவு செய்துள்ளார். திறப்பு விழாவில் நகர பிதாவின் உரை, பிறர் உழைப்பினைச் சுரண்டும் அரசியல் மீதான விமர்சனமாகக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. நாயகனான டகாஷி ஷிமுராவின் உடல் மொழியும் முக பாவனைகளும் சற்றே அகன்ற வீச்சுப் பண்போடு அமைந்துள்ளன. " ஒரு படைப்பினை விட ஒருவனை உயர்வாக இனங்காட்டுவது வேறெதுவுமில்லை" என்ற அகிரா குரோசோவாவின் கூற்றுக்கு "இகிரு" மிகச் சிறந்த உதாரணமாகத் திகழ்கிறது. பிறப்பிற்கும் இறப்பிற்குமான சிற்றிடைவெளியை பயனுள்ள விதத்தில் வாழுமாறு இகிரு (To live) உணர்த்தி நிற்கிறது. ■

அபூர்வன்

# தாயொருத்தியின் பழிவாங்கும் உணர்வின் திரைவடிவம் "Montage"






கொரிய சினிமாவான "Monta ge" மர்ம முடிச்சிய நகர் படிமத்திற்கான பெரும்பான்மைப் பண்புகளைக் கொண்டமைந்துள்ளது. ஜியோங்கியுன் - சியோப் விடுப்பார்வத்தினைத் தூண்டும் வகையிலே விறுவிறுப்போடு திரைக்கதையினை அமைத்து இயக்கியுள்ளார். இரண்டு மணி நேரம் பார்வையாளனின் எண்ணங்களை ஈர்த்து படம் நிறைவுறும் தருணத்திலே மீள ஒப்படைக்கும் வகையிலே படைப்பாக்கம் செய்துள்ளார். காட்சிகளின் நகர்வானது இருக்கை நுனிச் சுவாரஸ்யத்தோடு, ஊகிக்கக் கடினமான தொடர் சட்டகங்களைக் கொண்டமைகின்றது. மாற்று உலகினுள் நுழையும் அனுமதியை, எளிதாக வழங்கி உள்ளீர்க்கிறது.

சிறுமி ஒருத்தி கடத்தப்பட்டுக் கொல்லப்படுகின்றாள். குறித்த கால எல்லைக்குள் வழக்குகள் நிறைவு பெறவேண்டுமென்ற சட்ட வரையறை (Statute of Limitation) கொரியாவில் உள்ளது. அதனடிப் படையில் புலனாய்வாளர்களால் 15 வருடத்துள் குற்றவாளியை அடையாளங்காண முடியவில்லை. காலக்கெடு முடிந்த மறு நாளே குற்றவாளி நிரபராதியாகிவிடுவான். இச் சூழலில் மீண்டும் ஒரு கடத்தல் நிகழ்கிறது. முன்னைய கடத்தல் சம்பவத்தோடு பல்வேறு முறையில் ஒத்துப்போகிறது. கடத்தலுக்கான மர்ம முடிச்சுகள் அவிழ்க்கப்படத் திரைப்படம் நிறைவு பெறுகிறது.

கதையானது பெரும்போக்கு சினிமா போலத் தனியொருவர் மீது குவியாமல் சிதறுண்டு பன்முகக் கதாபாத்திரங்களோடும் பயணிக்கிறது. மர்ம முடிச்சிய சினிமாவானது பெருஞ்சாகசக் காட்சிகளையே முன்னிறுத்துவதுண்டு. எனினும் Montage நம்பகத் தன்மையான காட்சிகளையே அதிகளவில் வெளிப்படுத்த முனைகிறது. தனித் தனிச் சட்டகங்களால் இணைந்த கலப்புத் தொகுப்பினை முகிழ் காட்சியிலே வெளிப்படுத்தி திரைப்படத் தலைப்பிற்கு வலுச்சேர்த்துள்ளது.

துன்பப் பொதியினைத் தூக்கியெறிந்து விட்டு, மன்னிப்பு என்ற புனித அறத்தின் வழியே பயணித்தல் அனைவர்க்கும் சாத்தியமில்லை. குற்றவாளிகள் தண்டனை அடைகின்ற தருணத்திலே தான் பெரும்பான்மை மனிதமனம் ஆறுதலடைகின்றது. தாய்மையின் பரிமாணங்கள் சராசரி அளவு கோல்களை விட அகலித்தவை. கால ஓட்டத்தில் மழுங்காத கூர்மையோடும் பழிவாங்கும் உணர்வு வெளிக் கிளம்பலாம். இத்தகைய உட்கூறுகளை இனங் காட்டுவதாக Montage அமைந்துள்ளது. தாயின் கதாபாத்திரத்திலே தோன்றும் Uhm Jung - hwa அற்புதமான அளிக்கையினை வெளிப்படுத்தியுள்ளார். மர்ம முடிச்சிய சினிமா விரும்பிகளுக்கு திருப்திகரமான படைப்பாக இத் திரைப் படம் அமையுமெனத் துணிந்து கூறலாம். ●



**வேதநாயகம் தபேந்திரன்**



# தீர்மானிக்க முடியாது

> **“அண்ணா உங்கட கோரிக்கைகளில் நியாயம் இருந்தது. ஆனால் பெரிய ஐயா ஆதரவளிக்கும் போது நாம் மாறாக நின்றால் பிறகு இவரோட காலம் தள்ள ஏலாது. புற மோசன், கிறமோசன் ஒண்டும்கிடைக்காத படி பேர்சனல் பைலை மனுசன் நாசமாக்கிப்போடும். அது தான் ஆதரவு அளிச்சனாங்கள் ”என்றனர்.**

**1930 களின் முன் பகுதி.**

ஜேர்மனியில் அந்த மாபெரும் கூட்டம் ஆரம்பமாகியது. குள்ள உருவமான அந்த இளைஞனின் மூக்கின் கீழ் மட்டும் கற்றையாக வைத்த மீசை தனித்துவமாக இருந்தது.

“பேரன்புக்குரிய ஜேர்மனிய மக்களே உங்களுக்குப் புதியதொரு பொற்காலத்தைப் படைக்க விரும்புகிறேன். தூய ஜேர்மனிய இனம் தான் இந்த உலகில் மிக உயர்ந்த இனம். நாம் இந்த உலகம் முழுவதையும் ஆளப் பிறந்த இனம்.

இப்போதிருக்கும் ஆட்சியாளரால் எமது ஜேர்மனி பல வழிகளிலும் பின்தங்கி வருகிறது. தேனும், பாலும் ஆறாக ஓடும், ஆற்றல் மிகுந்த ஒரு நாட்டை உங்களுக்கு உருவாக்கித் தரப்போகிறேன்.

ஒரு முறை என் மீது நம்பிக்கை வைத்துப் பாருங்கள். நான் சார்ந்துள்ள நாசிக் கட்சிக்கு உங்களது பொன்னான வாக்குகளை அளித்து ஆட்சிக் கட்டிலில் அமர்த்துங்கள்.”

இப்படியே அந்த இளைஞன் ருடால்ப் ஹிட்லர் பேசிக் கொண்டே போனான். சனவெள்ளம் அடிக்கடி ஆர்ப்பரித்தது. கைகளைத் தட்டியது.

நாட்டின் மக்கள் சபைக்கான தேர்தலில் அமோக ஆதரவை மக்கள் வழங்கினார்கள். வென்றான். நாட்டின் தலைவன் ஆனான். அவனது நாசகாரச் செயல்களால், பேராசைகளால் 1939 இல் இரண்டாம் உலகப் போர் தொடங்கியது. கோடிக் கணக்கான மனித உயிர்கள் காவு கொள்ளப்பட்டன. போரின் முடிவில் அவன் மர்மமான முறையில் தற்கொலை செய்து கொண்டான்.

ஜேர்மனி கிழக்கு, மேற்கென இரண்டாகியது. 1990 இல் மீண்டும் ஒன்றாகியது. அதன் பின்னர் பல தடவைகள் மக்கள் பிரதிநிதிகளைத் தெரிவு செய்யும் தேர்தல்கள் நடந்தன. நாடு பலவித முன்னேற்றங்களைக் கண்டது. நல்ல தலைவர்கள் பலர் உருவாகினார்கள்.

ஆனால் ஹிட்லர் தேர்தலில் பெற்ற பெரும்பான்மை வாக்கு வீதத்தைப் பின் வந்த கட்சிகள் எதுவுமே பெறவில்லை.

மக்களில் பெரும்பான்மை வீதத்தினர் ஆதரவு அளித்தமைக்காக ஹிட்லரின் ஆட்சி தரமானதாகக் கொள்ள முடியாது.

பெரும்பான்மை மட்டும் எப்போதும் தரமெனத் தீர்மானிக்க முடியாது.

********


அது ஒரு அரச அலுவலகம். உத்தியோகத்தர் நலன் புரிச் சங்கத்தின் கூட்டம் நடைபெறுகிறது. உத்தியோகத்தர்களில் ஒருசிலரே உள்ள அணி, தீர்மானங்களைத் தமது சிந்தனைப்படி திணிக்க முற்படுகிறது. அந்தத் தீர்மானங்களில் உள்ள பாதகத் தன்மைகளைச் சுட்டிக் காட்டி நேர்மைக்காகப் போரடும் ஒரு அணியின் குரல் எழும்புகிறது.

சங்கத்தின் தலைவரான பெரியவரோ திணிப்புச் சிந்தனையாளர்கள் பக்கம். பொது நன்மைக்கு விரோதமான தீர்மானங்களை நியாயப்படுத்திக் கதைத்தார்.

சரி தீர்மானத்தை வாக்கெடுப்புக்கு விடுங்களென, நியாயம் கோரும் தரப்பினர் கோரிக்கை விடுத்தனர்.

அங்கிருந்த முக்கால்வாசிப் பேர் அநீதியான தீர்மானத்தை ஆதரித்தே கைகளை உயர்த்தினார்கள். தீர்மானம் நிறைவேற்றப்பட்டு விட்டது.





கூட்டம் முடிந்து உத்தியோகத்தர்கள் வெளியே வந்த போது நியாயத்திற்காகப் போராடிய தரப்பினர் ஆதரவளித்த சிலருடன் “ஏன் பிழையான விடயத்திற்குத் துணை போனீர்கள்?” எனக் கேட்டனர்.

அண்ணா உங்கட கோரிக்கைகளில் நியாயம் இருந்தது. ஆனால் பெரிய ஐயா ஆதரவளிக்கும் போது நாம் மாறாக நின்றால் பிறகு இவரோட காலம் தள்ள ஏலாது. புறமோசன், கிறமோசன் ஒண்டும் கிடைக்காத படி பேர்சனல் பைலை மனுசன் நாசமாக்கிப் போடும். அது தான் ஆதரவு அளிச்சனாங்கள் ” என்றனர்.

பெரும்பான்மை இருக்கிறது என்பதற்காக எல்லாத் தீர்மானங்களும் தரமானது என்பதைத் தீர்மானிக்க முடியாது.

********

அது ஒரு சைவக் கோயில். முக்கியத்துவம் வாய்ந்த தீர்மானங்களை எடுப்பதற்காக விசேட பொதுக் கூட்டம் காலை 10 மணிக்கு ஆரம்பித்தது. அங்கத்தவர்கள் நிறையப் பேர் உள்ள அந்த அவையில் இருவர் மட்டுமே விடாப்பிடியாகச் சண்டித்தனமாகத் தமது கருத்துகளைத் திணித்துக் கொண்டிருந்தார்கள்.

நியாயத்திற்காகக் குரல் கொடுக்கும் சிலர் தமது கோரிக்கைகளின் நியாயத் தன்மையைச் சபைக்குக் கண்ணியமாக எடுத்துக் கூறிக் கொண்டே இருந்தார்கள். ஆனாலும் அந்த இரு சண்டியர்களின் குரல்களினது உச்ச ஸ்தாயிக்கு முன்னால் இவர்களால் தாக்குப் பிடிக்க முடியவில்லை.

அமைதியாகக் கதைத்தால் நீதி வெல்லாது. சண்டித்தனமாகக் கதைத்தால்தான் நீதி வெல்லுமென்ற நிலைமை பல இடங்களில் உருவாகி விட்டது.

ஆனால் சண்டித்தனமாகக் கதைக்கும், நடக்கும் பண்புகள் இல்லாதவர்கள் திடீரென அதனை உருவாக்க முடியாது.

அந்தக் கோயில் கூட்டமும் சண்டித்தனக்காரர்களுக்கு வசப்பட்டதாகப் போனது. நேரமும் பிற்பகல் 2 மணியைத் தாண்டி 3 மணியை நெருங்கிக் கொண்டிருந்தது. பசி பலரை வாட்டியது. வேறு வேலைகளும் சோலிகளும் பலருக்கு இருந்தன.

எது எக்கேடு கெட்டாலும் பரவாயில்லையெனச் சண்டித்தனம் காட்டிய இருவர் சார்பான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு ஆண்டுப் பொதுக் கூட்டம் நிறைவெய்தியது.

இச் சபையில் பெரும்பான்மை உறுப்பினர்கள் தமக்கு ஏன் பிரச்சினையென ஒதுங்கி இருந்தார்கள். ஒரு வகையில் கூறினால் மௌனமாக ஆதரவு வழங்கினார்கள்.

பெரும்பான்மை ஆதரவு உள்ளது என்பதை வைத்து எடுக்கப்பட்ட தீர்மானம் தரமானதெனத் தீர்மானிக்க முடியாது.

********

இந்திய தமிழகத்தின் வட சென்னைத் தேர்தல் தொகுதி. லோக்சபா எனப்பட்ட பாராளுமன்றத் தேர்தல்கள் நடைபெறுகிறது. திராவிட முன்னேற்றக் கழகத்தின் வேட்பாளர் 210 000 வாக்குகளைப் பெற்று வெற்றி பெறுகின்றார்.

அடுத்ததாக அண்ணா திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர் 187 000 வாக்குகளையும், மக்கள் நீதி மய்யக் கட்சி வேட்பாளர் 169 000 வாக்குகளையும், கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர் 84 000 வாக்குகளையும், இதர கட்சிகள், சுயேட்சை வேட்பாளர்கள் 60 000 வாக்குகளையும் பெறுகின்றனர்.

இங்கு வட சென்னைத் தேர்தல் தொகுதியில் 5 00 000 வாக்காளர்கள் விரும்பாத, திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர்தான் மக்கள் பிரதிநிதியாகத் தெரிவாகினார். அவர் தான் வெற்றி பெறுவதற்கான வாக்குகளைப் பெற்றவர்.

ஜனநாயகத் தேர்தல் முறைகளின் பலவீனமான அம்சங்களில் இதுவும் ஒன்று.

இங்கும் பெரும்பான்மை என்பதனை மட்டும் வைத்துக் கொண்டு தரத்தை தீர்மானிக்க முடியாது.

********

1970 ஆம் ஆண்டு. இலங்கையில் தொகுதி முறையில் அமைந்த தேர்தல் முறையின் கீழ் பாராளுமன்றத் தேர்தல் நடைபெறுகின்றது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி, நவசமசமாஜக் கட்சி ஆகியவை இணைந்த கூட்டணி அதிகத் தொகுதிகளை வென்றெடுக்கின்றது.

சிறிமாவோ அம்மையார் தலைமையில் ஆட்சி அமைக்கப்பட்டு 1972 மே 22 ஆம் திகதி நாடு குடியரசாகிறது. அதுவரை காலமும் பிரித்தானிய முடிக்குரிய அரசியின் பிரதிநிதியாக இருந்த மகாதேசாதிபதி பதவி ஒழிக்கப்படுகிறது. முதலாவது ஜனாதிபதியாக இறுதியாக இருந்த மகாதேசாதிபதி சேர். வில்லியம் கோபல்லாவ நியமனம் பெறுகின்றார்.

இந்தத் தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கூட்டணியை விட ஜே.ஆர்.ஜெயவர்த்தன தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி வாக்குகளின் விகிதாசார அடிப்படையில் முன்னிலை பெற்றது. ஆனாலும் தேர்தல் ஆசனங்களின் அடிப்படையில் குறைந்த ஆசனங்களையே பெற முடிந்தது.


இங்கும் பெரும்பான்மை என்பதனை வைத்துக் கொண்டு வெற்றியின் தரத்தைத் தீர்மானிக்க முடியாது.


புலோலியூர் வேல்நந்தன்

# புதுப்புனல் - 04

# மனோ சின்னத்துரையின் கொரோனா வீட்டுக் கதைகள்

தீம்புனலில் புதுப்புனல் பகுதியில் இவ் வாரம் நாம் அறிமுகப்படுத்தவுள்ள பிரதி மனோ சின்னத்துரை அவர்களால் எழுதப்பட்டு கருப்புப் பிரதிகள் வெளியீடாக 2020 டிசம்பர் மாதம் வெளியிடப்பட்ட "கொரோனா வீட்டுக் கதைகள்" என்ற சிறுகதைத் தொகுதியாகும். மனோ சின்னத்துரை அவர்கள் தற்போது பிரான்ஸ் நாட்டில் வசித்து வருகின்றார். யாழ்ப்பாணத்தைப் பூர்வீகமாகக் கொண்ட இவர் மகாஜனாக் கல்லூரியின் பழைய மாணவர். புலம் பெயர் இலக்கியச் சூழலில் "ஓசை", "அம்மா" ஆகிய இலக்கிய இதழ்களை வெளிக்கொணர்ந்த சிறப்பு இவருக்குரியது. அதில் எழுதிய படைப்பாளிகள் பலரை இன்னும் நன்றியோடு நினைத்துப் பார்க்கும் ஒருவர். ஆரம்பத்தில் இவர் தன்னை பெரிதும் ஒரு நாடகச் செயற்பாட்டாளராகவே அறிமுகப்படுத்திக் கொண்டார். ஆர்ப்பாட்டம் இல்லா அமைதியான சுபாவம் கொண்டவர். பிறரை எழுதத்தூண்டியதில் இவரின் பங்களிப்பு மகத்தானது. அந்த வகையில் இவரது முதலாவது படைப்பிலக்கியத் தொகுப்பாக "கொரோனா வீட்டுக் கதைகள்" என்ற தொகுப்பு அமைகிறது. கொரோனா உள்ளிருப்புக் காலம் என்பது பல துயரங்களைத் தந்தாலும் படைப்பாளிகள் சிலரைப் பொறுத்தவரை அது தந்த நீண்ட ஓய்வு அவர்கள் எழுதுவதற்கும் ஏற்கனவே எழுதியதைத் தொகுப்பதற்கும் வாய்ப்பாக அமைந்தது. அந்த வகையில் இக் கொடுங்காலத்தைப் பிரதி பலித்து அது தந்த அனுபவங்களை அதிகம் கொண்டு வெளிவந்த கவனிப்புக்குரிய ஒரு தொகுதியாக விளக்கி இச் சிறுகதைத் தொகுதி முக்கியத்துவம் பெறுகிறது. இது பற்றி என்னூட்டமாக மனோ சின்னத்துரை அவர்கள் குறிப்பிடும் போது "முகநூல் வாசகர்களே என்னை எழுதத்தூண்டினர்; அவர்களே என்னை உற்சாகப்படுத்தினர். அவர்களே இதனைத் தொகுப்பும் ஆக்கினர்; நன்றி அவர்களுக்கு" என்றார். அத்துடன் கொரோனா உள்ளிருப்புக் காலம் எனது உள நெருக்கடிகளுக்கான வடிகாலாக அமைந்தது. எழுதிக்கடப்பதைத் தவிர வேறு வழி இருக்கவில்லை. இந்த வேளையில்தான் நான் இத் தொகுப்பிலுள்ள கதைகளை எழுதி முடித்தேன் என்றார்.




உண்மைகளே இக்கதைகளின் உயிர் நாடி என்கிறார். முன்னூட்டமாகவும் பின்னூட்டமாகவும் அவரை ஊக்கப்படுத்திய முகநூல் நண்பர்களில் முதன்மையானவர்களான தீபிகாவும் இளவாலை விஜேந்திரனும் அவரைப் பற்றியும் அவரது கதைகள் குறித்துமான தமது மனக் கருத்துகளைப் பதிவு செய்துள்ளனர்.

தொகுதிக்குள் நுழைந்தால் 'தெய்வம்' என்ற கதையோடு இத் தொகுதி தொடங்குகிறது. பிரான்ஸ் நாட்டில் கொரோனாவின் ஆரம்ப அலைகள் பரவத் தொடங்கியபோதான அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு சதீஸ் என்ற பாத்திரப் படைப்பை மையப்படுத்தியதாகக் கதை நகர்கிறது. கொரோனா வந்ததால் தனிமைப்படுத்தல் பயத்தால் உறவுகளே உதவ முன்வராவேளை உயிரைத் துச்சமென மதித்து ஒரு டாக்ஸி றைவர் தெய்வமாக வந்து உதவிய அனுபவத்தை வாசிக்கும் போது, உண்மை அனுபவம் என்பதை அதே அனுபவத்தைப் பெற்றவர்கள் உணர்ந்து கொள்ளக் கூடிய வகையில் கதையாக்கியுள்ள தன்மை சிறப்புக்குரியதாகும். கதையின் மொழியிலும், சொல்லும் விதத்திலும், அது தரும் உணர்வும் மிக நேர்த்தியாக பின்னப்பட்டுள்ளது.

அடுத்து "பதுமை" என்ற கதை, பெண் மையத்தில் எழுதப்பட்ட கதை. புலம் பெயர் சூழலிலும் மாறாத தமிழ்ப் பெண்மை பற்றிய விம்பங்கள், காதல், சீதனம், உடல் அழகு, தேவையற்ற பயங்கள் போன்ற அடிப்படைகளைக் கொண்டு கதையை நகர்த்தி இறுதியில் பதுமையாய் முடிக்கிறார். கதாசிரியர் அடுத்த கதை "கொரோனா வீடு" " பிள்ளை என்ன வேலைக்குப் போகப் போகிறாய்" என்ற கேள்விகளூடாக இக் கதை நகர்கிறது. வைத்தியசாலையில் வேலை செய்யும் ஒரு துப்புரவுப் பணியாளர் கொரோனாவால் தன் வீடு, தொழில் இடம் என்பவற்றிற்கு இடையில் நின்று தடுமாறும் நிலையை இக் கதை உணர்த்துகிறது. பல வீடுகளின் சமகால யதார்த்தமாய் இக் கதை அமைகிறது.


அம்மாவின் வானொலிப் பெட்டி என்ற கதை, பெற்ற தாயை முதியோர் இல்லத்தில் சேர்க்க வேண்டிய நிர்பந்தக் கொடுமையை நெஞ்சை உருக்கும் வகையில் சொல்கிறது. கொரோனா நோய் நிலை காரணமாக ஏனைய நோய்களைக் காட்ட வைத்தியசாலை செல்லப் பயப்படும் மனநிலை " ஒன்றுமே இல்லை சின்னக் காயம்தான்" என்ற கதை உணர்த்துகிறது. ராவத்தை வைரவரில் தொடங்கி மாங்காய்க்குக் கல்லெறிஞ்சது, பள்ளிக்கூடம் போகாமல் நின்றது, வாத்தியாரிடம் வாங்கிக் கட்டியது வரை தன் பாடசாலைக் கால நினைவுகளை உயிரோட்டமாக வெளிப்படுத்துவதாக "தழும்பு" என்ற கதை அமைந்துள்ளது.

"இலங்கை வேந்தன்" என்ற கதை கடன்பட்டான் இலங்கை வேந்தன் என்ற அடியை வைத்துக் கொண்டு கடன் பட்டு வாழும் சுமையைப் பேசுகிறது.

"கிளாரா" என்ற கதை விளையாட்டுப் பொருட்களையும் செல்லப்பிராணிகளையும் விட்டுக் கொடுக்க மறுக்கும் சிறுவர் உளவியலைப் பேசுகிறது. "மழை" என்ற கதை தான் முன்பு காதலித்த தேவகியை மீண்டும் சந்தித்த போது வரும் பழைய ஞாபகங்களுடனான உணர்வுகளையும் தேவகி எதிர்கொள்ளும் மகளைப் பறி கொடுத்த போர் வலியையும் 'மழை' என்ற குறியீட்டுத் தலைப்பில் அற் புதமாய் பதிவு செய்கிறது கதை. "ஒரு கிலோ மிளகாய்த் தூள்" என்ற கதை, கொரோனாவில் இருந்து தப்ப ஆரம் பத்தில் மஞ்சள், உள்ளி, இஞ்சி, வேப்பிலை புலம் பெயர் தேசத்தில் மீண்டும் பழமைக்கு திரும்பிய நாட்களையும் பொருட்களை வாங்கிக் குவித்த வாழ்வையும் பேசுகிறது.

"இதுவும் கடந்து போகும்" என்ற கதை புலம் பெயர் சூழலில் வளர்ந்த மகன் தன் காதலியை அப்பாவுக்குத் தெரியப்படுத்துவதும் அதன் பின்னரான உணர்வுகளையும் பேசுகிறது. "விதை நிலம்" என்ற கதை 2060 இல் வன்னி இரணைமடு விமான நிலையத்தில் சிவ மாறன் ஐயா வந்திறங்கினார் என்பதோடு தொடங்கி தாத்தா வழி கதையை நகர்த்தி பாடசாலைச் சூழலையும் இணைத்து தலைமுறை மாற்றங்கள் பற்றியும் பேசுகிறது. அவ்வாறே "தவிர்பு, பார்வதி, வெளிச்சம்" போன்ற கதைகளும் தாம் வெளிப்படுத்த விளைந்த கருப் பொருள்களாலும், பாத்திரப் படைப்புகளாலும் சிறந்து விளங்குகின்றன. அதே போல "உயிர் வதை நாட்குறிப்பு" என்ற கதை நாட்குறிப்பு வடிவில் கொரோனாக் கால வாழ்வியலின் பல பதிவுகளைத் தருகின்ற வித்தியாசமான வடிவமைப்புக் கொண்ட கதையாக அமைகிறது.

இந்த வகையில் இத் தொகுப்பை வாசித்து முடிக்கும் போது கொரோனாக் கால அனுபவங்களும் அதைத் தாண்டிய மனோ சின்னத் துரையின் அனுபவங்களும் ஒரு முழு வாழ்வியலை வாசித்த அனுபவத்தை தந்து சிறப்புப் பெறுகின்றன, ஆர்ப்பாட்டங்கள் எதுவுமின்றி மிக எளிமையாக அதே நேரம் மனதில் தைக்கக் கூடிய வகையில் கதை சொல்லும் ஆற்றல் மனோ சின்னத் துரைக்குக் கைவரப் பெற்றிருப்பதை இம் முதற் தொகுதி நிரூபித்துள்ளது. பின்னூட்டமாக ஒவ்வொரு கதைகள் குறித்துமான வாசகர்களின் பதிவுகளும் இணைக்கப் பட்டுள்ளமை சிறப்பு. இவரிடம் இருந்து இன்னும் புதிய அனுபவக் கதைகளை எதிர்பார்க்கிறோம். ஈழத்துப் புலம் பெயர் இலக்கியத்துக்கு வளம் சேர்க்கும் இவரது சிறுகதைகளை அறிமுகம் செய்ததில் புதுப்புனல் மகிழ்வடைகிறது.



## கிரிசாந் கவிதை

சீராய்ப் பெய்நிலவு
மல்லிகை அரவம் நசுங்க
காதுகளில் முனகும் காற்று
திரி எரிந்த விளக்கின் அனல்
முதிரும் உலோக உடல்கள்
திசை பிரிந்த வாசனைகள்
கூர் உரசலில் குளிர் விறைக்கட்டும்

பின்
அனத்த யாருமற்ற கூடலில்
அதன் கள் வெளிச்சத்தில்
ஒரு பருவம் பெயர்ந்தது
என்ற போதும்.

கருணாகரன்

இனவன்முறையினால் வடக்கு நோக்கி வந்த மலையக மக்களுக்கான நீதி இன்னும் கிடைக்கவில்லை. அவர்கள் நம்பி வந்த தமிழ்ப் பிரதேசங்களிலேயே (வடக்கிலேயே) புறக்கணிக்கப்படுகிறார்கள். பல வழிகளிலும் ஒடுக்கப்படுகிறார்கள். அரச நிர்வாகம் தொடக்கம் வளப்பகிர்வு, சமூக நிலை எனப் பல வகையிலும் இந்த அநீதி தொடர்கிறது. இந்த மக்களுடைய பிரச்சினைகளைக் குறித்து இதுவரையிலும் கவனத்திற்குரிய மைய உரையாடல்களோ ஆய்வுகளோ நடக்கவில்லை. இந்தக் கட்டுரைத் தொடர் அதனைப் பொதுவெளியில் திறக்க முற்படுகிறது.

\- ஆசிரியர்



# தொடரும் அநீதி நீதி மறுப்பும் நீதி கோரலும்

“எத்தகைய அநீதியின் முன்னும் இறுக்கமான அமைதியோடு நில்லுங்கள் அவமானங்களைச் சகித்துக் கடவுங்கள் என்றால், நீதியின் முன்னே யார்?”

ஒரு இடைக்குறிப்பு -

இந்தத் தொடர், வடக்கு நோக்கி வந்த இந்திய வம்சாவழி மக்களின் சமூகப் பொருளாதார ஆய்வொன்றை மேற்கொள்வதற்கான முற்குறிப்புகளாகவே எழுதப்படுகிறது. இது வெளிவரத் தொடங்கியதிலிருந்து எதிரும் புதிருமான கருத்துகள் முன்வைக்கப்படுகின்றன. ஒரு சாரார் இது அவசியமானது. இப்போதாவது இந்த விடயம் பேசப்படுகிறதே. கட்டாயம் இது உரையாடப்படவே வேண்டும் என்கிறது. மறுதரப்போ, கடந்த காலத்தை மீளக் கிளறுவதால் பயனென்ன? நடந்தது நடந்து விட்டது. இனி நடக்கவேண்டியதைப் பார்ப்போம். இதுவரை நடந்ததையும் கடந்ததையும் விட இப்போதுள்ள துயரம் பெரிதல்ல. இன்றுள்ள நெருக்கடிகளையும் கடந்து விடுவோம் என்கிறது. இவர்களில் அந்தச் சமூகத்திலிருந்து படித்து பெரிய ஆளுமைகளாக வந்த சிலரும் உள்ளடங்குகின்றனர். இதை நாம் புரிந்து கொள்ள முடியும். மத்தியதர வர்க்கத்தினராக இவர்கள் வளர்ச்சியடையும் போது இத்தகைய குணாம்சமும் அதற்கான மனநிலையும் உருவாகுவது இயல்பு. அதையே இவர்கள் பிரதிபலிக்கிறார்கள். ஆனால் இவர்களுக்கு, மற்றவர்களுக்கு நிகரான பொறுப்பொன்றுண்டு. தமது சமூகத்துக்கு எதிராக இழைக்கப்படும் அநீதியை எதிர்ப்பதும் அந்த மக்களை மேம்படுத்துவதும் இந்தப் பொறுப்பிலுண்டு.

இதேவேளை இந்த மக்களுடைய காணிப் பிரச்சினை மற்றும் சமூக நிலைபற்றிய ஆய்வுகளையும் உரையாடல்களையும் வன்னி மாவட்டங்களில் மேற்கொள்வதற்கு, சில அமைப்புகள் முன்வந்துள்ளன. இது வரவேற்கத்தக்கது. ஆனால், அவை சுயாதீனமாக அந்தப் பணியை மேற்கொள்வதற்கு வழமையான அதிகார சக்திகள் முட்டுக்கட்டை போட்டுள்ளன. குறிப்பாக கிளிநொச்சியில் இந்தப் பணிகளில் ஈடுபட முன்வந்தோர் அச்சுறுத்தப்பட்டுள்ளனர். இதனால் இந்தப் பணிகளில் ஈடுபட முன்வந்த சில அமைப்புகள் பின்வாங்கியுள்ளன. இந்த நிலைமையில் எந்தப் பெரிய முன்னேற்றமும் எட்டப்படவில்லை. அதற்கான சாத்தியங்கள் இல்லை என்பதையே காட்டுகிறது.

ஆகவே இந்த மக்களுடைய பிரச்சினைகளையும் வாழ்க்கைச் சவால்களையும் நாம் உரத்த குரலில் பேசியே தீர வேண்டியுள்ளது.

(06)

போராட்டமும் போரும் தீவிரமடைய வவுனியா மாவட்டத்தில் குடியேற்றப்பட்டோர் அங்குமிங்குமாக அலையத் தொடங்கினர். இவர்களில் ஒரு தொகுதியினர் முல்லைத்தீவு மாவட்டத்தை நோக்கி நகர்ந்தனர். குறிப்பாக முத்தையன்கட்டுப் பக்கமாக. ஏனையோர் முல்லைத்தீவின் கிராமங்களை நோக்கிச் சென்றனர். ஒரு தொகுதியினர் வவுனியா வடக்கில் நெடுங்கேணியை அண்மித்த கிராமங்களில் தஞ்சமடைந்தனர். இன்னொரு தொகுதியினர் கிளிநொச்சிக்குச் சென்றனர்.

இப்படிச் சிதறிய மக்கள் உடனடியாகத் தங்களை அந்தந்த இடங்களில் நிலைப்படுத்திக் கொள்வதற்கு மிகச் சிரமப்பட்டனர். ஆனாலும் வேறு வழியின்றி அங்கே உள்ள நிலைமையையும் அந்தச் சூழலையும் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. இது அவர்களுடைய வளர்ச்சிப் பாதையில் மேலுமொரு தடங்கலை உண்டாக்கியது. திரும்பத் திரும்ப இடம்பெயர்ந்து அகதியாகுதல் என்பது இலகுவானதல்லவே!

ஆனாலும் கொஞ்சக் காலத்தில் அந்தந்த இடங்களில் ஒருவாறு தம்மை நிலைப்படுத்திக் கொண்டனர். இருந்தாலும் யுத்தம் அதற்கு முழுதாக அனுமதிக்கவில்லை. யுத்தச் சூழல் இவர்களுக்கு நிரந்தரக் காணிகள் கிடைப்பதையே தாமதப்படுத்தியது. இயக்கங்கள் முயற்சித்து சில சில குடியிருப்புகளை உருவாக்கின. 1990 க்குப் பின்னர் புலிகள் இவர்களுடைய இருப்பிடம் தொடர்பாகக் கூடுதலான கரிசனையைக் கொண்டிருந்தனர். அதற்கு முன்பு ஈரோஸ், ஈ.பி.ஆர்.எல்.எவ், புளொட் போன்றன கரிசனை காட்டின. 1990 களில் வவுனியாவில் புளொட்டும் ரெலோவும் இந்த மக்களில் ஒரு தொகுதியினருக்கு காணிகளை வழங்கும் நடவடிக்கையில் ஈடுபட்டன. இந்தச் சந்தர்ப்பத்தில் இவை இரண்டும் வவுனியா நகரப்பகுதியில் மட்டுமே இயங்கக் கூடியதாக இருந்ததால், நகரைச் சூழமைந்த பகுதிகளிலேயே இவர்களுக்கான காணிகள் வழங்கப்பட்டன. இதில் ஈரப் பெரிய குளம் 50 வீட்டுத்திட்டம், ஆச்சிபுரம், திருநாவற்குளம் போன்றவை முக்கியமானவை.

ஆனால் எந்தச் சந்தர்ப்பத்திலும் தமிழ் மிதவாத சக்திகளான தமிழரசுக்கட்சி, அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ், தமிழர் விடுதலைக் கூட்டணி போன்றன இந்த மக்களுடைய பிரச்சினைகளில் அக்கறைகொள்ளவேயில்லை. தமிழர் விடுதலைக் கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் 1977 இல் பலமாக இருந்த காலத்தில் கூட சொல்லிக் கொள்ளும் அளவுக்கு உருப்படியான எந்தத்திட்டத்தையும் எவ்விதமான நடவடிக்கையினையும் மேற்கொள்ளவில்லை.

ஆனால் அன்றும் சரி, இன்றும் சரி இந்த மக்களுடைய வாக்குகளை அறுவடை செய்வதில் இவை தந்திரமாக அக்கறை கொண்டிருக்கின்றன. இந்த அருவருப்பான உண்மையை தமிழ்ச் சமூகம் கண்டு கொண்டேயிருக்கிறது.

ஏராளம் புறக்கணிப்புகள், நெருக்கடிகள், துயரங்களின் மத்தியிலும் 1958 க்குப் பிறகு படிப்படியாக வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் ஆகிய மாவட்டங்களில் மலையக அல்லது இந்திய வம்சாவழிக் கிராமங்கள் உருவாகியிருந்தன. இதில் அதிகக் கிராமங்கள் வவுனியாவிலும் கிளிநொச்சியிலுமே உள்ளன. இந்தக் கிராமங்களில் முன்பு 100 வீதமும் இந்திய வம்சாவழி மக்களே குடியிருந்தனர். யுத்தம், இடப்பெயர்வுகள், கால நீட்சியினால் ஏற்பட்ட ஏனைய தொடர்பாடல்கள், உறவு போன்றவற்றினால் இப்பொழுது ஒரு சிறிய விகிதத்தில் பிற இடங்கள், ஊர்களைச் சேர்ந்தவர்களும் இந்தக் கிராமங்களில் வாழ்கின்றனர்.

ஆனாலும் இந்தக் கிராமங்கள் இந்திய வம்சாவழி மக்கள் வாழும் கிராமங்களாகவே உள்ளன. இதனைப் பார்க்கும்போதே இவற்றைப் புரிந்து கொள்ள முடியும்.

ஏனைய பிரதேசங்களின் வளர்ச்சியை இங்கே காண முடியாது என்பது இதில் முக்கியமானது. இதற்கான காரணத்தையும் உளவியல் பின்னணியையும் நாம் முற்பகுதிகளில் விளக்கியிருந்தோம். மாற்றான்தாய் மனப்பாங்கின் வெளிப்பாடாக இந்த மக்களை புறத்தியில் வைத்து நோக்குவதே இதற்குக் காரணம் என.

இந்த மக்களுடைய பிரச்சினைகளைப் பற்றிப் பொது வெளியில் பேச முற்பட்டால் அல்லது இவர்களுக்கு யாராவது குரல் கொடுக்க முன்வந்தால் அவர்கள் இனங்காணப்பட்டு ஒதுக்கப்படுகிறார்கள். அவமதிக்கப்படுகிறார்கள். நெருக்கடிக்குட்படுத்தப்படுகிறார்கள். வசைக்கப்படுகிறார்கள்.

இதற்கு அண்மையில் பகிரங்க வெளியில் நடந்த ஒரு உதாரணம், ஊடகவியலாளர் மு. தமிழ்ச்செல்வன் வெளிப்படுத்திய ஒரு செய்தியின் விளைவை எதிர்கொள்ள முடியாத பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரனின் வசைகூறலாகும்.

> **“போராட்டமும் போரும் தீவிரமடைய வவுனியா மாவட்டத்தில் குடியேற்றப்பட்டோர் அங்குமிங்குமாக அலையத் தொடங்கினர். இவர்களில் ஒரு தொகுதியினர் முல்லைத்தீவு மாவட்டத்தை நோக்கி நகர்ந்தனர். குறிப்பாக முத்தையன்கட்டுப் பக்கமாக. ஏனையோர் முல்லைத்தீவின் கிராமங்களை நோக்கிச் சென்றனர். ஒரு தொகுதியினர் வவுனியா வடக்கில் நெடுங்கேணியை அண்மித்த கிராமங்களில் தஞ்சமடைந்தனர். இன்னொரு தொகுதியினர் கிளிநொச்சிக்குச் சென்றனர்.”**

பெருமாள் கணேசன் என்ற அதிபர் தரமுடைய ஒருவருக்கு தகுதியான பாடசாலை நிர்வாகப் பொறுப்பை வழங்குவதில் காணப்பட்ட அநீதியை தமிழ்ச்செல்வன் வெளிப்படுத்தியிருந்தார். இந்த நியமனம் சமூகப் பின்னணியை மனதில் வைத்தே இழுத்தடிக்கப்படுவதாகவும் இந்த அநீதி பாரபட்சங்களின் அடிப்படையில் இழைக்கப்படுவதாகவும் தகுந்த ஆதாரங்களோடு (சான்றாதாரங்களோடு) தமிழ்ச்செல்வனால் முன்வைக்கப்பட்டது.

இதனால் உண்டான நிர்வாக மற்றும் அரசியல் நெருக்கடியை எதிர்கொள்ள முடியாமற் போனபோது தமிழ்ச்செல்வனை நோக்கி அவருடைய சமூக அடையாளத்தைப் பிரதிபலிக்கும் வசைச் சொல்லைப் பயன்படுத்தித் தரக்குறைவான முறையில் திட்டினார் சிறிதரன்.

இது மிகப் பெரிய சர்ச்சையை உருவாக்கியது. இதைக் கண்டித்து கிளிநொச்சி நகரில் மக்கள் போராட்டங்களை நடத்தினர். அத்துடன் இந்தப் பாரதூரமான விடயத்துக்கு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் தமிழரசுக் கட்சியும் பொறுப்புச் சொல்ல வேண்டும் என்று அதன் தலைவர் சம்மந்தனிடம் நேரில் கோரிக்கையும் விடப்பட்டது.

ஆனாலும் அந்தத் தரப்பிலிருந்து எந்தவிதமான பதிலும் அளிக்கப்படவில்லை. குறைந்த பட்சம் வருத்தம் கூடத் தெரிவிக்கப்படவில்லை. இனிமேல் இந்த மாதிரியான சம்பவங்கள் நடக்காது என்று உறுதி கூடக் கூறப்படவில்லை. இது இந்த மக்களுக்கு மிக வருத்தத்தையும் ஏமாற்றத்தையும் அளித்தது.



(தொடரும்)

சி.அ.யோதிலிங்கம்





> **இன்று இந்தியாவிற்கு ஒரு தேவை வந்துள்ளது. தமிழ் மக்களிற்கு இந்தியா தேவை என்பதை விட இந்தியாவிற்குத் தமிழ் மக்கள் தேவையாக உள்ளனர். இந்தியாவிற்கு இப்படி ஒரு தேவை வருகின்ற போது தமிழ் மக்கள் தங்களுடைய நிலையிலிருந்து எப்படிக் கையாள்வது என்பது தொடர்பான உபாயங்களைத் தொகுத்துச் செயற்பட வேண்டும். இந்தியாவின் நலன்களுக்கும் தமிழ் மக்களின் நலன்களுக்குமிடையே பொதுப் புள்ளியைக் கண்டுபிடித்து அதனைப் பலப்படுத்த வேண்டும்.**

# இரண்டாவது வட்டுக்கோட்டைத் தீர்மானம் இன்றைய சூழலுக்கு பொருத்தமானதா?

இரண்டாம் வட்டுக் கோட்டைத் தீர்மானம் என்ற தலைப்பில் ஒரு இணையவழி மாநாடு தமிழ் நாட்டுச் செயற்பாட்டாளர்களின் முயற்சியினால் கடந்த முதலாம் திகதி இடம்பெற்றது. இம் மாநாட்டுக்கு காசிஆனந்தன் தலைமை தாங்கியிருந் தார். சென்னைப் பல்கலைக்கழக பேராசி ரியர் இராமு மணி வண்ணன் இணைப் பாளராகக் கடமையாற்றினார். இதில் இலங்கையைச் சேர்ந்தவர்களும் தமிழ் நாட்டைச் சேர்ந்த பலரும் உரையாற் றியிருந்தனர். மூன்று மணி தொடக்கம் இரவு எட்டு மணி வரை மாநாடு நடை பெற்றதாக அறிய முடிகின்றது.



இலங்கையைப் பொறுத்த வரையில் தமிழ்த்தேசியக் கட்சிகள் அனைத்திற் கும் அழைப்புக்கள் விடுத்தபோதும் மூன்று தமிழ் தேசியக் கட்சிகளின் தலைமை மட்டத்தில் எவரும் கலந்து கொள்ளவில்லை. விக்கினேஸ்வரன் மட்டும் எழுத்தில் தனது கருத்துக்களை அனுப்பியதாகவும் அது மாநாட்டில் வாசிக்கப்பட்டதாகவும் செய்திகள் வந்துள்ளன. அரசியல் வாதிகள் என்ற வகையில் சிவாஜிலிங்கமும் அனந்தியும் மட்டுமே கலந்துகொண்டிருந்தனர். சிவில் சமூகத்தின் சார்பில் வேலன் சுவாமிகளும் கலந்து கொண்டிருந்தார். தமிழ் நாட்டில் இருந்து வைகோ, திருமாவளவன், கௌதமன் ஆகியோரும் சமுதாயக் கட்சியைச் சேர்ந்த கேரள செயற்பாட்டாளர் ஒருவரும் சமதா கட்சியைச் சேர்ந்த ஒருவரும் என முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டார்கள்.

அம் மாநாடு மிகச் சிறப்பாக நடைபெற்றதாக அறிந்து கொள்ள முடிகின்றது. அம் மாநாட்டில் கலந்து கொண்ட தமிழ் நாட்டினுடைய செயற்பாட்டாளர்கள் வலுவாக உரையாற்றியிருந்தார்கள். அங்கு நிகழ்த்தப்பட்ட உரை யின் சாராம்சம் இந்தியாவின் இருப்பு தற்போது இலங் கையில் இல்லை. அதைத் தொடர்ந்து தக்கவைக்க வேண்டும் என்றால் தமிழ் மக்களுடைய விடயத்தில் இந்தியா தலையிட வேண்டும். ஒன்றில் அது தனி நாடாக இருக்க வேண்டும். இல்லாவிடில் வலுவான சுயாட்சியாக இருக்க வேண்டும் என்பதாக இருந்தது. இவைதான் வலுவான பாதுகாப்பை இந்தியாவிற்குக் கொடுக்கும் என்றும் கூறப்பட்டது.

இம்மாநாட்டில் இரண்டாவது வட்டுக்கோட்டைத் தீர்மானமும் வெளியிடப்பட்டது. அந்தத் தீர்மானம் பெரிய கனதியாக இருந்ததென கூறி விட முடியாது. அதில் சிங்களக் குடியேற்றங்கள் தமிழர் தாயகத்தில் இடம் பெறுகின்றன. அதைத் தடுக்க வேண்டும்.



சுயநிர்ணய உரிமையுடன் கூடிய ஒரு அரசியல் தீர்வு தமிழ் மக்களுக்கு வழங்கப்படல் வேண்டும். இவற்றைச் செய்வதற்காக இந்தியா தலையிட வேண்டும் என்பன முக்கியமான விடயங்களாக இருந்தன.

இத்தகைய மாநாட்டினை முன்னெடுக்கும் போது செயற்பாட்டாளர்கள் சில முக்கியமான விடயங்களைக் கருத்தில் கொள்ளவேண்டும். இங்கு தமிழ் மக்களின் கடந்த காலத்து அரசியல் வரலாற்றுத் தொடர்ச்சியை கவனத்தில் கொள்ள வேண்டும். தமிழ் மக்களின் அர சியல் வரலாறு ஐந்து பெரிய காலகட்டத்திற்கூடாக வளர்ந்து வந்திருக்கிறது. முதலாவது 1833-1920 வரையான காலகட்டம். இரண்டாவது 1920-1949 வரையான காலகட்டம். மூன்றாவது 1949-1968 வரையான காலகட்டம். நான்காவது 1968- 2009 வரையான காலகட்டம். ஐந்தாவது 2009 ற்குப் பின்னரான காலகட்டம்.

முதலாவது காலகட்டத்தில் தமிழ் மக்கள் இன அரசியலை முன்னெடுக்கவில்லை. அரசியல் தளத்தில் இலங்கையர் என்ற அடையாளத்தையும் பண்பாட்டுத் தளத்தில் தமிழர்கள் என்ற அடையாளத்தையுமே முன்னெடுத்தனர். இதனால் தமிழ் மக்களின் தலைவர் களாகக் கருதப்பட்டவர்கள் தமிழர்களுக்கு மட்டும் தலைவர்களாக இருக்காமல் முழு இலங்கைக்கும் தலை வர்களாக இருந்தனர். சேர் முத்துக் குமாரசுவாமி, சேர் பொன் இராமநாதன், சேர் பொன் அருணாசலம் போன் றோர் இதில் முக்கியமானவர்களாவர். அதில் சேர் பொன் அருணாசலத்தின் பங்களிப்பு அளப்பரியது. அவர்தான் இலங்கையில் ஒரு சமூக மாற்ற அரசியலினு டைய ஆரம்ப கர்த்தாவாக இருந்தவர். சமூகமாற்ற அர சியலின் தந்தை என்றும் அவரைச் சொல்லிக் கொள்ள லாம். அவர்தான் இலங்கைத் தேசிய இயக்கத்தினுடைய தந்தையாகவும் விளங்கினார். இலங்கைத் தேசிய காங்கிரஸ் உருவாக்கப்பட்டபோது அதன் முதலாவது தலைவராகவும் தெரிவுசெய்யப்பட்டார். தமிழின அரசியலின் ஆரம்ப கர்த்தாவாகவும் விளங்கி னார். 1920 ஆம் ஆண்டு சிங்கள அரசியற் தலைவர்கள் கொடுத்த வாக்குறுதியில் இருந்து விலகியதால் இலங்கைத் தமிழர் மகாஜன சபை என்ற அமைப்பை ஆரம்பித்துச் செயற் பட்டார். உண்மையில் இன அரசியல் ஆரம்பிக்கப் பட்டு ஒரு நூற்றாண்டு ஆகின்றது. இது முதலாவது கட்டம்.

இரண்டாவது கட்டம் 1920-1949 வரையான காலகட்டமாகும். இந்தக் கால கட்டத்தில் இன அரசி யல் ஆரம்பிக்கப்பட்டு விட்டது. அருணாசலம் இன அரசியலை ஆரம் பித்தாலும் கூட அதை வளர்த்தவர் ஜீ.ஜீ. பொன்னம்பலம் ஆவார். அருணாசலம் 1924 ஆம் ஆண்டு இறந்து விட்டார். ஜீ.ஜீ. பொன் னம்பலம் ஒற்றையாட்சிக் கட்ட மைப்பை ஏற்றுக்கொண்டு அதற்குள் சம வாய்ப்பினைக் கோரும் அரசிய லைக் கொண்டு வந்தார். இதனால்தான் அவர் ஐம்பதுக்கு ஐம்பது கோரிக்கையை முன்வைத் தார். 1931 ஆம் ஆண்டு டொனமூர் அரசியல் யாப்புச் சீர்திருத்தம் முன் வைக்கப்பட்டிருந்தது. இது அரை வாசிப் பொறுப்பாட்சி முறையினை அறிமுகப்படுத்தியது. அந்த அரை வாசிப் பொறுப்பாட்சி முறை தமிழ் மக்களை அரச அதிகாரக் கட்டமைப் பிலிருந்து வெளியில் தள்ளி விட்டி ருந்தது.

1947 ஆம் ஆண்டு சோல்பரி அரசியல் யாப்பு அறிமுகப்படுத்தப்பட்டது. அவ் யாப் பின் மூலம் முழு அதிகாரமும் இலங்கையர்களின் கைக ளுக்கு மாற்றப்பட்டது. ஒற்றையாட்சி நிர்வாகக் கட்ட மைப்புக்கு பெரும் பான்மை தேர்தல் முறைக்குள்ளாக கைய ளிக்கப்பட்டமையினால் அது இயல்பாகவே பெரும்பான்மை சமூகத்திடம் அரசியல் அதிகாரத்தை வழங்கியது. தமிழ் மக்கள் அரச அதிகாரக் கட்டமைப் பிலிருந்து முழுமையாகத் தூக்கி வீசப்பட்டனர். இந்த நிலையில் தான் தந்தை செல்வா 1949 ஆம் ஆண்டு அகில இலங்கைத் தமிழரசுக் கட்சியை உருவாக்கினார். இதன் தோற்றத்துடன் தமிழர் அரசிய லின் மூன்றாவது கட்டம் ஆரம்பமாகியது.

இம் மூன்றாவது கட்டத்தில் தந்தை செல்வா மூன்று நகர்வுகளை முன்னெடுத்தார். ஒன்று இவ்வளவு காலம் இருந்த தமிழ் இன அரசியலை அவர் தமிழ்த் தேசிய அரசியலாக வளர்த்தெடுத்தார். தமிழர்களுடைய தாய கத்தை வரையறுத்து அதற்கு அதிகாரத்தைக் கோரு கின்ற சமஸ்டிக் கோரிக்கையை முன்வைத்தார். வடக்கு-கிழக்கு என தமிழர் தாயகத்தை வரையறுத்தார். இரண் டாவது, கொழும்பும் யாழ்ப்பாணமும் என்றிருந்த தமி ழரசியலை வடக்கு கிழக்கு என்று வளர்த்தெடுத்தார். மூன்றாவது, இவ்வளவு காலமும் பாராளுமன்றத்திலும் சட்ட சபையிலும் பேசுவதுதான் தமிழர் அரசியலாக இருந்தது. அதனை மாற்றி மக்களை இணைத்த போராட் டங்களை முன்னெடுத்தார். 1956 ஆம் ஆண்டு சத்தியாக் கிரகப் போராட்டம், 1956 ஆம் ஆண்டு திருமலை யாத் திரை 1957, 1958 சிறி எதிர்ப்புப் போராட் டங்கள், 1960 ஆம் ஆண்டு வட கிழக்கு கச்சேரிகளுக்கு முன்னால் நடந்த சத்தியாக்கிரகப் போராட்டங்கள் என்பவை இங்கு முக் கியமானவை. இப்போராட்டங்களே பண்டா செல்வா ஒப்பந்தம்(1957), டட்லி -செல்வா ஒப்பந்தம் (1965) என்பவற்றிற்குக் காரணங்களாக அமைந்தன.

1960 ஆம் ஆண்டு சத்தியாக் கிரகப் போராட்டத்திற் குப் பிறகு இந்தத் தேர்தல் அரசியற் கட்சிகளுக்கு ஊடாக மக்களினுடைய அரசியல் அபிலாசைகளை வென்றெ டுப்பது சாத்தியமில்லை. அதுவும் இலங்கையினுடைய அரசியற் கட்டமைப்பிற்குள் சாத்தியமில்லை என்ற உணர்வு இளைஞர்கள் மத்தியில் வளரத் தொடங்கியது.

(18ம் பக்கம் பார்க்க.......)

# என்ன உலகமடா பரமானந்தா?

தமிழ்க்கவி




> “என்ன சொல்லுறது.... அதான் காலத்துக்கும் உந்த திருட்டுப்புத்தி வராம இருக்கோணும் எண்டதுக்காக, தட்டேப்பைய தணல்ல போட்டு சூடாக்கிப்போட்டு மெள்ள மெதுவாத் தான் கையில லே..சா போட்டன் ஒரு சூடு. எடி செகசாலச் சிறுக்கி இந்த ஊரெடுபடக் கத்திவிட்டாளே. அதைத் தான் உங்களட்ட ஆரோ சொல்லியிருக்கினம் எண்டு நினைக்கிறன்.”

“என்ன வாசலுக்க ஆரோ நிக்கினம் போல. ஆ.. வாங்கோ என்ன விசயம் பைலுகளோட வந்திருக்கிறியள். என்னா நான் சிறுமிய வீட்டு வேலைக்கு வச்சிருக்கிறனோ.. உதார் சொன்னது அப்பிடி இஞ்ச ஒரு தரும் இல்லை. எது இந்தப் பெட்டையோ எட. இவள் சாப்பாட்டுக்கு வழியில்லை உங்கட வீட்டில் நிண்டா படிக்கலாம் சாப்பாடும் கிடைக்கும் வச்சிருங்கோ.. எண்டு தேப்பன்காரன் கொணந்து விட்டவனுங்கோ இப்ப ஆறு மாசமா நிக்கிறாள். பின்ன சாப்பாடோ. அதையேன் கேக்கிறியள் நான் பிறசர்காறியுங்கோ காலமை சமையலில்லை. பத்துமணிக்கு சட்டிபானை கழுவக் கொள்ள கிடக்கிற பழஞ்சோறெல்லாம் கறிச்சட்டிக்க போட்டுப்பிரட்டி, அங்கின ஹஹஹா உங்களட்ட சொன்னா என்னங்கோ எங்கட ஜிம்மிக்கு ஒத்துக் கொள்ளாதுங்கோ. அதுக்கு வைக்கேலாது. அவருக்கும் பழஞ்சோறு ஒத்துக் கொள்ளாதுங்கோ. முழுக்க உவள் மலருக்குத்தான் குடுப்பன். திண்டு போட்டு இங்கின தொட்டாட்டு வேலையளச் செய்யும். மத்தியானம் நானும் உந்த ரீவி சீரியலுகள்ள மறந்து போவன் இரவில சட்டி பானை கழுவக்கொள்ள மிஞ்சிறதெல்லாம் அவளுக்குத்தானே திண்டு போட்டு, உதில. ங..எங்க சாக்கைக் காணன். ஏய்.. ஜிம்மி சிக் எழும்பு உது மலர் படுக்கிற சாக்கெல்லே உதில கிடக்கிறாய்.. ஏதேன் உடம்புக்கு வந்திடப்போகுது.. ஹிஹி உந்த சாக்க இதில வாசல்ல போட்டுப் படுப்பாளுங்கோ. என்ன குறை. சந்தோசமாத்தான் இருக்கிறாள். என்ன அடிக்கிறனோ ஆர் சொன்ன உவள் பவளந்தான் பத்த வைச்சிருப்பாள் எனக்குத் தெரியும் பின்ன நீங்களும் பிள்ளப் பெத்து வளக்கிறியள்தானே? ஒரு குற்றங்குறையெண்டா கண்டிக்க மாட்டியளே. ங. அவன் தேப்பன் காரன் ஒரு நல்ல பழக்க வழக்கத்துக்க வரட்டுமெண்டுதானே இஞ்ச கொணந்து விட்டவன். அவன்ர நம்பிக்கைய நான் எப்பிடி பொய்யாக்கிறது.

“மலர் என்னடி வாய்பாத்துக் கொண்டு நிக்கிறா வந்தவைக்கு ஒரு கோப்பி போட்டுக் கொண்டாவனடி” என்னது கோப்பி போடத் தெரியுமோவோ? ஹ அவள் வீட்டில உள்ள முழுப்பேருக்கும் இடியப்பமே பிழிஞ்சு போடுவாள். எல்லாம் பழக்கி வைச்சிருக்கிறனாக்கும். இத்துனூண்டு பெட்டையோ? வாற பிரட்டாசி வந்தா ஒம்பது வயசு முடியுதுங்கோ. என்ன பெரிசா வேலையே உந்த முத்தம் வீடுவாசலக் கூட்டி வீட்டை மொப்பண்ணி வைப்பாள். அதுகும் விளக்குமாறு மொப்பரெல்லாம் நான் எடுத்துக் குடுக்கோணும். என்ன கதை சொல்லுறியள் எங்கயிருந்தாலும் வாழுற இடத்தை சுத்தமா வச்சிருக்கிறது ஒரு வேலையே. பாருங்க நீங்கள் திரும்பத்திரும்ப அடிக்கிறன் எண்ட கதைதான் கதைக்கிறியள். என்ன செய்தவள் எண்டத கேக்கிறியளில்ல. ஙா. சொல்லிறன் போன கிழமை என்ர பிரெண்டு லதாவுக்கு பிறந்தநாள் பார்ட்டி. கட்டாயம் போகத் தானே வேணும் ம். இனி போன இடத்தில எப்பன் அதை இதை குடிச்சு முசுப்பாத்தி பண்ணினதில எல்லாருங்கூடி கொஞ்சம் ஆட்டம் பாட்டந்தான். எனக்கு நாரிக்க கெளிச்சிட்டுதுங்கோ. எப்பன் சுடு தண்ணி வச்சுக்குளிச்சா நல்லமெண்டு இவர் சொன்னார். பின்ன ‘எடி மலர் உந்தப்பானைக்க எப்பன் சுடுதண்ணி வையெண்டன்.’ அவள் உந்த பிளாஸ்டிக் குடத்தைக் கொண்டுபோய் கிணத்தில தண்ணியள்ளிக் கொண்டு வந்தாள். என்னங்கோ அது ஒரு பதினைஞ்சு லீட்டர் தண்ணி பிடிச்சுதில்ல, அதைக் கொணந்தவள் உந்தப் படியேறமாட்டாம பொக்கெண்டு போட்டுடைச் சிட்டாளே. வீடு முத்தா தண்ணி எப்பிடி இருக்கும். கையில தும்புக்கட்டைதான் எம்பிட்டது. எடுத்து மெதுவாத் தான் ரெண்டு தட்டுத்தட்டினன். எடி அவள் தொண்டையத்துறந்து கத்த வெளிக்கிட்டுட்டாளே அட ஊரெல்லாங் கேக்கப் போகுதெண்டு அவளை இழுத்துக் கொண்டே பழைய சாமானுகள் போடுற அறைக்க போட்டுப் பூட்டியிட்டன். அழுது முடிய வெளியில விட்டன். வேற என்ன செய்ய முடியும் நான் செய்ததில என்ன பிழை. நாங்கள் ஒரு கவுரவமான குடும்பமுங்கோ நாலு பேர் நாலுவிதமாக் கதைக்கிறது சரியில்ல.

எங்களிட்ட பணம் பகட்டு இருக்கிறதில் பக்கதில, அயல்ல உள்ளவைக்கு கடுப்புத்தானுங்கோ அதுதான் தேவைவையில்லாத கதையள உங்களுக்குச் சொல்லியிருக்கினம். இனி இவளும் ஒரு அங்கிடு தொத்தியுங்கோ. உதில கடைக்குப் போயிற்று வாறதுக்கிடையில வீட்டில நடக்கிறதெல்லாம் கண்டவைக்கும் சொல்லிப் போடு வாள். பிள்ளையள் நல்ல பழக்கத்துக்கு வரவேணு மெண்டா இதுகளப் பொறுக்கத்தானே வேணும். படிச்ச மனிசர் நீங்க சொல்லுங்க ‘நோ பெயின் நோ கெயின்’ அடிச்சு வளக்காத பிள்ளையும் முறிச்சு வளக்காத முருங்கையும் சரிவராதெண்டு சொல்லுவினம். இல்லையோ..? ங்ஙா. நீங்கள் அதைக்கேக்கிறயளே. என்ர சின்னவன் கொலசிப்புக்கு ஆயத்தம் பண்ணுறான். மற்றவனுக்கும் ஓயெல் வருது. கடுமையாக படிக்குதுகள். அதுகளுக்கு போசாக்கா இருக்கோணும் எண்டு சத்துமா உருண்டை, லட்டு, மைசூர்பாகெண்டு அப்பக்காரம்மாவிட்ட சொல்லி செய்விச்சு போத்தலுகுள்ள போட்டு வச்சிருக்கிறன். இவளென்னண்டா நேற்று காலமை பழஞ்சோறு மிஞ்சயில்லயெண்டு இவளுக்குச் சாப்பாடு குடுக்கேல்ல. அப்பவும் நான் ஒரு பிளாக் கோப்பி குடுத்த நான். அப்பிடியென்னங்கோ பசி? அவள் போத் திலுக்க கிடந்த லட்டை திருடித் திண்டிட்டாளுங்கோ. நான் நல்ல ஆளெல்லே எண்ணித்தான் போட்டு வச்சனான் எனக்குத் தெரியாதே. நீங்கள் சொல்லுங்கோ திருடுற பழக்கம் நல்லதே ங..நாளைக்கு அவன் தேப்பன்காரன் வந்து என்னம்மா இப்பிடிப் பண்ணிட்டீங்களேம்மா எண்டு கேட்டா... என்ன சொல்லுறது.. அதான் காலத்துக்கும் உந்த திருட்டுப்புத்தி வராம இருக்கோணும் எண்டதுக்காக, தட்டேப்பைய தணல்ல போட்டு சூடாக்கிப் போட்டு மெள்ள மெதுவாத்தான் கையில லே..சா போட்டன் ஒரு சூடு. எடி செகசாலச் சிறுக்கி இந்த ஊரெடுபடக் கத்திவிட்டாளே. அதைத்தான் உங்களட்ட ஆரோ சொல்லியிருக்கினம் எண்டு நினைக்கிறன்.

ஆரார் எனக்குத் தெரியும் உவள் பவளம் மற்றது ஆரியமாலாட புரியன். வேற ஆர் எங்கட வீட்டைப் பாத்து எரியிறது. சும்மா விடுங்க சட்டம் என்னங்கோ சட்டம் ஆற்ற வீட்டில சமைக்க, பிள்ளைபாக்கவெண்டு வேலையாக்கள் இல்லை. ஏதோ ஓவியமான பெண்டுகள் கையக்காலை காத்தில ஆட்டி எக்ஸஸைஸ் செய்து போட்டு பொழுதுக்கும் திண்டு கொண்டிருக்கிறாளவை. நாலு வாளி தண்ணிய கிணத்தில இறைச்சு, குனிஞ்சு வளைஞ்சு வேலை செஞ்சாலே நல்லந்தான் பிறகு உந்த ஏழைபாளையளின்ர வயித்துப்பசிய ஆர் தீர்க்கிறது. நீங்கள் என்னவோ மனித உரிமை பேசி கடைசி உள்ளதும் போச்சுடா நொள்ளைக்கண்ணா எண்டு அந்தச் சனத்தின்ர வயித்தில அடிக்கப்போறியள். சொல்லிப்போட்டன். ■

## மூலிகைகளும் குழந்தைகளின் மருத்துவ சுக வாழ்வும்

டாக்டர், வெற்றிவேல் சக்திவேல்
B.S.M.S, P.G.Dip Pub Adm, M.Sc

குழந்தை வளர்ப்பு மிகப்பெரிய கலை. அதிலும் நோயில்லாத குழந்தையை வளர்த்தல் மிகப் பெரிய கலையாகும். சித்த மருத்துவத்தில் கலப்பு நீக்கம், நிறைப்பு என்பன சிறப்பாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.



காப்பு (Preventive)என்பது நோய் ஏற்படாமல் இருப்பதற்கு செய்யப்படும் உணவு மருந்துகளைக் குறிக்கும். நீக்கம் (Curative) என்பது வந்த நோயை நீக்கு வதற்காகப் பயன்படுத்தப்படும் மருந்துகள், சிகிச்சை முறைகளைக் குறிக்கும். நிறைப்பு என்பது உடலில் குன்றிய சத்துக்களைச் சீர்ப்படுத்த, இழந்த சக்தியை நிறைவு செய்யவும் வழங்கப்படும் உணவு, மருந்துகளைக் கொண்டதாக அமையும். கிரந்திகொதி யெண்ணைக் காப்பு மருத்துவமாகவும், தாமரை வளைய ஏலாதி மாத்திரை, மெருந்தியாதிக் குளிகை, அமுதாதிக் குளிகை, சென்னகரம்பழத்து நெய், அக்கர சஞ்சீவி மாத்திரை, கோரோசனைக் குளிகை, பொடுதலைக் குளிகை, கஸ்தூரி மிருத்தியாதி, பிரமி நெய், பூசினிநெய், பொன்னாங்காணி நெய், செவ்வகத்தி நெய், சஞ்சீவி யெண்ணெய், ஈருள்ளி யெண்ணெய், வாழைப்பூ நெய், செங்கத்தாறி யெண்ணெய், புங்கம் வேரெண்ணெய், மாது ளம்பழத்து நெய் போன்ற பல மருந்துகள் ‘நீக்கம்’ எனப் படும் குணப்படுத்தும் மருந்துகளாக பயன்படுத்தப் பட்டு வருகின்றது. மூலிகை இலைக் கஞ்சி, சத்துமாக் கஞ்சி என்பன உடலில் குன்றிய சத்துக்களை சீர்ப் படுத்த உதவும் நிறைப்பு முறையாகும். தமிழர் பாரம்பரியத்தில் மூலிகை முதலுதவிகளாக கை வைத்திய முறைகள் காலங்காலமாக பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

சித்த மருத்துவத்தில் மணி, மந்திரம், அவிழ்தம் என்பன சிறப்பாகக் கருதப்படுகின்றது. உடலை, உள்ளத்தை, ஆன்மாவைப் திணிக்கும் பிணிகளை அவிழ்ப்பது அவிழ்தம் எனப்படும். ஆவிழ்தம் என்பது பிரதானமாக மருந்துகள் வழி சிகிச்சை செய்தலைக் குறிக்கும்.

மணி என்பது இறைசக்தி (Spiritual power) மூலம் சிகிச்சை செய்வது. மந்திரம் என்பது மருத்துவரின் மனத்திறத்தையும் மனதின் தரத்தையும் குறிக்கும். இதற்கு தியானம், மந்திரச் சொல் (Sacred word), தவம், வழிபாடு மூலம் மனத்தைத் திடப்படுத்துவது, பார்வை பார்த்தல், மந்திர நீர் தெளித்தல், சோதிடம், திருநீறு இடல் என்பன உளச் சிகிச்சை முறைகளாகும். மந்திர ஒலி அதிர்வுகள் (Regular Rhythmic vibration through sacred words) மூலம் உள்ளத்தைச் சீர்ப்படுத்தும் முறைகள் தமிழர் மருத்து வத்தில் சிறப்பாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றதைக் காணலாம்.

தாய்ப்பால் குடிக்காத குழந்தைகளுக்கு அதிமதுரப் பொடியை தாயின் மார்பில் பூசி தாய்ப்பாலூட்ட வேண்டும். சீறி சீறி அழும் குழந்தைக்கு சிறுதிப்பலி, சிறு தேக்குத் தூளைப் பசுநெய் சேர்த்து மார்பில் பூசி தாய்ப்பாலூட்ட வேண்டும்.

குழந்தைகளுக்கு ஏற்படும், சளி, முட்டு, இருமல், தடிமன், காய்ச்சல் ஆகிய நிலைகளில் சிறுவர் கோரோசனை மாத்திரையை இஞ்சிச்சாறு, கற்பூரவள்ளிச் சாறு, தேன், முலைப்பால், கற்கண்டுத் தூள், துளசிச் சாறு போன்றவற்றில் கொடுக்கலாம்.

கிரந்தி எண்ணெய் தேய்த்து காலை இளம் வெயிலில் விடும்போது விற்றமின் “டி” தொகுக்கப்பட்டு தசைப் பலம், எலும்புப்பலம் அதிகரிப்பதோடு நோய் எதிர்ப்புச் சக்தியும் அதிகரிக்கும். கிரந்தி எண்ணெய் சிறிதளவு உள்ளே கொடுத்தும் வெளியே பூசியும் விடுவர். இதனால் மலச்சிக்கல், மாந்தம் வராமல் தடுப்பதுடன் கிரந்தி அவியல், விரணம், கிரந்திச்சளி, சொடுகு, கடி, கிரந்தி முட்டு ஆகியன தீரும் உழுந்து எண்ணெய் தேய்த்து தசைகளைப் பிடித்து விடும் போதும் தசைப் பலம், என்புப் பலம் அதிகரிக்கும்.

மாந்தம் ஏற்படும் நிலையில் கைமருந்தாக மாந்தக் கருக்கு குடிநீரில் வேப்பங்காம்பு, ஓமம், கறிவேப்பிலைக் காம்பு, மஞ்சள் நுணா, உத்தமாலிக் காம்பு, பொடுதலைக்காம்பு, ஒதியம் காம்பு, வசம்பு, மிளகு, உள்ளி, சீரக மருந்து அவித்துக் குடிப்பது தாய்மாருடைய வீட்டு வழக்கமாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இதில் மாந்தத்தில் பொடுதலை மிக முக்கியமான மூலிகையாகும்.

சிறுவர்களுக்கு சளி, இருமல் ஏற்படும்போது கற்பூரவள்ளி, தூதுவளை, இஞ்சி, மிளகு, நற்சீரகம், கடுக்காய், வல்லாரை வரைக்கு ஒரு கனைஞ்சு வீதம் எடுத்து அரைப் போத்தல் நீர்விட்டுக் காற்பங்காகக் காய்ச்சி இரண்டு தேக்கரண்டி வீதம் கற்கண்டுத் தூள் சேர்த்து ஒரு நாளைக்கு மூன்று தடவை கொடுக்கலாம். இதில் கற்பூரவள்ளி, இஞ்சி, மிளகு, தூதுவளை சளியை நீக்க உதவும். குழந்தை உள் விழுங்கிய சளியை மலத்தி னூடாக வெளிப்படுத்த கடுக்காய் உதவும்.

குழந்தைகளுக்கு திட உணவை கொடுக்கும் போதும், புதுப்புது உணவுகளை கொடுக்கும் போதும் மலச் சிக்கல் ஏற்படலாம். இரவில் தேங்காய்ப்பால் அரைத் தேக்கரண்டியை ஒரு தேக்கரண்டி வெந்நீரில் கலந்து கொடுக்கலாம். ஆறு மாதங்களுக்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு நாற்சத்துள்ள காய்கறிகளைச் சிறிது சிறிதாக நன்கு பிசைந்து கொடுப்ப துடன் வெந்நீர் அதிகளவில் கொடுப்பதும் நன்று.



திராட்சை வற்றலை வெந்நீரிலிட்டு ஆறிய பின்னர் கொடுக்கும் பொழுது மலக் கட்டு தீரு வதைக் காணலாம். ஏடுகள், ஈழத்து சித்த மருத்துவ நூல்களிலுள்ள இலக்கியச் சுவை, உணர்ச்சி யுடன் அமைந்த செய்யுள் நடை (Verse and Emotive prose)அறிவியல் உரை நடையில் (Scientific prose) எழுதி வெளியிடுவ தும், மக்களிடம் அவை சென்றடைவதும் காலத்தின் கட்டாயமாகும்.

(வளரும்)

மூலிகை சுகவாழ்வு நிறுவனம்,
கிளவ் வீதி, தெல்லிப்பளை.





# பிணங்களின் தேசம்

செல்வழகன்

**இலங்கையில் இப்போது நான்காவது அலை ஏற்பட்டுள்ளதாகக் கூறுகிறார் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத் தலைவி பத்மா குணரத்ன. அல்பா வைரஸ் மூன்றாவது அலையென்றால் டெல்ரா வைரஸின் ஆதிக்கம் நிலவும் இந்தக் காலத்தை நான்காவது அலையடிக்கும் காலமாக அவர் அடையாளம் காண்கிறார். இந்தியாவில் நிலவியது போல, டெல்ரா வைரஸின் தாக்கத்தால் வீடுகளிலும், வீதிகளிலும் வீழ்ந்து இறப்பவர்களின் தொகை அதிகரித்துள்ளது.**

இலங்கையை சிவபூமி என்று சொன்ன காலம் ஒன்றுண்டு. யுத்தம் தீவிரம் பெற்ற காலத்தில் அது சிவபூமி அல்ல சவபூமி என்று சொன்னார்கள். இலங்கை சுதந்திரம் பெற்ற நாள் முதல் இன்று வரையான வரலாற்றைப் பார்த்தால் வழித்தடமெங்கும் பிணங்கள் மிகுந்த வரலாற்றைக் கண்டு கொள்ளலாம். 1958 இல் தொடங்கிய இனக் கலவரம் முதலில் பிணங்களை விதைத்தது. தொடர்ந்து 1971 இல் ஜே.வி.பி. கிளர்ச்சியில் இளைஞர்கள் பலர் காவு கொள்ளப்பட்டனர். 74,77,78,81 ஆகிய ஆண்டுகளில் தமிழர் பிரதேசங்களில் நிகழ்த்தப்பட்ட அரச வன்முறைகளில் பலரது உயிர்கள் பறிக்கப்பட்டன. சொத்துக்கள் அழிக்கப்பட்டன.

1983 இல் திருநெல்வேலியில் நடத்தப்பட்ட கண்ணிவெடியில் சிக்கி 13 இராணுவத்தினர் கொல்லப்பட்டு, அந்த உடல்கள் தென் பகுதிக்குச் சென்ற போது கோரத்தாண்டவம் ஆடிய இனக் கலவரத்தால் தமிழர்களின் ஆயிரக் கணக்கான பிணங்கள் தென்பகுதி வீதியெங்கணும் நிறைந்தன.

1983 இல் தொடங்கிய யுத்தம் 2009 இல் நிறைவு பெறும் வரை இலட்சம் தாண்டிய மனித உயிர்கள் இலங்கை முழுவதும் காவு கொள்ளப்பட்டன. இடையில் 1988 - 1990 வரையான காலத்துக்குள் நடந்த இரண்டாவது ஜே.வி.பி கிளர்ச்சியின் போதும், வாவிகளிலும், ஆறுகளிலும், தெருக்களிலும் சிங்கள இளைஞர்களின் பிணங்கள் மிதந்தன.

யுத்தம் ஓய்ந்த சில ஆண்டுகள் அச்சந் தருவதாகவும், ஆங்காங்கே காணாமல் போதல்களுமாகக் கழிந்த போதும், பின்னர் ஓரளவு நிம்மதியான வாழ்க்கை கிடைத்த சந்தோசத்தில் மக்கள் மிதந்தனர். அந்த மகிழ்ச்சி நீடிக்கவில்லை. யாரும் எதிர்பார்க்காத வகையில் 2018 இல் நடந்தேறிய குண்டுவெடிப்புக்களில் சுமார் நானூறு வரையான உயிர்கள் காவு கொள்ளப்பட்டதோடு மீண்டும் அச்சநிலை தோற்றுவிக்கப்பட்டது.

அந்த அச்ச நிலையில் இருந்து மீள்வதற்குள் கொரோனா இலங்கையைச் சூழ்ந்து கௌவியுள்ளது. இத்தாலியிலும், ஸ்பெயினிலும், பின்னர் பிரிட்டன், அமெரிக்காவிலும் கொரோனா கோரத்தாண்டவம் ஆடிய போது இலங்கையின் ஆட்சியாளர்கள் கொலரை உயர்த்தி மார்தட்டிக் கொண்டார்கள். இறுக்கமான நடைமுறைகளால் கொரோனா தொற்று ஏற்படாமல் பாதுகாத்துக் கொண்டதாகப் பெருமை பேசினார்கள். அது உண்மைதான்.

ஆனால் இலங்கையைத் திறந்து விட எடுத்த நடவடிக்கையால், இலகுவாகக் கொரோனா இலங்கைக்குள் நுழைந்தது. இறுக்கமான கட்டுப்பாடுகள் பொருளாதாரத்தைப் படுக்க வைத்ததன் விளைவாக, கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டன. குடுகுடுப்பைக்காரன் சொல்வது போல, சுகாதாரத் தரப்புக்கள் ஒவ்வொரு நாளும், அரசாங்கத்தையும், மக்களையும் எச்சரித்து அறிக்கைகளை வெளியிட்ட போதும், அவை எவையும் எடுபடவில்லை. ஒரு மாரித் தவளையின் கத்தல் போல சுகாதாரத் தரப்பினரின் குரலை அரசாங்கம் கிஞ்சித்தும் கருத்தில் எடுக்கவில்லை.

விமான நிலையங்களை சில நாட்களுக்குப் பூட்டுமாறு முதலில் சுகாதாரத் தரப்புக்கள் கேட்டன. பின்னர் புத்தாண்டுக்கு நாட்டை முடக்குமாறு கேட்டன. நிலைமை மோசமடைய ஊரடங்கை அமுல்படுத்துமாறும், நாட்டை முழுமையாக முடக்குமாறும் கேட்டன. கேட்டுக் கொண்டே இருக்கின்றன. இறுதி அஸ்திரமாகவே ஊரடங்கை அரசாங்கம் அமுல்படுத்தும் என்றும் அமைச்சர் ஹெகலிய ரம்புக்வல இப்போது கூறுகிறார்.

“நாங்கள் செய்பவற்றுக்கான பலனை நாங்கள்தான் அனுபவிக்க வேண்டும். இந்த அரசாங்கத்தைக் கொண்டு வந்த நாங்களும் மக்களுமே பலனை அனுபவிக்கிறோம். மக்கள் மனங்களில் இருந்து ராஜபக்ஷக்களே நீங்கள் மறையப் போகிறீர்கள்”என்று அரற்றுகிறார். இந்த அரசாங்கத்தை ஆட்சி பீடத்துக்குக் கொண்டு வருவதில் பங்காற்றிய முருத்தட்டுவே ஆனந்த தேரர். பிணங்களை எரிப்பதற்குப் பாண் போறணைகளையே தயார் செய்ய வேண்டியுள்ளது என்றும் அவர் எள்ளி நகையாடியுள்ளார்.

இலங்கையில் இப்போது நான்காவது அலை ஏற்பட்டுள்ளதாகக் கூறுகிறார் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத் தலைவி பத்மா குணரத்ன. அல்பா வைரஸ் மூன்றாவது அலையென்றால் டெல்ரா வைரஸின் ஆதிக்கம் நிலவும் இந்தக் காலத்தை நான்காவது அலையடிக்கும் காலமாக அவர் அடையாளம் காண்கிறார். இந்தியாவில் நிலவியது போல, டெல்ரா வைரஸின் தாக்கத்தால் வீடுகளிலும், வீதிகளிலும் வீழ்ந்து இறப்பவர்களின் தொகை அதிகரித்துள்ளது.

சுகாதாரத் தரப்புகளால் சமாளிக்க முடியாத அளவுக்கு - கொள்ளளவை விட அதிகமாக - மருத்துவமனைகளில் தொற்றாளர்கள் அதிகரித்துள்ளனர். ஒட்சிசன் தேவைப்படுவோர் தொகை காரணமாக ஒட்சிசனைப் பெறுவதில் பாரிய தட்டுப்பாட்டு நிலைமை காணப்படுவதாக சுகாதாரத் தரப்புக்கள் கூறுகின்றன. நாட்டில் கொரோனாவால் இறப்போரின் எண்ணிக்கை நூற்றைக் கடந்து செல்கிறது. இப்பத்தி எழுதப்படுகையில் மொத்தச் சாவு 6 ஆயிரத்தை நெருங்குகிறது. கொரோனா தொற்றுக் காரணமாக இலங்கையில் 23 ஆயிரம் பேர் வரை உயிரிழக்கச் சாத்தியம் உண்டு என்றும், தினசரி மரணங்கள் இருநூறைக் கடக்கும் என்றும் எச்சரிக்கப்படுகிறது. சாதாரணமாக விபத்தில் இறப்பவர், நாய் இறந்த சோகத்தில் உணவு உண்ணாத நிலையில் இறந்தவர், குளவி கொட்டி இறந்தவர், தவறி விழுந்து நீரில் மூழ்கி இறந்தவர் என வேறு காரணங்களால் இறந்தவர்களுக்கும் கூட கொரோனாத் தொற்று இருப்பதாக கண்டறியப்பட்டுள்ளது எனில், சமூகத்தில் எத்தனை ஆயிரம் பேருக்குத் தொற்று இருக்கும் என்பதை இலகுவாக ஊகிக்கலாம். சிறியளவிலான பரிசோதனைகளின் விளைவாகவே இரண்டாயிரத்துக்கு மேற்பட்டவர்கள் கண்டறியப்படுகின்றனர். சமூகம் முழுமைக்குமான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டால் இந்த எண்ணிக்கை பத்தாயிரக்கணக்காகலாம் என்கின்றனர் சுகாதாரத் தரப்பினர்.

இந்தச் சூழலில் மருத்துவமனைகளில் பிணங்கள் குவிகின்றன. அவற்றை மின் மயானங்களில் எரிப்பதற்கு போதிய வசதிகள் இல்லை. யாழ்ப்பாணத்தில் கோம்பயன்மணல் மயானத்தில் ஆகக் கூடியது 5 பிணங்களையே எரிக்க முடியும் என்கிறார் மாநகர மேயர். இதுபோலத்தான் பல இடங்களிலும். கொத்துக் கொத்தாக மரணங்கள் நிகழும் போது, அவற்றை எரிப்பது, புதைப்பது போன்ற பெரும் பிரச்சினையும் நாட்டை உலுக்கப் போகிறது. ஆம்! மீண்டும் பிணங்கள் மிதக்கும் தேசமாகிறது நம் திருநாடு. ■



# அதிர்புனைவாக்க அகில சினிமா

வெ. அருட்குமரன்



இந்த வார அதிர்புனைவாக்க அகில சினிமாவில் மனித வரலாற்றில் அறிவியலை மிகத் துல்லியமாக எடுத்துரைத்த திரைப்படமான “2001 : ஏ ஸ்பேஸ் ஒடிசி” பற்றி நோக்குவோம்.

இந்தப் பிரமாதமான வரலாற்றுத் துல்லியமான அறிவியல் கதையை எழுதியவர் “ஆர்த்தர் கிளார்க்” என்பவர். இதன் தொடர்ச்சியாக 2010 கான்டக்ட் மற்றும் 2061 என 3001 ஆண்டு வரை இந்தக் கதையை எடுத்துச் சென்றிருக்கிறார் கிளார்க். ஆனால் அடுத்த பாகங்களை கியூபிரிக் டைரக்ட் செய்யவில்லை.

இப்போது இந்தத் திரைப்படத்தின் கதையை நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். அந்தப் படம் திரையிடப்பட்ட போது இருந்த வரலாறு மற்றும் அறிவியல் நிலைமையையும் விளக்குகிறேன். அப்போதுதான் நான் ஏன் இதை இப்படிப் புகழ்கிறேன் என்று உங்களுக்குப் புரியும்.

உங்களுக்கு நான் கொடுக்கும் கதை புரியவில்லை என்றால் அந்தத் திரைப் படத்தை நீங்கள் பார்ப்பது சுத்தமாகப் புரியாது. ஆனால் என்னுடைய இந்தப் பதிவைப் படித்துவிட்டு அந்தத் திரைப் படத்தைப் பாருங்கள், குறிப்பாக 50 ஆண்டுகளுக்கு முன்பே ஒருவர் இப்படி ஒரு மகா உன்னதப் படம் எடுத்திருக்கிறார் என்றால் நம்புவீர்களா?

நியூயோர்க் நகரத்தில் “ஸ்பேஸ் ஒடிசி” திரையிடப்பட்டது. அறிவியல் அப்பொழுது வளர்ந்த அந்த நாட்டிலேயே ஒருவருக்கும் அந்தத் திரைப்படம் புரியவில்லை எனத் தியேட்டரை விட்டு எல்லோரும் தலை தெறிக்க வெளியே ஓடி வந்தார்கள்.

விண்வெளிப் பயணம் பற்றிய இந்தத் திரைப்படத்தை இப்போது கூட நீங்கள் பார்த்தால் அவ்வளவு லேசில் புரியாது. கதைக்குள் போவதற்கு முன் மறுபடியும் நினைவூட்டுகிறேன், ஆண்டு 1968 இல் மனிதன் இன்னும் சந்திரனில் காலடி எடுத்து வைக்கவில்லை என்பதை நினைவில் கொள்ளவேண்டும்.

கதைக்குள் போவதற்கு முன் விண்வெளிப்பயணம், விண்வெளி உடை, ஒரு விண்வெளிக் கப்பல் ஏன் அதில் உள்ள ஒரு சிறு பேனா கூட எப்படி வேலை செய்யும் என்று டைரக்டர் அப்போதே கற்பனை செய்திருப்பார்.
எல்லாவற்றையும் விட மிக முக்கியம் ஆபிரிக்கக் காடுகளில் மனித இனம் உருவானது தொடங்கி செயற்கை நுண்ணறிவு வரை இந்தத் திரைப்படத்தில் எல்லா விஷயங்களையும் அறிவியல் பூர்வமாக துல்லியமாகக் காட்டியிருப்பார் கியூபிரிக் என்ற திரைப்பட மேதை.

படத்தின் மிக முக்கியமான கதாபாத்திரம் “ஹால்” என்ற கம்ப்யூட்டர்! இந்தக் கம்ப்யூட்டர் ஒரு உணர்வு பூர்வமான மனித அறிவைத் தாண்டிய ஒரு செயற்கை நுண்ணறிவுக் கம்ப்யூட்டர்.

முதலில் ஆபிரிக்க சபானா காடுகளுக்குச் செல்கிறோம். அங்கு மனித இனம் ஆரம்ப கட்டத்தில் இருக்கிறது. கிட்டத்தட்ட ஹோமினோயிட்ஸ் என்னும் மனிதக் குரங்குக்கும் மனிதனுக்கும் இடைப்பட்ட ஒரு காலகட்டம். அங்கே இரண்டு கூட்டங்கள் சண்டையிட்டுக் கொண்டிருந்தனர். காட்டுக்குள் ஒரு குறிப்பிட்ட இடத்தில் ஒரு கருங்கல் பாலிஷ் செய்யப்பட்ட பலகை. “மொனோலிதிக்” என்று அழைக்கப்படும் ஒரு பொருள் அந்தத் தோற்றுப் போன குரங்குக் கூட்டம் முன்னே வந்து நிற்கிறது.

அந்தப் பலகையைத் தொட்டுப் பார்த்த பிறகு குரங்குக் கூட்டத்திற்கு அறிவு வந்து எலும்புகளை வைத்து ஆயுதம் தயாரிக்கிறது. அந்த அறிவுடன் சென்று எதிரிக் கூட்டத்தை தோற்கடித்து வெற்றி கொள்கிறது. அந்தப் பலகை மனித அறிவைக் கொடுத்துள்ளது என்று பொருள் கொள்க.

உண்மையில் இந்தப் பலகைக்கு பதிலாக ஒரு முக்கோண வடிவப் பிரமிட்டுத் தான் கிளார்க் தனது நாவலில் எழுதி இருந்தார். திரைப்படத்தில் இது பலகையாக மாற்றப்பட்டு மொத்தம் நான்கு முறை நான்கு வெவ்வேறு காலகட்டத்தில் நான்கு வகையான இடங்களில் தோன்றுகிறது. அடுத்த காட்சி மனிதர்கள் விண்வெளிக்கு பல ஆண்டுகள் கழித்து பயணமாகிறார்கள். இந்த விண்வெளிப் பயணம் இரண்டு முக்கியமான விஞ்ஞானிகள் மற்றுமொரு செயற்கை நுண்ணறிவுக் கம்ப்யூட்டர் அதன் பெயர் ஹால் 2000. விண்வெளிப் பயணத்தை இந்த ஹால் கம்ப்யூட்டர் தான் வழிநடத்திச் செல்கிறது. சந்திரனில் மீண்டும் அந்தப் பலகை தோன்றுகிறது. இந்தக் கட்டத்தில் மனிதன் சந்திரன் செல்லவில்லை என்பதை நினைவில் கொள்ளவேண்டும். எல்லாம் திட்டமிட்டபடி ஒழுங்காக நடந்து கொண்டிருக்கிறது. மொத்த விண்வெளிப் பயணத்தையும் ஹால் கம்ப்யூட்டர், வழி நடத்துகிறது. அது எல்லோருடனும் பேசுகிறது. அடுத்தது, இந்த விண்வெளிப்பயணம் ஜூபிடர் ஐ நோக்கி செல்கிறது. ஜூபிடர் ஐ நெருங்கும் பொழுது ஒரு வித்தியாசமான அனுபவங்களை உணருகிறார்கள், விஞ்ஞானிகள் மற்றும் விண்வெளி வீரர்கள்!




இந்த ஹால் கம்ப்யூட்டர் தவறான கட்டளைகளை, தகவல்களை ஜூபிடர் நெருங்கும்போது விண்வெளி வீரர்களுக்கு, கொடுக்கிறது. கம்ப்யூட்டரில் ஏதோ கோளாறு என்று கண்டுபிடித்து அதன் செயற்பாட்டை நிறுத்தி விட வேண்டும் என்று விஞ்ஞானிகள் முடிவு செய்கிறார்கள். அவர்கள் உதட்டசைவின் மூலம் ஹால் கம்ப்யூட்டர் என்னும் ரோபோ அவர்கள் திட்டத்தை புரிந்து கொள்கிறது. ஒரு விஞ்ஞானியை விண்வெளிக்கு வெளியே வர வைத்து தீர்த்துக் கட்டுகிறது. இன்னொரு விஞ்ஞானி வெளியே வந்து உடலை மீட்கிறார். அப்போது கதவை மூடி விடுகிறது கம்ப்யூட்டர், படாதபாடுபட்டு உள்ளே நுழைகிறார்.

அடுத்து பயணம் ஜூபிடர் இல் மீண்டும் அந்தக் கரும்பலகையைப் பார்க்கிறார்கள். அது அப்போதுதான் புரிகிறது அந்தக் கரும்பலகை மீண்டும் தொட்ட பின்தான் ஹால் கம்ப்யூட்டர் ரோபோ எனப்பட்ட ஒரு மேம்பட்ட அறிவைப் பெற்று மனிதர்களை மீறிச் செயல்படுகிறது என

இப்போது பைமெண் என்ற விஞ்ஞானி மட்டும் ஜூபிடர் வளிமண்டலத்தில் ஐரோப்பா என்ற துணைக்கோள் அருகில் நுழைகிறார். இப்போது திடீரென்று அவர் ஒரு அறைக்குள் நுழைகிறார், அங்கே அவர் தன் வயது மாறுவதைப் பார்க்கிறார். மீண்டும் அந்தக் கரும்பலகை தோன்றுகிறது.

எங்குபார்த்தாலும் நட்சத்திரங்கள் என்று அவர் கூறும் வாக்கியத்தை ஹால் கம்ப்யூட்டர் கேட்கிறது.

அவர் விண்வெளியில் இருந்து திடீரென்று ஒரு அறைக்குள் புகுந்த பின்பு வேறு ஒரு உலகத்துக்குச் சென்று விடுகிறார். அவ்வளவுதான் படம். ஏதாவது புரிகிறதா, நமக்கும் ஒரு கரும்பலகை வந்தால்தான் இந்தத் திரைப்படம் புரியும்.

இப்போது நான் அந்த அறிவியல் தத்துவத்தை விளக்குகிறேன். அந்தக் கரும்பலகை முதலில் தோன்றிய போது மனிதன் அறிவைப் பெற்று விடுகிறான். இரண்டாம் முறை தோன்றிய போது கம்ப்யூட்டர் ரோபோ அறிவைப் பெற்று விடுகிறது. மூன்றாம் முறை தோன்றும் போது மனிதன் காலப் பயணம் செய்கிறான்.

நான்காவது முறை அவன் வேறொரு பிரபஞ்சத்துக்குச் சென்றுவிடுகிறான். ஐன்ஸ்டின் சார்பியல் கோட்பாடு பிரபஞ்சம் வளைந்து இருக்கிறது செயல் புவியீர்ப்பு விசை என்பது கனமான பொருள் ஸ்பேஸ் டைம் என்ற ஒரு இடத்தில் ஏற்படுத்தும் பள்ளம் தான் புவியீர்ப்பு விசை என்று கூறுகிறார்.

ஜூபிடர் ஒரு கருந்துளை ரேஞ்சுக்கு மிகப் பெரிய பள்ளத்தை ஏற்படுத்துவதால் அங்கு புளுத்துளை என்னும் ஒரு குழாய் போன்ற பள்ளத்தில் விழுந்து வேறொரு பிரபஞ்சத்துக்குச் சென்றுவிடுகிறார்.

இதுதான் காலப்பயணம். கிட்டத்தட்ட இதே கதைதான் கிறிஸ்டோபர் நோலன் எடுத்த இன்டர்ஸ்டெல்லர் திரைப்படம். 2018 இன்டர்ஸ்டெல்லர் படக்கதை புரியவில்லை. ஆனால் அந்தக் கதை 68 ஆம் வருடம் கியூபிரீக் என்ற மேதை “ஸ்பேஸ் ஒடிசி” என்று எடுத்து இருக்கும்போது கண்டிப்பாக யாருக்கும் புரிந்து இருக்காது.

பிற்பாடு சந்திரனில் மனிதன் காலடி எடுத்து வைத்தது, விண்வெளிப்பயணம் சென்றது, ஏன் இன்று இலான் மஸ்க் ஸ்பேஸ் எக்ஸ் விண்வெளிப்பயணம் மூலம் செவ்வாய்க் கிரகத்தில் மனிதனை குடியேற்றுவது போன்ற அத்தனை விஷயங்களையும் அந்தத் திரைப்படத்தில் அன்றே சொல்லப்பட்டுவிட்டது என்றால் நம்புவீர்களா!



தமிழரான விஞ்ஞானி டாக்டர் சுப்பிரமணியம் சந்திரசேகர் என்பவரை இன்ஸ்பிரேஷனாக வைத்து சுப்பிரமணியம்பிள்ளை என்ற தமிழ்ப் பெயருடன் ஒரு விஞ்ஞானி கண்டுபிடிக்கும் ஹால் கம்ப்யூட்டர்தான் அறிவியலில் ஆதர்சம் என கதையில் காட்டுவது என்னைப் புல்லரிக்க வைக்கிறது! தமிழர் இல்லாமல் மனித அறிவியல் வரலாறு எழுத முடியாது என்பதற்கு இந்தத் திரைப்படமே ஒரு சான்று. ■

ந.மயூரரூபன்

# எழுத்தின் இயங்கியல்

## வரலாற்று பொதுமையும் புனைதலும்

ஒரு தனியனையும் சமூகத்தையும் பிரித்துப் பார்க்க முடியாது. தனியனுக்கு சமூகம் அவசியமானது. அதே போல் சமூகத்திற்கு தனியன் அவசியம். தனிநபர்களின் அடையாளங்கள் தனித்தனியாக நின்று விடுவதில்லை. அவை ஒரு திரட்சியின் ஒவ்வொரு கூறுகளாகவே அடையாளங் காணப்படக்கூடியன. ஒரு தனியன் பிறக்கும் போது, ஒரு குடும்பத்தின், ஒரு சமூகத்தின் ஒரு தேசத்தின் இயக்கத்திற்குள் உள்வாங்கப்பட்டு விடுகிறான். வரலாற்றின் உருவாக்கத்தில் சமூகமும் தனிநபரும் என்கிற அத்தியாயத்தில் ஈ.எச். கார் இவை பற்றி விரிவாகப் பேசுகிறார். அவர் சொல்வது போல ஒருவன் பேசுகின்ற மொழி அவனுடைய தனிப்பட்ட தயாரிப்பல்ல, அவன் வளர்கின்ற சூழல், அவனுக்குள் உருவாகின்ற கருத்துக்கள் (மற்றவர்களால் அவனுக்குக் கிடைப்பவை / கற்பவை) இவை அவனது சமூகத்திலிருந்து அவனுக்கு கிடைப்பவை / புகட்டப்படுபவை.

ஒரு தனியன் ஒரு சமூகத் தயாரிப்பாகவே பெரும்பாலும் காட்சி தருகிறான். வரலாற்றாசிரியனும் பல வேளைகளில் சமூகத் தயாரிப்பைப் பிரதிபலிக்கும் நிலை காணப்பட்டாலும் வரலாற்றாசிரியனின் பாத்திரம் அதுவல்ல. ஒரு எழுத்தாளன் எவ்வாறு இதிலிருந்து தப்பித்துக் கொள்ள முடியும்.?

ஒரு எழுத்தாளனின் எழுத்தில் சமூகக்கூட்டிணைவின் கூறுகள் இருக்கின்றன. அவ்வாறுதான் இருக்க முடியும். ஒரு தனிமனிதன் தனித்த சிந்தனை, தனித்த வெளிப்பாடு, தனித்த இலக்கும் என்பது, பொருள் தருவதாக அமைய முடியாது. நான் அல்லது இன்னொருவன் ஒரு தனியனின் வெளிப்பாட்டு வடிவம் தொடர்பாகக் கவனமெடுக்கத் தொடங்கும் போதே கூட்டிணைவின் இயல்புகள் மேற்கிளம்பி வரத் தொடங்கி விடுகின்றன.

அந்த வகையில் எல்லா வகையான எழுத்து வடிவங்களும் வரலாற்றுப் பொதுமைப்படுத்தல்களை ஏனைய கூறுகளைப் போலவே கொண்டிருக்கின்றன.

இது இரண்டு வகையில் நிகழ முடியும்.

*01.* இயல்பான முறையில் பொதுமையாக்கம் நிகழ்த்தல்.

*02.* வலிந்து பொதுமையாக்கத்தைக் கொண்டுவருதல்.

எடுத்துக் காட்டாக, சுதந்திர மனிதன் என்கிற படிமத்தைத் தரக்கூடிய 'ரொபின்சன் குரூசோ' பாத்திரத்தைச் சொல்லிக் கொள்ளலாம். குரூசோவின் பாத்திர வடிவமைப்பு, பைபிளைக் கைகளில் ஏந்திய வண்ணம் ஒவ்வொரு இடமாகச் செல்கின்ற தன்மை என்பது 'குரூசோ' என்கிற பாத்திரத்தை உருவாக்கிய எழுத்தாளரின் சமூகப் பொது அடையாளங்களின் இயல்பிலானது.

இவ்வாறு வரலாற்றுக் கருத்து நிலைகள் பொதுமையாக்கம் பெறுகின்ற போது அந்த வரலாற்றைப் பேசுகின்ற ஊடகங்கள் (அவை வரலாற்று நூல்களாக, குறிப்புக்களாக, கல்வெட்டுக்களாக, ஓவியங்களாக, பாடல்களாக, நாவல்களாக, காணி வரைபடங்கள் குறிப்புக்களாக எதுவுமாக இருக்கலாம்.) அவற்றை யாருக்காகப் பேசுகின்றன? ஏன் பேசுகின்றன? என்பது மிக முக்கியமானது. யாழ்ப்பாண வைபவமாலை, கைலாயமாலை, மனுதர்ம சாஸ்த்திரம், மகாவம்சம், இராமாயணம், சோழர் கால கல்வெட்டுகள், சங்க இலக்கியங்கள், தேச வழமைச் சட்டம், என்பன குறிவைக்கும் குழுவினர் யார்? என்பதைத் தெளிவாக எடுத்துக்காட்டுவதோடு அது பேசும் பொருண்மையின் அரசியலையும் வெளிப்படுத்துகிறது. எனவே குறித்த எழுத்துப் பிரதி அல்லது அடையாளம் தனக்குரிய குழு எல்லைகளால் உருவாக்கப்பட்டதாகவே காணப்படுகிறது.

இவ்வாறான பிரதிகளில் குறிப்பாக வரலாற்று அடையாளத்தையும் வரலாற்று உருவாக்கத்தையும் குறித்த வரலாறு பேசுகின்ற அரசியலை ஞாபகப்படுத்துகின்ற எழுத்துகள் ஏன் குறித்த பொதுமைத் தன்மைக்குள் அடையாளங் காணப்படுகின்றன? அல்லது ஏன் அவ்வாறு அடையாளப்படுத்தப்படுகின்றன? என்பது மிகவும் கவனத்திற்குரியது.

01. தனிமனித ஒழுக்கம் அல்லது சமூக ஒழுக்கத்தினை உருவாக்க முனைதல்.

சமூகத்தில் தனியனுக்கான ஒழுக்கம் இதுதான் அல்லது உன்னுடைய சமூகக் குழுவில் குழுவினருக்கான வரையறுக்கப்பட்ட நடைமுறைகள் இவைதான் என்பதை மீள மீள நெட்டுருப்படுத்தலும் அடுத்த தலைமுறைக்கு அவற்றைக் கையளித்தல் அல்லது நியமமாக்குதல்.

இன்று வரை 'பெண்கள்' என்கிற பாத்திரம் (Character) சமூகத்தில் எப்படி உருவாக்கப்பட்டு, பயிற்றப்பட்டு, அடுத்த தலைமுறைகளுக்கூடாக நகர்ந்து வந்திருக்கிறது என்பது மிகச் சிறந்த உதாரணமாகும். பெண்ணின் உணவு, உடை, தொழில், கூலி, தோற்றம், நடை, பாவனை, பொருளாதார- அரசியல் -கல்விப் பங்கேற்பு என்பன ஒவ்வொரு காலகட்டத்திலும் எவ்வாறான ஒத்த இயல்புகளுடன் அடையாளங் காணப்படக் கூடியதாக இருப்பது என்பது மிகவும் நுட்பமானது. இதற்கு மனுதர்மம், இராமாயணம், திருக்குறள், பகவத் கீதை, தேசவழமை, திரைப்படங்கள், நாடகங்கள், கூத்துக்கள், ஓவியங்கள், சிற்பங்கள், நாவல்கள், என அனைத்தும் துணை நிற்கின்றன என்கிற சாராம்சத்தைத்தான் அந்தந்தப் பிரதிகளின் மைய இழை காட்டி நிற்கிறது.

*02.* ஒன்றிணைந்த சமூகம் அல்லது வேறுபட்ட சமூகம்

'நாங்கள்' என்கிற ஒரு கூட்டிணைவைத் தரக்கூடிய ஒன்றாக இது தோற்றம் தந்தாலும் இதற்குள் ஒளிந்தும் ஒளியாமலும் 'வேறுபடுத்தல்' விளைவே மேலோங்கி நிற்கிறது. நாங்கள்- அவர்கள், மேலோர் - கீழோர், தூய்மையானவர் - தூய்மையில்லாதவர், வெள்ளையர் - கறுப்பர் என வேறுபடுத்துகின்ற மனோநிலை வெளிப்படுத்துகிறது. எடுத்துக்காட்டாக சாதியை அடிப்படையாகக் கொண்ட வேறுபடுத்தல் நிலை மையை நாம் விளங்கிக் கொள்ள முடியும். இது சமூகத்தில் குடும்பங்களினூடாக தலைமுறை தலைமுறையாகக் கடத்தப்பட்டு வருகின்ற பிறிநிலைச் சித்தாந்தம்.



“பிரிட்டிஷிலிருந்து ஓர் பேரரசு உள்ளது; இந்துக்களுக்கும்தான்! என்ன? இந்துயிசமும் ஒரு வகை ஏகாதிபத்தியம் தானே! தீண்டப்படாதவர்கள் இந்துக்களால் அடிமைப்படுத்தப்பட்ட இனம் தானே! இந்து எசமானர்களுக்கு விசுவாசமாகவும் அடிமைப்பட்டிருக்கவும் தானே அவர்கள் இருக்கிறார்கள்? இரண்டாம் உலகப்போரில் சர்ச்சில் ஈடுபடுவதன் நோக்கங்கள் என்ன எனத் தெளிவுபடுத்துமாறு அவரைக் கேட்பது நியாயமெனில், திரு. காந்தியும் இந்துக்களும் நடத்தும் விடுதலைப் போர்களின் நோக்கங்கள் என்னவென்று அறிவிக்க வேண்டும் என எங்கும் கேட்பதை எப்படித் தவிர்க்க முடியும்?

(டாக்டர். பி.ஆர்.அம்பேத்கர்)

3. தேசியங்களின் உருவாக்கம்

தேசியத்தை அடிப்படையாகக் கொண்டு குழுமையத்தை அமைக்கும் நோக்கிலான எழுத்து வடிவங்கள் / அடையாளங்கள் / இணைவுத் தெரிவுகள் என்பன முக்கியமானவை. இவை வரலாற்றைத் தொடர்ச்சியாகக் கொண்டு செல்லவும் குழுமையத்தை, திரட்சியை உருவாக்கவும், ஸ்திரப்படுத்தவும் உதவக்கூடியன. திருச்சிலுவை, 'ஆமென்' வெள்ளரசு, தேசியக்கொடி, கறுப்பு ஜூலை, திலீபன் என நாம் பலவற்றைக் கூற முடியும். இவை எமக்கு அவற்றின் இயங்குதன்மையை தெளிவுபடுத்துகிறது.

*“கார்த்திகை 27, 2012*

கனத்துப் போயிருந்தது அந்த மாலை நேரம், வானம் மஞ்சளும் சிவப்புமாக, இந்த நாள் மாவீரர் நாளென வரைந்திருந்தது. மாபெரும் விளக்காய், மறைய மறுத்து சூரியன் மேற்கில் ஒளிர்ந்தான். கனகபுரம் நோக்கி சைக்கிளை மிதிக்க அதுவும் வேகமெடுத்துப் பறந்தது. தகிக்கும் விளக்கின் அனலைச் சுமந்தபடி ஒவ்வொரு வரும் விலத்திச் சென்றனர். எல்லோருடைய முகங்களிலும் மாண்டவர்களின் நினைவுகள் மிதந்தன.

டிப்போச் சந்தியில் சன நெரிசல், தமிழீழ காவல் துறைப் போக்குவரத்து கடமையில் ஈடுபடுகிறது. லட்சக் கணக்கானவர்கள் கிளிநொச்சி மாவீரர் துயிலுமில்லத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தனர். வழியெங்கும் மஞ்சளும் சிவப்புமாக கொடிகள் கட்டப்பட்டிருந்தன.

(தீபச் செல்வன் நடுகல் /187)

4. கூட்டுத் திரட்சியை வலியுறுத்தல்

குறிப்பாக தேசிய அடையாள உருவாக்கத்தினூடாக விளக்க முனைந்தாலும் இதனை இன்னொரு தளத்தில் நாம் விளங்கிக் கொள்வது பொருத்தமானது. பெண் அடக்கு முறையை எதிர்க்கிற அதற்காகச் செயற்படுகின்ற பெண் விடுதலை அமைப்புச் செயற்பாடுகள், காணாமலாக்கப்பட்டோருக்கு நியாயம் தேடும் அமைப்புக்கள், தனிச் செயற்பாட்டு அமைப்புக்கள், பண்பாட்டு அமைப்புக்கள் என நாம் கூட்டுத் திரட்சியின் இருப்பையும் செயலையும் விளங்கிக் கொள்ள முடியும்.

இவ்வாறான வரலாற்றுப் பொதுமைப்படுத்தல்கள் நேர்முகமான சமூக - பண்பாட்டு - அரசியல் இயக்கத்திற்குத் துணைபுரியும் என்கிற நம்பிக்கையில் கையாளப்படுகின்றன. 'வரலாறு' என்கிற கருத்தாக்கமும் பிடிப்பும் திரட்டுகின்ற பணியை அகவயம் சார்ந்து செய்கிறது. இது உணர்வு சார் நிலையில் என்னுடையது என்கிற உணர்வையும் பிரமிப்பையும், வீரத்தையும், கோபத்தையும் தரவல்லது. வரலாற்றை, அடை யாளங்களைத் திரிவுபடுத்துவதற்கும் அழிப்பதற்கும் கூட இதுதான் காரணம்.

“முன்னாள் சுதேசியான பூர்ஷ்வா வர்க்கத்தைச் சேர்ந்த குறிப்பிட்ட சிலர் தமது மேற்கத்தியக் கூட்டாளிகளுக்கு விருந்துகள் ஏற்பாடுகள் செய்பவர்களாக மாறிவிடும் நிகழ்வுப் போக்குக்கு ஆதாரம் தேவையானால், லத்தீன், அமெரிக்காவில் என்ன நிகழ்ந்தது என்று பார்ப்பது பயனுள்ளதாக இருக்கும். ஹவானாவிலும் மெக்ஸிக்கோவிலும் உள்ள சூதாட்ட அரங்குகள், ரியோவின் கடற்கரைகள், பிரேசில் மற்றும் மெக்ஸிக்கோவைச் சேர்ந்த பதின்மூன்று வயதே ஆன கலப்பின இளம்பெண்கள், அகாபுல்தோ மற்றும் கோபாகபானா துறைமுகங்கள் - இவையனைத்துமே தேசிய நடுத்தர வர்க்கத்தினரின் இந்தச் சீரழிவின் அழியாக்கறைகளாகும். இலட்சியங்களை இழந்து விட்டவர்களாகவும் மக்களிடமிருந்து தன்னைத்தானே துண்டித்துக்கொண்டு சுயநலத்தோடு வாழ்பவர்களாகவும்-”

(ஒடுக்கப்பட்டவர்கள்: விடுதலையின் வடிவங்கள், / பணான் / 158)

அதேபோல் அதிகாரத்தைத் தக்கவைக்கின்ற நோக்கத்திற்காகவும் இன்னொரு சமூகத்தை / இனத்தை அடிமைப்படுத்த வேண்டும் என்கிற காரணத்திற்காகவும் வரலாறு பயன்படுகிறது அல்லது உருவாக்கப்படுகிறது. இதற்கு இரண்டு மாதிரிகளை வரலாறு உருவாக்கி வைத்திருக்கிறது.

1. அழகு
2. வன்சிறை

இங்கு 'அழகு' என்கிற மாதிரி (Model) வரலாற்றின் அனைத்து இடைவெளிகளிலும் ஒரே வகையான நிரப்பிகளையே இட்டு நிரப்பி வந்திருக்கிறது. அழகுக்கான உடலமைப்பும் மாதிரித் தெரிவுகளும் கவனத்திற்குரியன. எடுத்துக்காட்டாக உலக அழகுத் தெரிவு என்கிற நிகழ்வொழுக்கில் உடலமைப்பின் ஒத்தமாதிரியான தெரிவுகள் மீள மீள இதுதான் அழகு என்பதை பெண்களுக்கு ஞாபகமூட்டிக் கொள்கின்றன. அதே போல் திரைப்படக் கதாநாயகிகளில் ஒரு காலகட்டத்தில் சாவித்திரி, அஞ்சலிதேவி, நக்கீர் போன்றவர்களை முன்வைத்து உன்னத அழகு என்கிற கருத்தியல் முன் வைக்கப்பட்டது. பின்னர், சிம்ரன், அஸின் போன்றோரும் தற்போது அதே தோற்ற நிலையில் பலரும் மாதிரியாக்கப்படுவதை நாம் கண்டு கொள்ளலாம்.

'வன்முறை' என்கிற மாதிரி உருவாக்கப்படுவதற்கு நாம் இந்தியாவை, முதல் உதாரணமாக பார்த்து விளங்கிக் கொள்ள முடியும். முஸ்லிம் சமூகத்தவரை வன்முறையாளர்களாகக் காட்டுகின்ற மாதிரி மனோபாவம், அரசியல் தொடக்கம் சினிமா வரை நாம் அடையாளப்படுத்த முடியும்.

ஹொலிவூட் சினிமாவில் முஸ்லிம்களும் ஏனைய ஆசிய விடுதலை அமைப்புக்களும் பயங்கரவாதிகளாகக் காட்டப்படுகின்றனர். இந்தியாவிலும் அவ்வாறு நிகழ்கிறது. சமகாலத்தில் அமேசானில் வெளியான த பமிலி மான் (The family man) என்கிற திரைத்தொடரில் முஸ்லிம் சமூகத்தினர் பயங்கரவாதிகளாக காட்டப்பட்டனர். அதன் தொடர்ச்சியாக பகுதி 2 இல் LTTE இன் முன்னாள் உறுப்பினர்கள் / இந்தியாவில் தஞ்சம் புகுந்த இலங்கைத் தமிழர்கள் சமகாலத்தில் பயங்கரவாதிகளாக இஸ்லாமியருடன் இணைத்துக் காட்டப்பட்டுள்ளனர். இது ஒரு வகை ஏகாதிபத்திய மனோநிலையில் கலைப்படைப்புக்களினூடாக மாதிரிகளை உருவாக்கி அங்கீகாரத்தைப் பெறுகின்ற முயற்சி. இவ்வகையான மாதிரி உருவாக்கங்கள் (தொடக்கி வைத்த பெருமை அமெரிக்காவிற்குரியது)

வரலாற்று நிலையில் மிக அபாயகரமானது. வரலாற்று மாதிரிகள் உருவாக்கும் முயற்சிகள் பல நிகழ்ந்த வண்ணமே இருக்கும். ஆயினும் வரலாற்றின் இயல்பில் அதன் நிலைப்பு என்பது அதன் பொய்களிலும் புரட்டுக்களிலும் இருப்பதில்லை என்பதே யதார்த்தம். ■




## அவற்றோரன்ன இவற்றோரன்ன

# கையறு நிலையின் கணங்கள்



பேராசிரியர் அ.ராமசாமி

**2021** இல் வெளிவந்த இரண்டு கவிதைத் தொகுதிகள் அடுத்தடுத்து வாசிக்கக் கிடைத்தன. முதலில் வாசித்தது ரூபன் சிவராஜாவின் எழுதிக் கடக்கின்ற தூரம். இரண்டாவது வாசித்தது சுகன்யா ஞானசூரியின் நாடிலி. எழுதியவர்களைப் பற்றி எந்தத் தகவலும் இல்லாமலேயே கூட இந்தக் கவிதைத் தொகுதிகளின் தலைப்பை வைத்துக் கொண்டு கவிதைகள் எழுப்பப் போகும் சாராம்சத்தைப் பேசிவிடலாம்.

நாடிலி என்னும் ஞான சூரியின் தலைப்பு நேரடியாக நாடற்று இன்னொரு புலத்தில் அகதி வாழ்க்கைக்குள் இருக்கும் ஒருவரின் இருப்பும் தவிப்பும் வெளிப்பாடுகள் என்பதாக அர்த்தம் தரும் தலைப்பு. ஆனால் எழுதிக் கடக்கின்ற தூரம் என்பதைக் கொண்டு இதைத் தான் பேசப்போகிறது என்று நேரடியாகச் சொல்லிவிட முடியாது. மனிதர்கள் அகம் சார்ந்தும், புறம் சார்ந்தும் எழுதிக் கடக்க என்னென்னவோ இருக்கின்றன. அவற்றில் ஒன்றையோ சிலவற்றையோ எழுதிக்கடக்கும் முயற்சியை ரூபன் சிவராஜா முயன்றிருக்கிறார் என்பதைத் தலைப்புச் சொல்கிறது. தலைப்புத் தரும் இந்தப் புரிதலோடு, கவிதைகளை எழுதிய கவிக ளின் பின்னணிகளைக் குறித்த அறிதல் கவிதைகள் முன்வைக்கும் பாடுகளையும் உணர்வுகளையும் கூடுதலாகப் புரிந்துகொள்ள உதவும்.

ரூபன் சிவராஜா, நார்வே நாட்டு ஒஸ்லோ நகரில் வசிக்கும் கவி. கவி மட்டுமல்ல கலை இலக்கியம் தாண்டி அரசியல் கட்டுரைகளும் எழுதும் ஆளுமையாக இணையப் பக்கங்களின் வழி அறியமுடிகின்றது. சுகன்யா ஞானசூரியோ, இப்போது தமிழ்நாட்டுப் புதுக்கோட்டை மாவட்ட ஈழ அகதிகள் முகாமில் வசிப்பவர். யாழ்ப்பாணம் அச்சுவேலி வடக்கில் பிறந்த அவர், 1995 இல் யாழ்ப்பாணத்திலிருந்து வன்னிக்கு இடம் பெயர்ந்து, 1996 இல் வன்னியிலிருந்து தமிழ்நாட்டுக்குப் புலம் பெயர்ந்தவர் என்கிறது தொகுப்பில் உள்ள அவரைப் பற்றிய குறிப்பு. இருவரும் ஈழத் தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழ்பவர்கள் என்ற அறிதலின் வழி அவர்கள் கவிதைகள் உணர்த்த விரும்பும் சாராம்சமான உணர்வை இழப்பின் நினைவுகள் என்ற பொதுப் பொருண்மைக்குள் அடக்கிவிட முடிகிறது. ஆனால் இழப்பை இருவரும் ஒன்றுபோல் பார்க்கவில்லை என்பதைக் கவிதைகளின் வரிகளும், அதன் வழி உருவாக்கப்படும் உணர்வுகளும், உணர்வுகளை உருவாக்கும் வெளிகளும் சொல்கின்றன.

சொந்த நாட்டைவிட்டு அகதி முகாம் என்ற வெளியில் இருக்கும் தன்னிலையின் உணர்வுகளும் இருப்பும் என்பதை சுகன்யா ஞானசூரியின் கவிதைகள் விரிவாக முன் வைத்துள்ளன. அகதிகள் முகாமில் என்ற தலைப்பில் எழுதப்பட்ட ஒரு கவிதையை இங்கே வாசிக்கலாம்:

கருக்கலில் / களிப்பிலிருந்த மனம் /சிறு கருமை கண்டு/பதறத் துவங்கியது தலையைப் பற்றியபடி /கத்திக் கொண்டிருக்கிறேன்/அகதிக் கொட்டில்கள் உருகி வழிவதாய் அந்தியில் விளையாட மறந்து /அடிவானம் பார்க்கும் அகதிச் சிறுமியிடத்தில் /அலைக் கழைப்பின் துயரக்கோடொன்றைக் காணும் கணமொன்றில் /மூப்பின் பெருவெளியில் கரை கிறாள் /அவலத்தின் பெருங் கதையாடல்களை /மறைத்திடும் முகமாக /வெளிறிய புன்சிரிப்பொன்றை உதிர்த்துக் கடக்கிறாள் /பருவத்தின் பாசிகளில் வழுவாதிருக்க கரம் நீட்டுமாறு/வல்லவர்களை வேண்டுகிறேன் ஊஞ்சலாடும் சிறுவர்களின் மகிழ்வான பொன்மாலைப் பொழுதுக்காக.

அகதி முகாமின் துயரச் சித்திரத்தின் பல நிலைகளையும் வடிவங்களையும் சொல்லும் விதமாகத் தலைப்பிலேயே முன்வைக்கின்றன பல கவிதைகள். அவலமுகாம், அகதிகள் வீடடைதல், அகதி வாழ்வு, ஏன் என்னை அகதியாக்கினீங்கள்? நாம் அகதியாய் அடுக்கப் பட்டிருக்கிறோம், அகதி முகாமில் தீபாவளி, அகதிப்பிணம், அகதிகள் முகாமில், கடல்வழி வந்த அகதி நதி பார்த்தல், அகதி வாழ்வு, குடிகார அகதியின் சலம்பல் என விதம் விதமாக முன்வைக்கின்றன. அஞ்சலி பற்றிய அகதியின் பாடல் என்ற கவிதை அகதி முகாம் வாழ்வின் வேறொரு சித்திரத்தை அதே துயரத்தின் - இழப்பின் விளைவாக விவரிக்கின்றது:

நினைவு தப்பும் தந்தையின் வார்த்தைகளில் / அலைந்துழலும் விரக்தியின் வெம்மை கையறு நிலையில் / கரையொதுக்கப்பட்டு/ காலத்திற்கும் மாறா வடுவொன்றை சுமந்தலைபவர்கள்/நாம்.

இரசாயனத்தில் தேக்க விதிகளில்/புதிய சேர்மானமாய்/வகைதொகையற்று அழிக்கப்பட்டவர்களது/ குருதியும் கண்ணீரும் மூலக்கூற்றின் அலகில்/உப்பு மிகுந்திருக்கிறது எம் உடலங்கள்/கடலின் கரையில் கூராய்வு செய்யப்பட்டு/ஆகிறது ஒரு தசாப்தம் கரையொதுங்கும் அலையின் மீது/மஞ்சள் மலர்களைத் தூவி அஞ்சலி செய்தோம் /அடக்கமாகினோம் / தாயக முகாமிற்குள் இதுவரையிலான எனது வாசிப்பில் இந்திய அகதி முகாம்களில் வசிக்கும் ஈழத்தமிழ் அகதிகளின் பாடுகளைக் கட்டுரைகளாகவே வாசித்திருக்கிறேன்.

தொ.பத்திநாதன் போன்றவர்களின் அனுபவப் பகிர்வுகளும் வேறு சிலரின் சிறுகதைப் புனைகதைகளும் வாசிக்கக்கிடைத்துள்ளன. ஆனால் உணர்வுகளின் திரட்சியான கவிதை வடிவில் - அகதி முகாம்களில் படும் வேதனைகளை ஞானசூரியின் அளவுக்கு முன்வைத்த கவிதைகளை வாசித்ததில்லை. இந்தப்பாடுகளுக்கான காரணங்களையோ, கோரிக்கைகளை முன்வைத்து விடுதலையையோ கோராமல், இருப்பை மட்டுமே தீவிரமாக முன்வைக்கிறார். அதன் மூலம் ஒட்டுமொத்தமான அகதி வாழ்வின் பாடுகளாக மாற்ற முனைந்துள்ளார் என்பது குறிப்பிட்டுச்சொல்ல வேண்டியதாக இருக்கிறது.

சொந்த நாட்டிலிருந்து இன்னொரு நாட்டில் இருக்கும் தனது வாழ்க்கையை எழுதிக் கடக்கக்கூடிய வாழ்க்கையாக முன்வைக்கும் ரூபன் சிவராஜாவின் கவிதைகள் அகதி வாழ்விலிருந்து வேறுபட்டது. குறிப்பாகப் புலப்பெயர்வில் உழைக்கத் தயாராக இருக்கும் மனிதர்களுக்கு வேலை வாய்ப்புகள் கிடைக்கின்றன. அதன் தொடர்ச்சியாகப் பொருளாதாரத் தேவைகள் நிறைவேறுகின்றன. அத்தோடு சமூக இருப்பில் அதிகமும் வேறுபாடுகள் காட்டாத சட்டங்களும், வாழிடங்களையும் உரிமைகளையும் தரும் அரசுகளும் இருக்கும் ஐரோப்பிய நாடுகளில் வாழ்தலில் நாட்டை விட்டு வந்துவிட்டோம் என்ற மனநிலை ஆழ்மனதிற்குள் ஓடிக்கொண்டிருக்கும் ஒன்றாக மட்டுமே இருக்கக் கூடிய ஒன்று. அதன் காரணமாகவே புலம்பெயர் வாழ்க்கையை முடித்துக்கொண்டு நாடு திரும்ப வேண்டும் என்ற ஆசையும் ஆவலும் உண்டாகாமல் போய்விடும் சாத்தியங்கள் அதிகமாகின்றன. அதே நேரம் சொந்த நாட்டில் தனது மொழியைப் பேசிய - பண்பாட்டு நடவடிக்கைகளில் தங்களோடு உறவுகொண்ட மனிதர்கள் இந்த வசதிகளையெல்லாம் பெற முடியாமல் தவிக்கின்றனர் என்ற உறுத்தல்களும் எழும்பிக் கொண்டே இருக்கும். அப்படி எழும்பும்போது நாடு திரும்ப வேண்டும் என்ற எண்ணமும் எழும். அந்த எண்ணங்கள் இழந்ததைத் திருப்பிக் கொண்டுவரும் அலைந்துழல்வு வாழ்வாக மாறிக் குற்றவுணர்வுக்குள் தள்ளும். அந்தக் குற்றவுணர்வை எப்படிக் கட ப் பது என்ற நிலை சாதாரண மனிதர்களுக்கு உளச்சிக்கலை உருவாக்கலாம். ஆனால் எழுதுவதைக் கருவியாகக்கொண்ட எழுத்தாளர்கள், அதனைப் பற்றிக் கடந்துவிட முயல்வார்கள். அதிலும் உணர்ச்சியைத் திரட்டிக் கொட்டிவிடும் வாய்ப்பளிக்கும் கவிதை வடிவம் எழுதிக் கடக்க ஏற்ற ஒரு வடிவம். அதனை உணர்ந்தவராக ரூபன் சிவராஜா மொத்தத் தொகுதியிலும் வெளிப்பட்டுள்ளார்.

அந்த வெளிப்பாட்டைச் சொல்லும் பல கவிதைகள் தொகுப்பில் உள்ளன. நிசப்தம், மௌனம், கவிதை, சொற்கள், ஒளி, இருள், போன்ற படிமங்கள் பல கவிதைகளுக்குள் அலைகின்றன. தெருக்களும் - இடங்களும். பொருட்களும்.. எனத்தலைப்பிட்டு எழுதப் பெற்ற கவிதை உருவாக்கும் மனவோட்டம் தொடர்ந்து வந்துகொண்டே இருக்கும் மனவோட்டம். அந்தக் கவிதையின் வரிகளை வாசிக்கலாம்:

நடந்து திரிந்த தெருக்களிலும்/ காத்திருந்த இடங்களிலும் பொருட்களின் இருப்பிலும்/ நிரந்தரமாய் தங்கியிருப்பவை நினைவுகள் மட்டுமே காற்றோடு போனவையென்றிருந்த / சொற்களைக் கண்டெடுத்து உயிர்ப்பித்துத்தரும் /வல்லமை யோடிருக்கின்றன / தெருக்களும் இடங்களும் /பொருட்களும்/ அவை / காலத்தை மீட்டெடுத்துக் கைகளில் சொருகியும் விடுகின்றன.


தொடரும் இந்த மனவோட்டச் சிக்கலைக் கடக்கப் பயன்படக் கூடியன சொற்களே. சொற்களின் சாத்தியங்கள் குறித்து ரூபன் சிவராஜா உருவாக்கியுள்ள குறியீடுகளும் நினைவுகளும் நிதானமாக வாசிக்க வேண்டியன. சொற்களின் வேண்டுதல் என்ற இந்தக் கவிதையை மட்டும் வாசிக்கலாம்:

பெருங்கனவின் மீதியைச் /சுமந்து திரிகிறது/பறவை

கனவின் மீதியையேனும்/கனிவின் மிகுதியால்/ஏந்திக் கொள் எனத் தவம் இயற்றியபடி/பேரன்பை அடைகாக்கும்/பறவை வேண்டுதல் செய்கின்றது/உன்னிடம்.

புலம்பெயர் வாழ்வில் அலையலையாக வந்து போகும் போர்க்கால நினைவுகளையும் அவர் எழுதவே செய்துள்ளார்.

போதாமைகளின்/பாரத்தில் /தாழ்ந்து கிடக்கிறது / ஜனநாயகப்படகு பொய்த்துவிட்ட பருவமழை / போலல்லாமல் /காலம் தப்பாது வந்துபோகின்றன/ தேர்தல் திருவிழாக்கள் /வாக்குறுதி /காற்றில் பறக்க




வார்த்தை ஜாலங்களால் /வனையப்பட்ட கோசங்களும்

முழக்கப்பாடல்களும் /கோலோச்ச/வீராவேசம் கொண்டுவிடுகின்றன


பிரசார மேடைகள்! நிராகரிக்கப்பட்ட கனவுகளால்/ நிரப்பப்பட்ட/காலமற்ற பொழுதுகளில்

உத்தரித்துக் கிடக்கிறது /போர்தின்ற வாழ்வின் மீதி!

இவரது நினைவுகள் இழப்பின் ஏக்கங்களாக இல்லாமல், நடப்புகளின் மீதான விமர்சனங்களாக இருப்பது கவனிக்க வேண்டிய ஒன்று. இந்த விமர்சனம் பெரும்பான்மையான புலம்பெயர் கவிதைகளின் போக்கிலிருந்து விலகியது. விமரிசனப் பார்வையிலிருந்து தெளிவை நோக்கி நகரும் பார்வையை முன்வைப்பதின் மூலம் சிவராஜாவின் இந்தத்தொகுப்பு புலம்பெயர் கவிதைத் தொகுப்புகளில் கவனிக்கப்பட வேண்டிய தொகுப்பாக மாறியிருக்கிறது. இவ்விரு தொகுப்பையும் வாசித்த நிலையில் தமிழ்ச் செவ்வியல் கவிதைகளான சங்கப் பாடல்களில் இருக்கும் ஆகச்சிறந்த கையறுக் கவிதைகள் நினைவில் வருவதைத் தவிர்க்கமுடியவில்லை.

(18 ஆம் பக்கம் பார்க்க)

அகமது ஃபைசல்



# தாகம்

நான் தண்ணீர் கேட்டபோது அவள் வாசலில் விரிந்திருக்கும் ஒரு புத்தகத்தை வரைந்து முடித்திருந்தாள். “இது மணல்ப் புத்தகம் இதை வந்து வாசியுங்க” என்றாள். அந்த மணல்ப் புத்தகத்தை நெருங்குவதற்கு முன் என்னால் இன்றைய காலைப் பொழுதை விட்டு மீளவே முடியவில்லை. வாசலில் விரிந்து கிடக்கும் மணல்ப் புத்தகத்திற்கு அருகாமையில் தலை குனிந்து நிற்கும் சிவப்பு ரோஜா, என் வீட்டு மரக் கிளையில் இருந்து மின்சார வயருக்குத் தாவி, ஓடிச் சென்று பக்கத்து வீட்டு ஓட்டுக் கூரையில் ஏறி அதே மரக்கிளையைத் திரும்பிப் பார்த்த அணில், ஆயிரம் கனவுகளைக் கண்டு விடிந்ததும் தெரியாமல் தூங்கிவிட்ட ஒரு கிளி திடீரென எழுந்து தனியே கத்திக்கொண்டு பறந்தபோது அதன் குரலில் இருந்த தனிமையிலிருந்தும் என்னால் மீள முடியவில்லை.

பிறந்து பன்னிரெண்டு நாட்கள் சென்றுவிட்ட தன் குழந்தையோடு அவள் வந்து வாசற்படியில் அமர்ந்துகொண்டாள். அந்தப் பிஞ்சுக் குழந்தையின் பாதங்களும், சிவப்பு ரோஜா இதழ்களும் ஏதோ பேசிக்கொள்வதுபோல் இருந்தது. “மென்மையின் பாஷையைப் புரிந்துகொள்ள முடியுமா என்ன?” என்று என்னை யாரோ கேட்பது போலவும் இருந்தது.

நான் தண்ணீர் கேட்டேன். “மடியில் குழந்தை இருக்கிறது” என்றாள். மணல்ப் புத்தகத்தை சற்று நெருங்கிப் போய் உற்றுப் பார்த்தேன். இளகிய காலை வெயிலில் ஒருத்தி குடை பிடித்துச் செல்கிறாள். குடைக் கம்பிகளால் வெயிலின் துளிகள் கீழே விழுகின்றன. அடுத்த பக்கத்தைப் புரட்ட எனக்கு ஒத்துழைக்காமல் கிடந்த மணல்ப் புத்தகத்தில் குடையோடு அவளை விட்டுவிட்டு வீட்டுக்குள்ளே சென்றேன். குடையோடு வெயிலில் அலைந்து நேற்று என் அலுவலகம் வந்த அந்த இளம் பெண்ணின் உருவம் என் மனதை இன்னமும் தைத்துக்கொண்டே இருந்தது.

திரும்பத் திரும்ப தண்ணீர் கேட்டேன். “தேநீர் தயாராக்கிட்டு தர்றேன்” என்றாள். நான் அலுவலகம் செல்ல ஆயத்தங்களைச் செய்தேன். “தண்ணீர், சாப்பாடு, டீ எல்லாம் இந்த பேக்ல இருக்கு” என்று சொல்லி பேக்கை என்னிடம் நீட்டினாள். அதை வாங்கிக் கொண்டு வெளியேறினேன். நான் பார்த்த காலை சற்றுப் பளீர் என்றிருந்தது. அடுத்த வீட்டு வேலி தாண்டி வந்த மஞ்சள் வாகை பூ ஒன்று கார் மேல் கிடக்க, “கிடக்கட்டுமே” என்று காரை வெளியே எடுத்தேன். “செந்தாழம் பூவில் வந்தாடும் தென்றல் என் மீது மோதுதம்மா” என்று பாடிக்கொண்டு சென்றேன்.

அவளின் பின்னால் சென்று மெல்லக் காரை நிறுத்தினேன். நேற்று வேலை தேடி என் அலுவலகம் வந்தவள் அவள்தான். காரில் அவளை ஏற்ற, கொஞ்சம் கெஞ்ச வேண்டியிருந்தது. இருவரும் காரில் சென்றோம். அவள் வீடு வந்ததும் வெளியே இறங்கி “உள்ளே வாங்க சார்” என்றாள். உள்ளே போய் ஷோபாவில் அமர்ந்தேன். என்னையே பார்த்தபடி நிலைக் கண்ணாடி நின்றிருந்தது. உடனே அவள் உயரமான நிறமற்ற கிளாஸில் நிறையத் தண்ணீர் கொண்டு வந்தாள். தண்ணீருக்குள்ளே அவளின் கை ரேகைகள் மிதந்தன. வாங்கியெடுத்து தண்ணீர் முழுவதையும் அருந்தி முடித்தேன். என் மீசையில் கொஞ்சம் ஈரம் படிந்திருந்தது. “நான் உன்னைக் கல்யாணம் செய்து கொள்ள விரும்புகிறேன்” என்று கூறி அவளைப் பார்த்தேன். என் கையில் இருந்த நிறமற்ற கிளாஸில் அவளின் முழு உருவமும் என்னை நெருங்கி வந்து நின்றது.

***

# நிலைக்கண்ணாடி

தரிசனன்




## பிள்ளைகளின் ஆளுமை விருத்தியும் மூத்தோர் பங்களிப்பும்

பொதுவாக நமது வீடுகளில் கலகலப்புக்கும் சுறுசுறுப்புக்கும் மையமாகத் திகழ்பவர்கள் எமது வளர்பருவப் பிள்ளைகளே. அவர்கள் எப்போதுமே மகிழ்ச்சியோடு இயங்கிக் கொண்டிருப்பதற்கு விரும்புபவர்கள் தமது இயல்பான செயற்பாடுகளைச் சுதந்திரமாகச் செய்து கொள்ள விரும்புகிறார்கள். அவர்களின் இவ்விதமான மனப்பாங்கினையும் செயற்பாடுகளையும் அவர்களது மனோ நிலைகளை உணர்ந்து கொண்டு மற்றவர்கள் குறிப்பாகப் பெற்றோர்கள் அங்கீகரிக்க வேண்டுமென்ற உள்ளுணர்ந்த எதிர்பார்ப்பு அவர்களிடம் இருப்பது இயற்கை.

அவர்களின் வயதில் இவர்கள் சுதந்திரமாக இயங்க விரும்புவது அவர்களுக்கே உரித்தான ஒரு பண்பு. அவர்களது வயது, முதிர்ச்சி, இயல்பான தேவைகள் இவற்றைப் புரிந்து கொண்டு சாதாரண நோக்கில் கலந்து காரியங்களை மூத்தவர்கள் அங்கீகரிக்க வேண்டுமென்பதே பொதுவாக அவர்களது எதிர்பார்ப்பாயிருக்கிறது. முரண்படாத வகையில் அவர்களை அணுகி அவர்களது நிலையில் ஒடுகளும் தம்மை நிறுத்தி வைத்து நிலைமைகளைப் புரிந்து கொள்வோமெனில் ஏற்படக் கூடிய சிக்கல்களைத் தவிர்த்துக் கொள்ள முடியும்.

உதாரணத்துக்கு பதின்நான்கு, பதினைந்து வயது நிரம்பிய பிள்ளைகள் ஓய்வாக இருக்கிற நேரங்களில் நண்பர்களைச் சந்திக்கவோ, விளையாடவோ விரும்புவது இயற்கை. அவர்களின் விருப்பத்தைப் புரிந்து கொண்டு முரண்படாமலும் கடுமையாக விமர்சிக்காமலும் அவர்களுக்கு இருக்கும் ஏனைய கடமைகளைப் புரிய வைத்து அவர்களின் விருப்பங்கள் நிறைவேற அனுமதி வழங்கும்போது பிள்ளைகள் இயல்பான முறையில் தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்வார்கள். நமது பிள்ளைகளின் ஒழுங்கு, கட்டுப்பாடு என்பவை குறித்த எமது கட்டுப்பாட்டு நியதிகளை இவர்கள் புரிந்து கொள்ளும் வகையில் விளக்க வைத்தவர்கள் கல்வி, வீடு சார்ந்த அவர்களின் கடமை போன்றவற்றை சரியாக ஆற்றும் வகையில் வழிகாட்டித் துணை நிற்போமெனில் வளர்பருவப் பிள்ளைகளுக்கும் மூத்தோருக்குமிடையில் சரியான புரிதலுடன் கூடிய இணக்கப்பாடு நிலவ முடியும்.

நாம் வயதில் மூத்தோராக இருக்கின்ற காரணத்தாலும் இளையோரான பிள்ளைகளுக்கு அறிவு போதிப்பவர்கள் என்கின்ற முறையிலும் பிள்ளைகளை ஒரேயடியாக மட்டம் தட்டி “நீ சின்னப் பிள்ளை உனக்கு எதுவும் விளங்காதென்று கூறி” சகல காரியங்களிலும் எமது முடிவுகளையே பிள்ளைகளில் திணிப்பது பிள்ளைகளின் தன்னம்பிக்கையைக் குறைவுபடுத்தி அவர்களை எப்போதும் எல்லாவற்றுக்கும் தங்கள் மீதே தங்கியிருப்போராக வைத்திருக்க முனையும் போக்கு பல பெற்றோரிடமுண்டு. இது உண்மையிலேயே பிள்ளைகளின் ஆளுமை விருத்தியைப் பாதிக்கக் கூடிய ஒரு செயற்பாடாகும். பிள்ளைகளின் அறிவு, அவர்களின் பக்குவம் என்பவற்றை அளந்து, அறிந்து கொண்டு அவர்களின் பொறுப்பில் சில காரியங்களை ஒப்படைப்பதன் மூலம் அவர்கள் தங்களைத் தாங்களே அடையாளம் கண்டு கொள்ளவும் சுய சார்புத் தன்மையுள்ள ஆளுமை விருத்தியுடையோராக முன்னேறவும் உதவ முடியும். வெறுமனே பாடசாலைப் படிப்பையும் பரீட்சைச் சித்திகளையுமே முன்னிலைப்படுத்தி இளைய தலைமுறையினரின் சமூக வாழ்வில் கவனம் செலுத்தாமல் விடுவது வருங்காலத்தில் அவர்களின் தன்னம்பிக்கை, செயலாற்றும் வலிமை என்பவற்றைப் பாதித்து விடக் கூடும்.

பொதுவாகப் பல மூத்தவர்கள் பிள்ளைகளில் அன்பாயிருத்தல் என்பதை அவர்களுக்குப் பொறுப்புக்களைத் தராமல் தாமே அனைத்தையும் சுமந்து செல்லுதல் எனத் தவறாக விளங்கிக் கொண்டிருக்கிறார்கள். அவரவர் வளர்ச்சிக்குத் தகுந்த விதமான குடும்ப சமூகம் பொறுப்புக்களைப் பிள்ளைகளின் கையில் தருதலும் அவர்களை வளர்த்தெடுக்கும் கிரியையின் பகுதியாகும் என்பதை மூத்தோராகிய நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

அவரவர் வயதுக்கு ஏற்றாற் போன்ற ஆளுமை விருத்தியில் அவர்களின் ‘நான்’ என்னும் உணர்வு மிக முக்கியத்துவம் பெறுகிறது. அவர்களின் ‘நான்’ எனும் உணர்வு ஆரோக்கியமாக வளர்வதற்குத் துணை நிற்பது பெற்றோரதும் பெரியோரதும் கடமையாகும். மாறாகப் பிள்ளைகளின் காரியங்களில் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் தலையிட்டுப் பிழைகள் பிடித்து அவர்களை மட்டம் தட்டி வருகின்ற பெற்றோரும் பெரியோரும் தமது பிள்ளைகளின் சுயசார்பு மற்றும் வளர்ச்சிக்குத் குந்தகம் செய்வோராகவே அடையாளப்படுவார்கள். தன்னம்பிக்கையோடு நிமிர்ந்து நடக்கும் உறுதியுள்ள மனிதர்களே நாளைய உலகுக்கு வேண்டப்படுபவர்கள் என்பதை மறந்து விடக் கூடாது.

# ஆப்கானிஸ்தானில் ஆட்சிமாற்றத்தை சாத்தியப்படுத்துமா?

(02 பக்கத் தொடர்ச்சி)

மற்றும் தொழிலாளர்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிப்பதாக குறிப்பிட்டனர். இருப்பினும் எதிர்வரும் காலங்களில் பெரிய முதலீடுகளுடன் சீனா ஆப்கானிஸ்தானுக்குள் நுழைய வாய்ப்பில்லை. காரணம் ஆப்கானிஸ்தானில் சீனாவின் இரண்டு பெரிய முதலீடுகள் மிக மோசமாகப் பாதிப்படைந்துள்ளன. சீனாவின் அரசுக்குச் சொந்தமான மிகப்பெரிய எண்ணெய் நிறுவனத்தின் அமு தர்யா பேசின் (Amu Darya basin oli project) சீனா தேசிய பெற்றோலியக் காப்பரேஷன் மற்றும் ஜியாங்சி காப்பர் கம்பெனி லிமிட்டர் ஆகியவற்றின் திட்டங்கள் மிக மோசமான தோல்வியினைத் தழுவிக் கொண்டன. எனவே பாதுகாப்புச் சூழல் நிலையற்றதாக இருக்கும் வரை சீனா ஆப்கானிஸ்தானில் பெரிய பொருளாதாரத் திட்டங்களைத் தொடங்க வாய்ப்பில்லை. மேலும் தலிபானின் எதிர்காலக் கொள்கைகள் தெளிவாக இல்லாததால் அந்த உறவுக்கான வாய்ப்புக்கள் நிச்சயமற்றதாகவே உள்ளது.

சீனா தன் அரசியல் மற்றும் பொருளாதார நலன்களை மேம்படுத்தும் முயற்சியிலேயே தயக்கத்துடன் தலிபான்களுடன் தொடர்புகளைப் பேணி வருகின்றனர். இருந்த போதிலும் சீனா ஆப்கானிஸ்தான் அரசாங்கத்துடன் இராஜதந்திர ரீதியிலும் தொடர்ந்து உறவுகளினைப் பேணி வருகின்றது. தலிபான்களுடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்ட அதேநேரம் ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி அஷ்ரப் கானிற்கும் சீன பொதுச் செயலாளர் ஷிஜின் பிஸ்க்கும் ஒரு தொலைபேசி உரையாடல் இடம்பெற்றது. “நாட்டின் இறையாண்மை, சுதந்திரம் மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டைப் பராமரிக்க ஆப்கானிஸ்தானுக்கு, சீனாவின் உறுதியான ஆதரவு என்றும் இருக்கும் என்று ஜீ தெரிவித்துள்ளார். சீனாவின் இக்கூற்றுப்படி சீனா ஆப்கானிஸ்தான் அரசாங்கத்தைச் சட்டபூர்வமான பிரதிநிதியாக ஏற்றுள்ளதோடு தற்போதைய நிலவரத்தின்படி ஆப்கானிஸ்தானில் அமைதி நிலவுவதற்கும் தேவையான கோவிட் - 19 நிவாரணம் தொடர்பாகவும் தமது பூரண ஒத்துழைப்பிற்கான இயலுமையினை வெளிப்படுத்தியிருந்தார்.

தலிபான்களுக்கும் ஆப்கானிஸ்தான் அரசாங்கத்திற்கும் இடையிலான மோதலின் விளைவு குறித்து சீனாவில் பல்வேறு கருத்துக்கள் உள்ளன. பல ஆய்வாளர்கள் தலிபான்கள் இறுதியில் வெற்றி பெறுவார்கள் என்று மதிப்பிட்டாலும் சில முக்கிய சீன வல்லுநர்கள் தலிபான் குழுவின் வெற்றி ஒரு விடயத்தில் சாத்தியம் என்றாலும் அதன் பிராந்திய முன்னேற்றங்கள் மிகைப்படுத்தப்பட்டவை என்றும் வாதிட்டனர்.

சீன அரசாங்கத்தைப் பொறுத்தவரை ஆப்கானிஸ்தான் அரசியலின் எதிர்காலம் குறித்த நிச்சயமற்ற தன்மை இரு தரப்புடனும் உறவுகளைப் பேணுகின்ற ஒரு சமநிலையான அணுகுமுறையின் அவசியத்தை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. ஆப்கானிஸ்தானில் உள்நாட்டுப் போர் நீடிக்கும் வரை சீன அரசு தனது நலன்களை மேம்படுத்துவதற்கான சிறந்த வழியாக இந்த இராஜதந்திர சமநிலைச் சட்டத்தைத் தொடரும். உண்மையில் ஆப்கானிஸ்தான் அரசாங்கம் மற்றும் தலிபான் ஆகிய இரண்டும் சீனாவின் சொத்துக்கள் மற்றும் தேசத்தவர்களின் பாதுகாப்பை உத்தரவாதப்படுத்துவதுடன் கிழக்கு துர்க்மெனிஷ்தான் இஸ்லாமிய இயக்கம் போன்ற அமைப்புக்களை எதிர்த்துப் போராடவும் சீனாவுக்குத் தேவையாக உள்ளது. ■



# இரண்டாவது வட்டுக்கோட்டைத் தீர்மானம் இன்றைய சூழலுக்கு பொருத்தமானதா?

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதிலும் தமிழரசுக் கட்சியின் கொள்ளளவு இவ்வளவும் தான். இதற்கு மேல் செயற்படமாட்டார்கள் என்ற உணர்வும் வந்துவிட்டது. 1965 ஆம் ஆண்டு ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்து கூட்டரசாங்கத்தில் தமிழரசுக் கட்சி அமைச்சுப் பதவியை ஏற்றபோது அந்த அதிருப்தி மேலும் பெருகத் தொடங்கியது.

இதனால் 1968 ஆம் ஆண்டு முதன் முதலாகக் கட்சி அரசியலுக்கு அப்பால் ஈழத் தமிழர் இளைஞர் இயக்கம் என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது. அது தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைத்து செயற்படத் தொடங்கியது. இதனுடன் நான்காவது காலகட்டம் ஆரம்பமாகியது. 1968 - 2009 வரையான காலகட்டமே நான்காவது காலகட்டமாகும். இதுவும் மூன்று உப கால கட்டங்களாக வளர்ந்து சென்றது. அதில் ஒன்று 1968 - 1983 வரை இது இலங்கை மட்டத்துக்குள்ளும், 1983-1991 வரை அதாவது ராஜிவ் காந்தியின் மரணம் வரை பிராந்திய மட்டத்திற்குள்ளும் 1991-2009 வரை அது பிராந்திய மட்டத்தையும் தாண்டி சர்வதேச மட்டம் வரை பேசப்படும் ஒன்றாக மாறியதோடு இலங்கை அரசு, பிராந்திய அரசு, சர்வதேச வல்லரசுகள் தமிழ் தரப்புக்கு எதிரியாக மாறியிருந்த சூழலும் உருவாகியது. இங்கு மூன்று தரப்பும் இணைந்து தமிழர்களின் ஆயுதப் போராட்டத்தை அழித்தது என்பது வரலாறு.

1976 ஆம் ஆண்டு வட்டுக்கோட்டை தீர்மானம் முன்வைக்கப்பட்டிருந்தது. அது உண்மையில் அன்றைக்கு தமிழரின் மிதவாதக் கட்சியாக இருந்த தமிழர் விடுதலைக் கூட்டணியினால் அதன் முதலாவது மாநாட்டில் முன்வைக்கப்பட்டது. அன்று இருந்த அரசியற்சூழல் அதைக் கொண்டு வரும்படி ஆகிவிட்டது. வட்டுக்கோட்டைத் தீர்மானம் தனிநாட்டுக் கோரிக்கைக்கான ஒரு தீர்மானமாக இருந்தது. அத் தீர்மானத்தை நடைமுறையில் செயற்படுத்த முனைந்த வைதான் ஆயுத இயக்கங்கள். 2009 வரை அதனுடைய உச்ச போராட்டம் இடம்பெற்றதைக் காணலாம்.

1976 ஆம் ஆண்டு வட்டுக்கோட்டைத் தீர்மானமானது ஒடுக்குமுறையினுடைய உச்சத்தில் தமிழ் மக்கள் இலங்கை அரச அதிகாரக் கட்டமைப்புக்கு வெளியில் செல்ல வேண்டும் என்ற அடிப்படையில் எடுக்கப்பட்ட தீர்மானம். வட்டுக்கோட்டைத் தீர்மானம் இரண்டு என வரும்போது முதலாவது தீர்மானத்தை விட உயர்ந்த தீர்மானமாக இருக்க வேண்டும். அதனை விடத் தாழ்ந்ததாக இருந்தால் முதலாவது தீர்மானத்தைக் கொச்சனப்படுத்துவதாகி விடும். ஆனால் இரண்டாவது வட்டுக்கோட்டைத் தீர்மானம் மிகவும் பலவீனமான தீர்மானமாகத்தான் இருக்கிறது. உண்மையில் இரண்டாவது வட்டுக் கோட்டைத் தீர்மானம் ஒரு பொது வாக்கெடுப்பாகப் புலம்பெயர் மக்கள் மத்தியில் மேற்கொள்ளப்பட்டது. எனவே இதனை மூன்றாவது வட்டுக்கோட்டைத் தீர்மானம் என்றே கூறவேண்டும்.

2009 இல் ஆயுதப் போராட்டம் அழிக்கப்பட்ட பின் அரசியல் சூழல் மாறிவிட்டது. இதனால் தனிநாட்டுப் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்தக் கூடிய சூழல் இருக்கவில்லை. பிரதானமாக இலங்கை அரசியல் யாப்பின் 6 வது திருத்தச் சட்டம் தனிநாட்டுக் கோரிக்கைக்கு எதிரானது என்பதால் அச் சட்டத்திற்கு முரணாகச் செயற்பட முடியாத நிலைமை உள்ளது. இதனால் வட்டுக்கோட்டை என்ற பெயரைப் பயன்படுத்தாது வேறு பெயரைப் பயன்படுத்தியிருக்கலாம். இவ்வாறான செயற்பாடுகளைத் தனித்த முடிவுடன் செய்யாது பலருடன் கலந்து ஆலோசித்திருக்க வேண்டும். கலந்து பேசி செய்யா ததன் காரணத்தினால் இது பூரணமான செயற்பாடு எனக் கூற முடியாது.





இதில் ஈடுபட்டவர்களுக்கு ஒரு வரலாறு இருக்கிறது. தமிழ் மக்களின் போராட்டத்தில் வரலாற்றுப் பங்களிப்பு அவர்களுக்கு இருக்கிறது. அவர்களது பங்களிப்பைக் குறைத்து மதிப்பிட முடியாது. இதில் உரையாற்றிய அனைவருமே போராட்டத்தில் முக்கிய பங்கை ஆற்றியிருக்கிறார்கள். அதனால் அவர்களை நோகடிக்கும் விதத்தில் விமர்சனங்களை வைப்பது பொருத்தமானதல்ல.

இன்று இந்தியாவிற்கு ஒரு தேவை வந்துள்ளது. தமிழ் மக்களிற்கு இந்தியா தேவை என்பதை விட இந்தியாவிற்குத் தமிழ் மக்கள் தேவையாக உள்ளனர். இந்தியாவிற்கு இப்படி ஒரு தேவை வருகின்ற போது தமிழ் மக்கள் தங்களுடைய நிலையிலிருந்து எப்படிக் கையாள்வது என்பது தொடர்பான உபாயங்களைத் தொகுத்துச் செயற்பட வேண்டும். இந்தியாவின் நலன்களுக்கும் தமிழ் மக்களின் நலன்களுக்குமிடையே பொதுப் புள்ளியைக் கண்டுபிடித்து அதனைப் பலப்படுத்த வேண்டும். நிலாந்தன் கூறியது போல நாங்கள் எவரையும் காதலிக்கவும் வேண்டாம். பகைக்கவும் வேண்டாம். அவர்களை எவ்வாறு கையாள்வது என்பது பற்றி சரியான வகையில் சிந்தித்துச் செயற்பட வேண்டும். துரதிஸ்டவசமாக அதற்கான முயற்சிகள் பெரிதாக இடம்பெறவில்லை. குறிப்பாக அவ்வாறான செயற்பாட்டைச் செய்வதாயின் தமிழ் மக்களுக்கென வெளிநாட்டுக் கொள்கை ஒன்றுவேண்டும். மற்றையது தமிழ் மக்களுக்கென்று இராஜதந்திர லொபி ஒன்று தேவை. இராஜதந்திரச் செயற்பாடு வேண்டும். தந்திரோபாயத் திட்டங்கள் வேண்டும். இவை இல்லாமல் இவற்றை முன்னெடுக்க முடியாது.

எனவேதான் நடைபெற்ற இணையவழி மாநாட்டிற்கு இரண்டாவது வட்டுக்கோட்டைத் தீர்மானம் எனப் பெயர் வைக்காமல் வேறு ஏதாவது பெயரில் ஜெயலலிதா காலத்தில் தமிழக சட்டசபை நிறைவேற்றிய தீர்மானங்களின் தொடர்ச்சியை முன்னெடுத்திருக்கலாம். தமிழக சட்டசபை அரசியல் தீர்விற்குப் பொது வாக்கெடுப்பு நடாத்துதல் வேண்டும். இன அழிப்பிற்கு சர்வதேச விசாரணை வேண்டும் என்கின்ற தீர்மானங்களை நிறைவேற்றியிருந்தது.

இன்று தமிழ் மக்கள் அரசியல் தீர்வு என்கின்ற அடிப்படைப் பிரச்சினை, இன அழிப்புக்குச் சர்வதேச நீதிகோரும் பிரச்சினை, ஆக்கிரமிப்புப் பிரச்சினை, அரசியல் கைதிகள் - காணிப்பறிப்பு போன்ற இயல்பு நிலையைக் கொண்டு வருதல் பிரச்சினை, போரினால் பாதிக்கப்பட்டவர்களின் நலன்களைப் பேணுதல் என்கின்ற அன்றாடப் பிரச்சினை என ஐந்து வகையான பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றனர். இவற்றிற்கு தீர்வு காணக்கூடிய வகையில் தெளிவான கோரிக்கைகளை முன்வைத்திருக்கலாம்.

எது எப்படி இருந்த போதும் தமிழகச் செயற்பாட்டாளர்கள் இலங்கைக்கு வெளியே ஒரு முயற்சியை எடுத்திருக்கிறார்கள். அவற்றில் தவறுகள் இருந்தாலும் அவற்றைச் சுட்டிக் காட்டி அவற்றைத் திருத்துவதற்கு முயற்சிக்க வேண்டுமே தவிர கடுமையான விமர்சனங்களை முன்வைத்து அவர்களை நோகடிக்கக் கூடாது. தாமாக முன்வந்து செயற்படும் செயற்பாட்டாளர்களை ஒதுக்குவது தமிழ் அரசியலுக்கு ஆரோக்கியமானதல்ல. ■

# கையறு நிலையின் கனங்கள்

(16ஆம் பக்கத் தொடர்ச்சி)

முதலில் நினைவுக்கு வரும் ஆகச் சிறந்த கையறுநிலைப்பாடல் பாரிமகளிரின்

அற்றைத் திங்கள் அவ் வெண் நிலவில்,
எந்தையும் உடையேம் எம் குன்றும் பிறர் கொளார்
இற்றைத் திங்கள் இவ் வெண் நிலவில்,
வென்று எறி முரசின் வேந்தர் எம்
குன்றும் கொண்டார் யாம் எந்தையும் இலமே!

இதற்கிணையான கையறு நிலைப்பாடலாக அதியமான் நெடுமானஞ்சியை ஔவை பாடிய பாடலையும் சொல்ல முடியும்.

சிறியகட் பெறினே, எமக்கீயும் மன்னே!
பெரிய கட் பெறினே,யாம் பாடத், தான்மகிழ்ந்து உண்ணும் மன்னே!

எனத்தொடங்கி, அதியமானின் இன்மையைச் சொல்லும்,

ஆசாகு எந்தை யாண்டுஉளன் கொல்லோ?
இனிப், பாடுநரும் இல்லை படுநர்க்குஒன்று ஈகுநரும் இல்லை

என வேதனையை வெளிப்படுத்துவார். தமிழ்ச் செவ்வியல் கவிதைகளின் கையறுநிலைப் பாடல்கள் தனிநபர்களின் இன்மையால் ஏற்பட்ட இழப்பைப் பேசுகின்றன. ஆனால் ஈழத்தமிழர்களின் துயரத்தைச் சொல்லும் கையறுநிலைப்பாடல்கள், தனிநபர்களின் துயரத்தைத் தாண்டிச் சமூகத்தின் - இனத்தின் பெருந்துயரத்தைப் பேசுகின்றன. அப்பொதுப்பரப்பில் ரூபன் சிவராஜா புலம்பெயர் வாழ்வை எழுதிக்கடக்கப் பார்க்கிறார். சுகன்யா ஞானசூரி கடக்கமுடியாத அவலத்தை முன்வைக்கிறார். ■

# மக்களின் இயல்பு வாழ்க்கை கேள்விக்குள்ளாகிறது

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் இன்னும் சில நாட்களில் பட்டினியினை எதிர்நோக்க வேண்டிய இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட வாய்ப்பு உள்ளதாகச் சமூகமட்ட அவதானிகள் கருத்து வெளியிடுகின்றனர்.

இத்தகைய பொருள் விலையேற்றம், பொருள் தட்டுப்பாடு ஏற்படுவதற்கான காரணம் பொருட்களை இறக்குமதி செய்வதற்குரிய பொருளாதார நிலைமை ஈடாட்டம் கண்டுள்ளமையே என மக்கள் மத்தியில் செய்திகள் உலாவத் தொடங்கியிருக்கின்றன. அது உண்மையோ பொய்யோ நாட்டின் இன்றைய நெருக்கடி நிலைக்கு ஆளும் தரப்பினர்தான் பொறுப்பாக இருக்க முடியும். நாட்டில் பல்வேறு தரப்பினரும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்ற இன்றைய கால ஒழுங்கில் பசியும் பட்டினியும் ஏற்படுவதற்கான சாத்தியங்கள் ஏற்படும் இடத்து அரசு மிகப்பெரிய மக்கள் போராட்டத்தினை எதிர்கொள்ள வேண்டிய இக்கட்டுக்குள் அகப்படும் ஒரு நிலைமையும் உண்டு. இலங்கையைப் பொறுத்தவரையில் நாளாந்தக் கூலி வேலை செய்பவர்களின் எண்ணிக்கையே அதிகம். அவர்கள் ஒவ்வொருநாளும் பொருட்களைக் கொள்வனவு செய்து தமது அன்றாட சீவியத்தை நடத்தும் தரப்பினர். அவ்வாறானவர்களுக்கு கடைகளில் ஒவ்வொருநாளும் பொருட்கள் இருந்தே ஆக வேண்டும் இன்றிருக்கும் பொருள் நாளை இல்லை என்னும் போதோ, இன்றைய விலையில் நாளை பொருட்களை வாங்கமுடியவில்லை என்னும் போதோ அவர்கள் பல்வேறு வகையான உள நெருக்கீடுகளுக்கு உள்ளாகும் நிலைமையும் உண்டு. அதேவேளை பொருட்களுக்கான தட்டுப்பாட்டு நிலைமை வருமிடத்து பணமிருந்தும் பயனற்ற சூழலும் எல்லாத்தரப் பினரையும் நெருக்கடி நிலைக்கு உள்ளாக்கக் கூடியதே.

இந்நெருக்கடி நிலையினை அரசு எவ்வாறு கவனத்தில் எடுத்துச் செயற்படப்போகின்றது? என்பதே தற்போதைய கேள்வியாக இருக்கின்றது. ஆளும் தரப்பு, மக்களைக் காப்பதற்காக இல்லாவிட்டாலும் தங்களுடைய அரசியல் இருப்பை நீண்டகாலத்துக்குரியதாக தக்கவைப்பதற்கென்றாலும் விரைந்து செயற்படவேண்டிய கட்டாய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

# எதிர்வரும் நாட்களில்
## மரணக்காடாகப்போகும் இலங்கை



(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும் என்ற அறிவுறுத்தல்களும் அண்மைக்காலங்களாக முன்வைக்கப்பட்டு வருகிறது. ஆனால் மக்கள் அது தொடர்பில் சிந்திப்பதாகத் தெரியவில்லை. கொண்டாட்டங்களை விமர்சையாக நடத்துவதிலும் ஆலயத் திருவிழாக்களை ஆடம்பரமாக நடத்துவதிலும் தீவிரம் காட்டி வருகின்றனர்.

வடக்கு மாகாண சுகாதாரப்பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் அத்தியாவசியத் தேவை தவிர வீட்டை விட்டு மக்களை வெளியில் வரவேண்டாம் என்று அறிவித்தல் விடுத்துள்ளார். அண்மையில் வடக்கில் தொற்றாளர்களின் எண்ணிக்கையும் தொற்றின் காரணமாக இறப்பவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்து வருவதோடு வைத்தியசாலையிலும் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளமையினால் மேலதிகமானோரை பராமரிப்பதற்குரிய கடினத்தன்மையினையும் கருத்தில் கொண்டே இவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் ஒரு மாதகாலத்திற்கு கவனமாக இருக்கும்படி கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மத்திய நிலையத்தின் தலைவரும் இராணுவத்தளபதியுமான ஜெனரல் சவேந்திரசில்வா எச்சரிக்கைச் செய்தியொன்றையும் வெளியிட்டிருக்கின்றார். இன்னும் ஒரு மாதகாலத்துக்குள் நாட்டில் தடுப்பூசிகள் முற்றாகப் போடப்பட்டுவிடும். அதன்பின்னர் கொரோனா தொடர்பில் அச்சப்படத்தேவையில்லை என்பதாகவே அவர் சிந்திப்பதாகத் தெரிகிறது. அதற்கான நியாயப்பாடாகவே தற்போது இறந்தவர்கள் தடுப்பூசி போட்டுக்கொள்ளாத அறுபது வயதுக்கும் அதிகமான வயதினை உடையவர்கள் என்ற தெளிவுபடுத்தல் அமைகின்றது.

இதுபோலவே நாட்டினை உடனடியாக முடக்காவிடின் மக்கள் வீதிகளிலேயே செத்துமடியும் அபாயம் ஏற்படும் என்று எதிர்க்கட்சியினரும் பொருளாதாரத்தினை மட்டும் சிந்தித்து மக்களின் சுகாதாரப்பிரச்சினையினைக் கருத்தில் கொள்ளாது விடக்கூடாது என ஜே.வி.பி கட்சியினரும் நாட்டை முடக்காதுவிடின் வைத்தியசாலைகளில் ஏனைய சிகிச்சைப்பிரிவு முடங்கும் நிலை ஏற்படும் என்றும் இலங்கை மருத்துவ சங்கத்தின் தலைவர் விஷேட மருத்துவ நிபுணர் பத்மா குணவர்த்தனவும் தெரிவித்திருக்கின்றார்கள்.

இந்நிலைமைகளைக் கருத்தில் கொள்ளும் போது நாடு எத்தகைய பாரிய நெருக்கடிக்குள் இருக்கின்றது என்பதனையும் தற்போது நாட்டிற்குப் பொது முடக்கும் அவசியம் என்பதும் புரிந்துகொள்ளும்படியாக உள்ளது. ஆனாலும் அரசு அதற்கெல்லாம் செவிசாய்த்து வருவதாகத் தெரியவில்லை. அரசின் நிலைப்பாட்டைப் பார்க்கும்போது முத்தொட்டுவ ஆனந்த தேரர் குறிப்பிட்டது போல வெதுப்பகங்களில் உள்ள போறணைகளில்தான் சடலங்களை தகனம் செய்யவேண்டி வரும் போல தெரிகிறது.

நாட்டை முடக்கவேண்டாம் நாங்கள் பொறுப்பாக நடந்து கொள்கின்றோம் என்று மக்கள் கோரியதாக இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்ததாக செய்தியொன்று அண்மையில் அறியக் கிடைத்தது. அது உண்மையோ பொய்யோ, அரசின் இயலாமையினைக் கருத்தில் கொண்டு மக்கள் பொறுப்பானவர்களாக நடந்து கொண்டே ஆகத்தான் வேண்டும். அதுதான் மக்கள் தங்களைப் பாதுகாப்பதற்குரிய ஒரே ஒரு வழிமுறையாகத் தோன்றுகிறது.






# தீர்வு கிட்டும்வரை போராட்டம் தொடரும்
## ஆசிரியர்களின் போராட்டம் தீவிரமடைகிறது

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலையில், 24 வருடங்களாகத் தீர்வினை எந்தவொரு அரசாங்கமும் தராது ஏமாற்றி வந்திருக்கும் சூழலிலேயே தாங்கள் இவ்வாறானதொரு நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாக போராட்டத்தில் ஈடுபடுபவர்கள் தெரிவிக்கின்றனர்.


இவ்வாறு ஆசிரியர்கள் தொடர்ந்து பணிப்புறக்கணிப்பை மேற்கொண்டு வந்தால் மாணவர்களின் கல்வியில் பாரிய பாதிப்பு ஏற்படும் அச்சம் நிலவுவதாக மக்களிடமிருந்தும் அரசதரப்பினைச் சேர்ந்தவர்களிடமிருந்தும் எதிர் விமர்சனங்கள் தொடர்ந்த வண்ணமே இருக்கின்றன. பிள்ளைகளின் கல்வியில் எந்தவொரு பாதிப்பும் நிகழ்வதற்கு இடமளிக்க மாட்டோம் என்றும் அரசு தங்களுக்கான தீர்வினை தந்ததும் மாணவர்களுக்குரிய மேலதிக வகுப்புக்களை ஒழுங்கமைத்து அவர்கள் இழந்த கல்வியினை வழங்குவோம் என்றும் காலங்காலமாக மாணவர்களின் கல்வி பாதிக்கப்படுகின்றது என்று சொல்லிச் சொல்லியேதான் ஒவ்வொரு அரசும் ஆசிரியர்களை ஏமாற்றி வருவதாகவும் ஆசிரியர் தரப்பினர் தமது எதிர்வாதங்களை முன்வைத்து வருகின்றனர். பாடசாலை திறக்காத நிலையில் இணைய வழிக்கற்பித்தல் நடவடிக்கையானது, கல்வி எல்லோருக்கும் போய் சேர்வதில்லை, என்பதனை வெளிப்படுத்துகிறது. இங்கு கைத்தொலைபேசியை வாங்கும் இயலுமை இல்லாதவர்களின் கல்வி, பாதிப்படைகின்றது. இதனால் எப்போதும் ஏதோ ஒரு தரப்பினர் கல்வியைப் பெறமுடியாதவர்காளகவே இருக்கின்றனர் என்றும் அவர்களுக்குரிய கல்வியையும் சேர்த்தே வழங்குவது தொடர்பில் சிந்திக்க வேண்டும் என்றும் தெரிவிக்கின்றனர்.

நாட்டில் பலபாகங்களிலிருந்தும் அதிபர், ஆசிரியர்கள் ஒன்றாக இணைந்து கற்பித்தல் சார்ந்த செயற்பாடுகள் அனைத்திலிருந்தும் விலகியிருப்பதாக அறிவித்து வரும் நிலையில் போராட்டம் தீவிரமடைந்து வருவதாக உணர முடிகின்றது. 'நாங்கள் சம்பள உயர்வைக் கேட்கவில்லை எங்களுக்குத் தரவேண்டிய சம்பளத்தினைத்தான் கேட்கிறோம்" என்று தமது பக்க நியாயப்பாட்டினை ஆசிரியர்கள் முன்வைக்கின்றனர். இன்றைய பொருளாதார நெருக்கடி நிலையில் ஆசிரியர்களுக்கான சம்பளத்தினை அதிகரித்துக் கொடுப்பதற்கு அரசினால் முடியாது என்று ஆளும் தரப்பினைச் சேர்ந்தவர்கள் கருத்து தெரிவித்திருக்கின்றனர். 2023 ஆம் ஆண்டுக்குப் பின்னர்தான் சம்பள அதிகரிப்பினை உயர்த்துவது தொடர்பில் பேசமுடியும் என்பது ஆளும் தரப்பினரின் கருத்தாக இருக்கையில் தங்களுக்குத் தரவேண்டிய சம்பளத்தினை எப்போதென்றாலும் தரலாம் ஆனால் அதற்குரிய வாக்குறுதிகளை எழுத்து மூலம் தரும்படியே தாம் அரசினைக் கோருவதாக ஆசிரியர்கள் தெரிவித்திருக்கின்றனர். ஆனால் அதற்கான சரி யான பதிலை வழங்காது அரசு மௌனம் காத்து வருவதோடு, ஏற்கனவே அரசினால் நியமிக்கப்பட்ட சம்பள முரண்பாடு தொடர்பில் ஆராயும் குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட விடயதானங்கள் இருக்கும் நிலையில் கடந்த இரண்டு நாட்களுக்கு முன்னர் பாராளுமன்றத்தில் மீண்டும் ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது. இது வெறும் கண்துடைப்பு அல்லது போராட்டத்தினை இடை நிறுத்துவதற்குரிய தந்திரோபாய முன்னகர்வாகக் கருதப்படுகின்றது. இது பெரியவர்கள் குழந்தைகளுக்கு மிட்டாய்களைக் கொடுத்து அவர்களைச் சமாதானப்படுத்தும் செயல்களுக்கு ஒத்தது என்ற விமர்சனமும் ஆசிரியர் தரப்பில் முன்வைக்கப்பட்டுள்ளது.

எது எப்படியோ, நிலைமையைச் சரியாகக் கணிக்கும் போது அரசு ஆசிரியர் சார்பில் சிந்தித்து செயற்படுவதாகத் தெரியவில்லை. அவர்களுக்கான தீர்வினை முன்வைப்பதற்கான முயற்சியினை எடுப்பதாகவும் தெரியவில்லை. ஆனால் ஆளும் தரப்பும் சரி, எதிர்த் தரப்பும் சரி ஆசிரியர்களின் போராட்டம் நியாயமானது என்று சொல்லும் நிலைமை அவதானிப்புக்குரியது. ஆனால் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் அரசுக்கு இயலாமை இருப்பதாகத் தெரிகின்றது. இருந்தாலும் மாணவர்களின் கல்வி, நாட்டின் பேண்தகு அபிவிருத்தி என்பவற்றினை வளர்த்தெடுப்பதற்கு ஆசிரியர்கள் கற்பித்தல் செயற்பாட்டினை மேற்கொள்ள வேண்டும். அதற்கு அரசு அவர்கள் பக்கம் தங்களது பார்வையினைத் திருப்ப வேண்டும். ■




## வர்ணம் தீட்டுங்கள் பரிசை வெல்லுங்கள்



முழுப்பெயர்:- ..........................................................................

தரம்:- ..................................................................................

கற்கும் பாடசாலை:-...................................................................

விலாசம்:- ..............................................................................

..............................................................................

தொலைபேசி இலக்கம்:-.............................................................

**பிள்ளைகளே!**

**உங்கள் எண்ணங்களிலிருந்து வண்ணங்கள் ஆக்கி எமக்கு அனுப்புங்கள். அழகான வண்ணத்துக்குப் பரிசும் கௌரவமும் உண்டு. நீங்கள் படத்துடன் இக்கூப்பனையும் நிரப்பி அனுப்புங்கள். அழகான வண்ணப்படத்திற்குரிய பரிசை உங்களுக்காக வாண்டு மாமா தருகிறார்.**

*அனுப்பவேண்டிய இறுதித் திகதி* ***18.08.2021***

# புத்திசாலி ஆடு



ஒரு ஆடு காட்டு வழியாகச் சென்று கொண்டிருந்தது. அந்த ஆட்டினை ஓநாய்க் கூட்டம் கண்டது. ஓநாய் ஒன்று ஆட்டிடம் சென்று "நீ ஏன் தனியாக வந்தாய். நான் உன் நண்பன் சொல்கிறேன். திரும்பிச் செல். உன் கூட்டத்தைச் சேர். இங்கே கொடிய மிருகங்கள் உள்ளன" என்று கூறியது.

ஆடு இருப்பிடம் நோக்கிச் செல்லத் தொடங்கியது. "ஓநாய் எனக்கு எதிரி அல்லவா? ஏன் என்னைக் கொல்லவில்லை" என ஆடு யோசித்தது. திரும்பிப் பார்த்தது. தூரத்தில் ஓநாய்க் கூட்டம் பின் தொடர்வதைக் கண்டது.

தன்னை வைத்துத் தனது கூட்டத்தை ஓநாய்கள் வேட்டையாடத் திட்டமிடுவதை ஆடு அறிந்தது. ஒரு தந்திரம் செய்தது. பற்றைகளுக்குள் ஒளிவதும் வெளிவருவதுமாகச் சென்றது. கிணறு ஒன்றை அடைந்தது. பெரிய கல்லை உருட்டி விட்டது. கல் கிணற்றுக்குள் விழுந்தது. ஆடு கிணற்றுக்குள்ளே குதித்ததாக ஓநாய்கள் நினைத்தன.

அவை ஒவ்வொன்றாகக் குதித்தன. நீரில் மூழ்கி இறந்தன. தன் கூட்டம் காப்பாற்றப்பட்டதை நினைத்து ஆடு மகிழ்ந்தது. இருப் பிடம் போய்ச் சேர்ந்தது.


**கஜானா வசந்தகுமார்**
தரம் -09
யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை



# கிளி

பச்சை பச்சை கிளியாம்
பஞ்சு போன்ற கிளியாம்
செக்கச் சிவந்த அலகால்
பேசும் நல்ல கிளியாம்
சிறகை விரித்து பறந்து
உலகைச் சுற்றி வருமாம்

**பி.அக்ஷையா**



**கடந்த வர்ணம் தீட்டும் போட்டியில் பரிசை வெல்பவர்**
**செல்வன் உ.ஆஹர்சன்**
**தரம் - 02**
**யா/புனித ஜோன்பொஸ்கோ மகாவித்தியாலயம்**

### பாராட்டு பெறுபவர்கள்

| | |
|---|---|
| **சி.ஜான்சி**<br>தரம் - 07<br>யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி | **க.கிரிசானா**<br>தரம் - 08<br>யா/தும்பளை சிவப்பிரகாசா மகா வித்தியாலயம் |
| **க.சுவர்ணிகா**<br>தரம் - 03E<br>யா/புனிதஜோன் பொஸ்கோ ம.வி | **மு.கோகனன்**<br>தரம் - 07B<br>யா/இந்துக் கல்லூரி |
| **ந.நிரந்தனா**<br>தரம் - 06<br>யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி | **சி.காவெப்**<br>தரம் - 09<br>யா/வேலாயுதம் மகா வித்தியாலயம் |

# உலகின் மிகச் சிறந்த சுமைதாங்கி



படத்தில் காணப்படுகின்ற இந்தப் பூச்சிதான் உலகத்திலேயே அதிகமான எடையைத் தூக்கவல்லது!

இந்தப் பூச்சியின் பெயர் டயபாலிக் அயர்ன் க்ளாட் பீட்டில்! இந்தப் பூச்சியைப் பற்றிய தகவல் ஆச்சரியமாக இருக்கும்! இந்தப் பூச்சி ஒரு சின்ன வேர்க்கடலை அளவே இருக்கும்! ஓக் மரங்களின் மரப்பட்டைக்கு அடியிலே ஆசையாய் வசிக்குமாம்! இது மிகவும் சின்னப் பூச்சி! "மூர்த்தி சிறிதாய் இருந்தாலும் கீர்த்தி பெரிது" என்று சொல்லுவது இதற்கே மிகப் பொருத்தம்.

உதாரணமாக ஒரு கார் இந்தப் பூச்சியின் மேல் ஏறினாலும் அதற்கு ஒன்றும் ஆகாது. கார் சென்ற பின் ஒன்றுமே நடக்காதது போல ஜாலியாக நடை போடுமாம்!

இந்தப் பூச்சிக்கு தன்னுடைய எடையைப் போல சுமார் 39,000 மடங்கு எடையைத் தாங்கும் சக்தி இருக்கிறதாம்! இந்த அளவுக்கு இந்தப் பூச்சிக்கு எப்படி பலம் இருக்கின்றது? அந்த ரகசியம் டையபாலிக் பூச்சியின் ஓட்டு அமைப்பில் இருக்கின்றது. இதை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளார்கள்.

சாதாரணமாக வண்டுகளின் மேல் ஓட்டில் குளுக்கோஸ், புரதம் போன்ற உயிரிப் பொருள்களின் கலவையான கைட்டின் (CHITIN) என்ற பொருள் இருக்கும். டயபாலிக் பூச்சிக்கும் அதே கலவைதான்! ஆனால் ஒரு வித்தியாசம்! புரதத்தின் அளவு சுமார் பத்து சதவிகிதம் கூடுதலாக இருக்கின்றதனாலே ஓடு, ஓர் இரும்புக் கவசம் போல் மிகவும் உறுதியாக இருக்கும்! பூச்சியின் இரண்டு பாகங்கள் விறைப்பாக புற ஓடு இருக்கும்! இந்தப் பிணைப்பு, அழுத்தம் ஏற்படும்போது சற்று இளகி, அதேசமயம் உறுதிபடவும் வண்டைப் பாதுகாக்கின்றது!

மேலும் உறுதியான பொருள்களைத் தயாரிக்க இந்த ஆராய்ச்சி, விஞ்ஞானிகளுக்கு மிகவும் உதவியாக இருந்ததாம்! டயபாலிக் அயர்ன் க்ளாட் பூச்சியை உலகத்திலே யாராலும் தேய்த்து அழிக்க முடியாது! ஆனால் பார்க்கக் கொஞ்சம் பயமாகவே இருக்கும்!



**சிறுவர் பகுதிக்கான உங்கள் சொந்த ஆக்கங்களை எங்களுக்கு உடனே அனுப்பி வையுங்கள்**

**தீம்புனல்**
**கனகசபை கட்டடத் தொகுதி**
**பருத்தித்துறை வீதி, நெல்லியடி.**
தொ.பே.: 021 226 2564

இப் பத்திரிகையானது பருத்தித்துறை வீதி, நெல்லியடியில் அமைந்துள்ள Needa media corporation (PVT) LTD இனால் 14.08.2021 அன்று ஜெயசிறி அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது,